எங்கெங்கு காணினும் சக்தி சக்தியடா

# சக்தி பெண்ணிதழ்

பெண்கள் மேம்பாட்டு பன்மொழி மின்னிதழ்

மலர் -2 இதழ்-11| ஆகஸ்டு 2026| நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் செ. ராஜேஸ்வரி

**குரல்களின் சிற்பி**
முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

**பெண்ணின் ஆளுமை**
எழுத்தாளர் ஜெ. மைதிலி

**யாரும் பார்க்கவில்லை அப்பாடா**
எழுத்தாளர் சம்சுல் ஹுதா பானு

**பேரழகி**
கவிஞர் மஞ்சு

**பெண்ணும் எழுத்தும்**
திருமதி N.S பிரேமா

**கருவறை**
கவிஞர் இரா. சைலஜா சக்தி

**இஸ்லாமியப் பெண் ஆளுமைகள்**
எழுத்தாளர் சம்சுல் ஹுதா பானு

**வெட்க வண்ணம்**
கவிஞர் நெல்லை ஆனந்தி

**தமிழ்ப்பெண் ஆளுமைகள் – 2**
எழுத்தாளர் இரா. சைலஜா சக்தி

**ஹைக்கூ கவிதைகள்**
Dr ஜலீலா முஸம்மில்

**கிறிஸ்துவப் பெண் ஆளுமைகள்**
லயன் MJF வெங்கடேசன்

அட்டைப்படம்: **இரா. சைலஜா சக்தி**
கவிஞர், நாவலாசிரியர், கட்டுரையாளர், சிறுகதை எழுத்தாளர், மேடை பேச்சாளர்

எங்கெங்கு காணினும் சக்தியடா

மலர் - 2 இதழ் - 11 | ஆகஸ்ட் 2026

நிறுவனர்& தலைமைப் பதிப்பாசிரியர் :
முனைவர் கெ. ராஜேஸ்வரி

சிறப்பாசிரியர் :
முனைவர் தேமொழி (USA)

பொறுப்பாசிரியர் :
முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன் (சிட்னி)

துணை ஆசிரியர் :
கவிஞர் மேனகா நரேஷ் (NJ)

செயற்கை நுண்ணறிவு படங்கள் :
முனைவர் திருமதி கெ. ராஜேஸ்வரி
S. ஜெஸிலெட் MA., NET.,

நூலாக்கம்:
S.ஜெஸிலெட் MA., NET.,

உள்ளடக்கம்

**அவள் ஒரு அரசி** 3
ட. இமயா (கவிதை)

**ஆடி மாதத்தில் அம்மன் வழிபாடும் விரதங்களும்** 4
முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி (கட்டுரை)

**சுசித்ரா கவிதைகள்** 10
கவிஞர் சுசித்ரா (கவிதை)

**From Silver Screen to Secretariat** 11
The Psychology of Democratic Leadership - The TEL Model

**பெண்ணின் ஆளுமை** 19
ஜெ. மைதிலி (கட்டுரை)

**யாரும் பார்க்கவில்லை அப்பாடா** 24
கவிஞர் சம்சுல் ஹுதா பானு (கவிதை)

**அன்பின் அர்ப்பணிப்பு – பெண்ணின் பராமரிப்பு** 25
ட. இமையா (கட்டுரை)

**பெண்மை என்னும் பேராற்றல்** 27
பு.மீனாட்சி(கட்டுரை)

**வெட்க வண்ணம்** 31
நெல்லை அன்புடன் ஆனந்தி, அமெரிக்கா(கவிதை)

**வரலாற்றில் பெண்ணின் நிலை** 32
மு. ஜன்னத்துல் பிர்தௌஸ்(கட்டுரை)

**கவிஞர் மானசீகன்** (கவிதை) 35

**பெண்ணும் எழுத்தும்** 36
திருமதி N.S பிரேமா (விமர்சனம்)

**சக்தி விருது வழங்கும் விழா** 40

**அம்மா** 45
கவிஞர் அழகை ஹைருன்நிஸா (கவிதை)

**தமிழ்ப்பெண் ஆளுமைகள் – 2** 46
எழுத்தாளர் இரா. சைலஜா சக்தி (நேர்க்காணல்)

**பேரழகி** 52
கவிஞர் மஞ்சு (கவிதை)

**ARANYANI** 53
Vijeni

**ஹைக்கூ கவிதைகள்** 61
கவிஞர் Dr ஜூலீலா முஸம்மில் (கவிதை)

**வேண்டுதல்** 63
எழுத்தாளர் சசிகலா விஸ்வநாதன் (சிறுகதை)

**ஆளுமை என்னும் அழகிய கீரிடம்** 67
கவிஞர் பி.எம்.அயனுல் அர்சியா (கவிதை)

**கன்ஸா அம்மையார்** 68
எழுத்தாளர் சம்சுல் ஹுதா பானு (கட்டுரை)

**வாழ்வமுதம் தா** 72
முத்தமிழ் விரும்பி (கவிதை)

**பெண்ணும் எழுத்தும்** 73
கா. ஹபீப் முகமது (விமர்சனம்)

**கருவறை** 76
இரா. சைலஜா சக்தி (கவிதை)

**தைரிய லக்ஷ்மி** 77
வை.மு.கோதைநாயகி அம்மாள் (கதை)

**அண்டத்தை ஆளும் ஆளுமை** 84
ஜெ.மைதிலி (கவிதை)

**கார்னிலியா சொராப்ஜி** 85
லயன் MJF வெங்கடேசன் (கட்டுரை)

**தாய்ப்பால் தானம்** 90
கவிஞர் மாலதி இராமலிங்கம் (கட்டுரை)

**சக்தி விருதுகள்** 94

**குரல்களின் சிற்பி** 99
முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி (கவிதை)

**பெண்ணும் எழுத்தும்** 100
கவிஞர் மாலதி இராமலிங்கம் (விமர்சனம்)

**Shakthi Pennithazh**
**Printed and Published by:**
**E. Satish Rajkumar, Advocate**
3/422, Dinamani Nagar,
Madurai, Tamil Nadu – 625018, India.
**Ph:** +91 78711 23226, +91 70109 97630

கட்டுரைகளை அனுப்ப:
sakthipennithazh@gmail.com
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில் இடம்பெற்றுள்ள கருத்துகள் அனைத்தும் கட்டுரையாளர்களின் கருத்துகளாகும். அவற்றுக்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

# ஆடுவோமே - பள்ளுப் பாடுவோமே

கவிஞர், எழுத்தாளர், இதழாசிரியர்,
விடுதலை போராட்ட வீரர், சமூக சீர்திருத்தவாதி,
மகாகவி பாரதியார்

*ஆடுவோமே - பள்ளுப் பாடுவோமே*
*ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று!*

*பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே - வெள்ளைப்*
*பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே - பிச்சை*
*ஏற்பாரைப் பணிகின்ற காலமும் போச்சே - நம்மை*
*ஏய்ப்போருக்கு ஏவல்செய்யும் காலமும் போச்சே!*

*எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு - நாம்*
*எல்லோரும் சமமென்பது உறுதியாச்சு;*
*சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே - இதைத்*
*தரணிக்கெல்லாம் எடுத்து ஓதுவோமே!*

*எல்லோரும் ஒன்றென்னும் காலம் வந்ததே - பொய்யும்*
*ஏமாற்றும் தொலைகின்ற காலம் வந்ததே;*
*இனி நல்லோர் பெரியரென்னும் காலம் வந்ததே - கெட்ட*
*நயவஞ்சக் காரருக்கு நாசம் வந்ததே!*

*உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்*
*உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்;*
*விழலுக்கு நீர்பாய்ச்சி மாய மாட்டோம் - வெறும்*
*வீணருக்கு உழைத்து உடலம் ஓய மாட்டோம்!*

*நாமிருக்கும் நாடு நமதுஎன்ப தறிந்தோம் - இது*
*நமக்கே உரிமையாம் என்ப தறிந்தோம்;*
*இந்தப் பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம் - பரி*
*பூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்!*

# அவள் ஒரு அரசி

L. இமையா
Queen Mary's College,
Chennai-04

*பெண்ணே! உன்னை நீயே செதுக்கி கொள்...*

*உளிகொண்டல்ல வலி கொண்டு...!*

*உடன் இருப்பவர் எவரும் தோள் கொடுப்பார்,*

*தூக்கி விடுவார், என்று நீ உன் கனவுகளை சிதைக்காதே..!*

*பழி சொல்லும் உலகமடி...*

*வழி கேட்டு நில்லாதே...!*

*இவர்கள் இப்படித்தான் என்று ஓரிரு துளி*

*விழி நீர் விட்டெறிந்து விட்டு*

*எழுந்து நில்...*

*துணிந்து செல்...!*

*பரந்த இவ்வுலகில் உனக்கான கதவுகள் எங்கோ திறந்து இருக்கும்..!*

*ஆறுதலில் தாயாக...*

*அரவணைப்பில் சேயாக...*

*அனுசரிப்பில் மருமகளாக...*

*அர்ப்பணிப்பில் மனைவியாக...*

*பொறுமையின் சிகரமாக...*

*போராடுவதில் போராளியாக...*

*கியாகக்கின் கலைமகள் அவள்...*

# ஆடி மாதத்தில் அம்மன் வழிபாடும் விரதங்களும்

**மொழிபெயர்ப்பாளர் , எழுத்தாளர்,**

**முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி**

தேவர்களின் பகல்பொழுது முடியும் தருணமாக ஆடி மாதம் அமைகிறது. இம்மாதம் தேவர்களின் இருளும் ஒளியும் அற்ற அந்திப் பொழுதாகும் அவர்களின் சந்தியா காலமானதால் இம்மாதத்தை எந்த நல்ல காரியமும் செய்யத் தகாத பீடைமாதமாகக் கருதுகின்றனர்.

அதனால் அம்மன் வழிபாடுகள் மற்றும் சிறப்பு விரதங்கள் மூலமாக இம்மாதத்தைச் சிறந்த மாதமாக மாற்ற முனைகின்றனர். மார்கழி மாதமும் இதைப் போலவே தேவர்களின் அதிகாலைப் பொழுதாக நம்பப்படுவதால் அந்த மாதத்திலும் வேறு எந்த உலக மயமான விசேஷங்களை நிகழ்த்தாமல் இறைவனுக்குப் பிரீதியான வழிபாடுகளை மட்டும் செய்கின்றனர்.

**ஆடி மாதமும் பெண்களும்**

ஆடி மாதம் பெண்களுக்கு உகந்த மாதமாக அம்மன் கோயில்களில் பல விழாக்கள் நடைபெறுகின்றன. மதுரை மீனாட்சி அம்மனுக்கு மட்டுமான முளைக்கொட்டு விழா நடைபெறும் அன்னை மீனாட்சி ஆடி வீதியில் தினம் வலம் வருவாள். சொக்கர் இதில் பங்கேற்பதில்லை. சங்கரன் கோயிலில் ஆடி தபஸ் நடக்கும் அம்மன் ஒற்றைக் காலில் தவம் இருந்து சிவ பெருமானை சங்கர நாராயணர் வடிவில் தரிசிப்பாள்.

பெண்கள் தங்கள் வீடுகளில் இறந்து போன கன்னிப் பெண்கள் மற்றும் சுமங்கலிப் பெண்களை வழிபட்டு அன்னதானம் வஸ்திர தானம் செய்யும் மாதம் ஆடி மாதம் ஆகும். சுமங்கலிகள் கௌரி விரதம் வரலட்சுமி நோன்பு, கோகிலா விரதம், ஜெய பார்வதி விரதம், வராகி ஏகாதசி, குஷ்ய ஏகாதசி என பல பெயர்களில் விரதம் இருந்து இறைவனை வணங்கும் மாதம் ஆடி மாதம். சகோதர நலம்

காட்டும் பூரி ஜெகநாத் ரத யாத்ரா நிகழும் மாதம் இதுவாகும். பால்கி யாத்ரா என்று கண்ணனுக்கு [விதோபாவுக்கு] யாத்ரா நடைபெறும் மாதம் இது.

**அவ்வை நோன்பு**

ஆடி மாதம் பெண்கள் மட்டுமே செய்யும் அவ்வை நோன்பு தென் மாவட்டங்களில் பிரசித்தி பெற்றது. இது நள்ளிரவு தொடங்கி அம்மனின் கதை சொல்லி உப்பு போடாத மாவில் பல் உருவங்களைச் செய்து வணங்கி ஆண்களுக்குக் காட்டாமல் அவற்றைப் பெண்கள் மட்டுமே உண்பது வழக்கம். இதை அவ்வையார் நோன்பு என்றும் கூறுவர். அசந்தால் ஆடி, தப்பினால் தை, மறந்தால் மாசி என்ற பால்மொழி இந்த மாதங்களில் மட்டும் இவ்வழிபாடு நடப்பதைக் குறிக்கின்றது.

**வராகி நவராத்திரி**

மாலை நேரத்தில் பெண்கள் மட்டும் கூட்டமாகச சேர்ந்து வழிபடும் இவ்வராகி நவராத்திரியை சில ர் குப்த ராத்திரி என்றும் வேறு சிலர் காயத்ரி ராத்திரி என்றும் வழங்குகின்றனர். இமாசலப் பிரதேசத்தில் குஹ்ய நவராத்திரி என்பர். சாகம்பரி தேவிக்கு காய்கறி, கனி வர்க்கங்கள வைத்து வணங்க வேண்டும். தினமும் நெய் விளக்கேற்றி ஒற்றை திரி தீபம் ஏற்றி வராகிக்குரிய சிவப்பு வண்ணன்த்தில் செம்பருத்தி மலர்கள் படை சிவப்பு மணி மாலை அல்லது சிவப்பு நிறத்தில் ருத்ராட்சக் கோட்டை உருட்டி ஜெபம் செய்து தச மகாவித்யா என்ற பத்து

தேவிகளையும் வணங்கி வர வேண்டும். இந்த விரதத்தின் போது சைவ உணவு மட்டுமே உண்டு சாத்விக வாழ்க்கை நடத்த வேண்டும். மனிதர்களுக்கு மட்டுமின்றி விலங்கு மற்றும் பறவைகளுக்கு அன்னதானம் செய்வது உத்தமம் ஆகும்.

**குப்த நவராத்திரி**

வராகி நவராத்திரியை சில குப்த நவராத்திரி என்பர். இதுவும் ஒரு சுமங்கலி பூஜை. ரிஷ்ய சிருங்கர் என்ற முனிவரிடம் வந்து ஒரு சுமங்கலிப் பெண் தன கணவர் தவறான செயல்களில் ஈடுபட்டு வருவதால் தனக்கும் பாவம் சேர்வதாகச சொல்லி அழுதாள். அதற்கு அம்முனிவர் நீ குப்த நவராத்திரி விரதம் இரு உன் கணவனின் பாவம் உன்னை சேராது என்றார். அவளும் அப்படியே செய்தாள். அவள் கணவனும் காலப்போக்கில் திருந்தி விட்டான். அவளும் பாவத்தில் இருந்து விடுபட்டாள். எனவே கணவனைத் திருத்த நினைப்பவர்கள் இந்த ஆடி மாதத்தில் வரும் நவராத்திரியை அனுஷ்டிக்கலாம்.

வராகி அல்லது குப்தா நவராத்திரியின் போது நகம் வெட்டக் கூடாது; முடி வெட்டக் கூடாது, யாரிடமும் கோபபடுதல் ஆகாது. மது, புகை, போதையை முற்றிலும் விலக்கிவிட வேண்டும். பகலில் உறங்கக் கூடாது. கலவி கூடாது. கருப்பு உடை உடுத்த கூடாது.. வராகி நவராத்திரி அல்லது குப்த நவராத்திரியை ஆண்கள் கடைப்பிடித்தால் அவர்களுக்கு அதிகார பதவியை வராகி வழங்குவாள். தீய சக்திகள் அண்டாது. பில்லி சூனியம் கிட்ட வராது. திருஷ்டி அற்றுப் போகும்.

**ஆடி செவ்வாய்**

ஆடி மாதத்தில் வரும் செவ்வாய் வெள்ளி ஞாயிறு ஆகிய நாட்களில் அம்மன் வழிபாடு சிறப்பாக நடப்பதைக் காணலாம். ஆடி செவ்வாய் நாக வழிபாட்டுக்கும் புற்று வழிபாட்டுக்கும் உகந்தது. நாகரம்மன் , நாகாத்தம்மன், கரு மாரியம்மன் கோயில்களில் ஆடி செவ்வாய் அன்று ஆடு சேவல் பலி கொடுத்து வழிபடுவதுமுண்டு நாகநாதர் கோயில் போன்ற பிரதிஷ்டை பெற்ற கோயில்களில் பலி கொடுக்காமல் ஆடு மற்றும் சேவல்களைக் காணிக்கையாகக் கோயிலுக்கு கொடுக்கின்றனர். கிராமங்களில் பலியிட்டு படையல் போடுகின்றனர்.

முளைப்பாரி திருவிழாவுக்கு செவ்வாய் சாற்றுதல் ஆடி செவ்வாய் அன்று நடைபெறும் முதல் செவ்வாய் அன்று விழா தொடங்குவதாக பறை சாற்றுவர்.

அடுத்த செவ்வாய் அன்று விதை இடுவர் இதை முத்து போடுதல் என்பர். மறு செவ்வாய் அன்று முளைப்பாரி எடுத்துக்கொண்டு போய் நீர் நிலைகளில் ஆற்றில் குளத்தில் கண்மாயில் கரைத்துவிடுவர்.

**ஆடிப் பௌர்ணமி**

ஆடி பௌர்ணமியுடன் தொடர்புடைய சில சிறப்பான நோன்புகள் விரதங்கள் இருக்கின்றன.. கோகிலா விரதத்தை ஆடி பௌர்ணமியில் தொடங்கி ஆவணி பௌர்ணமியில் முடிவு செய்வர். இது ஒரு மாத விரதம் ஆகும். அடுத்து இவ்விரதத்தின் வைரவர், வராக மூர்த்தி, நரசிம்மன், மகிஷாசுற மர்த்தினி ஆகியோரை வணங்கி வர வேண்டும். கௌரி விரதம் என்பது மற்ற மாநிலங்களை விட குஜராத்தில் பெரும்பான்மையான பெண்கள் மேற்கொள்ளும் விரதம் ஆகும். இவ்விரதம் ஆடி மாதத்தில் சுக்ல பட்ச ஏகாதசி அன்று தொடங்கி ஐந்து நாட்கள் தொடர்ந்து ஆடி பௌர்ணமி அன்று நிறைவு பெறும்.

ஜெயபாரதி விரதம் ஆடி பௌர்ணமிக்கு முன்னும் பின்னும் கடைப்பிடிக்கப்படும் விரதம் ஆகும். இது பெரும்பாலும் குஜராத்தில் பெண்களால் கடைப்பிடிக்கப்படுகிறது. ஆடி மாதத்தில் வளர் பிறையில் திரயோதசி அன்று தொடங்கி ஆறு நாட்கள் கடைப்பிடிக்கப்பட்டு பௌர்ணமி முடிந்து மூன்றாம் நாள் நிறைவு பெறுகிறது. பௌர்ணமிக்கு முதல் மூன்று நாள் பிறகு மூன்று நாள் கடைப்பிடிக்கப்படும் விரதம் ஆகும்.

ஆடி பௌர்ணமி அன்று ஹயகிறிவர் அவதரித்த நாள் என்பதால் அன்று வைணவத் திருக்கோயில்களில் சிறப்பு சேவை ஆராதனைகள் உண்டு.

**ஆடி மாதத்தின் ஏகாதசி விரதங்கள்**

யோகினி ஏகாதசி ஆடி மாதப் பௌர்ணமி முடிந்து வரும் கிருஷ்ண பட்ச ஏகாதசி யோகினி ஏகாதசி எனப்படும் அன்று விரதம் இருந்தால் தோல் நோய் விலகும் என்பது நம்பிக்கை. சதுர் மாஸ்ய விரதம் என்பது நான்கு மாதங்கள் நடத்தும் விரதம் ஆகும். விஸ்வகர்மா தேவசகாயினி ஏகாதசி என்ற ஆடி மாத சுக்லபட்ச ஏகாதசியில் உறங்கப் போய்விடுவார். நான்கு மாதம் கழித்து பிரபோதினி ஏகாதசி அன்று கண் விழிப்பார். இந்த விரதம் ஆண் பெண் என எல்லோராலும் கடைப்பிடிக்கப்படுகிறது.

**ஆடி அமாவாசை**

அமாவாசை என்பது நீத்தார் கடன் தீர்க்கும் நாள் அன்று இருட்டு என்பதால் அதை இறந்தோருடன் தொடர்பு படுத்தியது ஆதி மனிதனின் மனம். இன்று வரை அதில் இருந்து மனித எண்ணங்கள் மாறவில்லை அக்கருத்தும் மறையவில்லை. கதிரவன் தெற்கே திரும்பும் ஆடி மாதத்து அமாவசை, நடுவில் நிற்கும் ஐப்பசி மாதத்து அமாவாசை, வட திசை திரும்பும் தை மாதத்து அமாவாசை ஆகிய நாட்களில் இறந்தோர் இப்புமிக்கு வருவர் என்று நம்புவதால் அன்று அவர்களுக்கு படையலிட்டு திருப்தி செய்து அனுப்ப்புகின்றனர். கடலில் நீராடுதலும் கடற்கரையில் வைத்து நீத்தார் கடன் தீர்த்தலும் உண்டு. ஆடி அமாவாசை அன்று மலை ஏறுவதும் சிறப்பாகக் கருதப்படுகிறது. சதுரகிரி மலை போன்றவற்றில் பௌர்ணமியை விட அமாவாசை அன்றிரவு மலையேறுவது சிறப்பான நிகழ்வாகும்.

ஆடி அமாவாசை அன்று மகாபாரதப் போருக்கு முன்பு அரவானைப் பலி கொடுத்த நாள் என்பதால் சேலம் மாவட்டத்தினர் அரவானின் தலையைக் குறிக்கும் வகையில் ஒரு தேங்காயை எடுத்து அததேங்காயின் மூன்று கண்களைத் திறந்து அதற்குள் சக்கரை பொரிகடலை தேங்காய் பூ வைத்து தீயில் முழுத் தேங்காயைச் சுட்டு இறைவனுக்கு படைத்து பின்பு உடைத்து உள்ளிருக்கும் இனிப்பைத் தின்பர்.

**கேரளாவில் ஆடி**

கேரள மாநிலத்தில் ஆடி மாதத்தை கற்கடக மாசம் என்பர். இம்மாதத்தில் ராம கதை படிப்பதைபெரும் புன்யமாகக் கருதுகின்றனர். எழுத்தச்சன் எழுதிய

ஆத்யாதம இராமாயாணத்தை வீடு தோறும் வாசிக்கின்றனர். திருச்சூரில் உள்ள வடக்குனாதன் கோயிலில் ஆடி பூரம் நாள் அன்று யானைகள் அணிவகுப்பு சிறப்பாக நடைபெறும் அன்று ஆண்கள் வயிற்றில் புலி முகம் வரைந்து வருவதும் உண்டு. அன்று அங்கு நாலமபல் வழிபாடு என்று நாக்கு கோயில்களுக்கு சென்று வருகின்றனர். ஆயுர்வேத சிகிச்சை தொடங்க சிறந்த மாதம் ஆடி மாதமே என்று நம்புகின்றனர். அந்த மாதம் முழுக்க உணவுக் கட்டுப்பாட்டைப் பின்பற்றுகின்றனர்.

**ஆடி பதினெட்டாம் பேருக்கு**

ஆடி மாதம் பதினெட்டாம் நாள் காவிரி பாயும் நிலப்பகுதியில் பதினெட்டாம் பெருக்கு சிறப்பாகக் கொண்டாடப்டுகிறது. அன்று நீர்நிலைகளுக்கு வழிபாடு செய்யப்படுகிறது. தலைக் காவிரி இருக்கும் கர்நாடகததில் தென்மேற்கு மழை பெய்து காவிரியில் புது வெள்ளம் பெருக்கெடுத்து வரும் அந்நாளில் கரையில் பெண்கள் கூடி பூவும் மங்கலப் பொருட்களும் தீபமும் தண்ணிரில் விட்டு கங்கையம்மனை வணங்குவர். தாலி பெருக்கி போடுவதும் இந்நாளின் சிறப்பம்சம் ஆகும். காவிரி பாயும் மாவட்டங்களில் பெண்களிடம் இப்பழக்கம் இருந்துவருகிறது.

இவ்வாறு ஆடி மாதத்தில் பெண்களும் பெண் தெய்வங்களும் சிறப்பிடம் பெறுகின்றனர். இம்மாதம் மக்கள் நலம் வளம் காண வழிவகுக்கும் மாதமாகும். இம்மாதம் முதல் நெல் வயல்களில் வேளாண் பணிகள் விரைவு பெறுகின்றன. இனி கிராமத்துப் பெண்களுக்கு ஓய்வு என்பதே இருக்காது.

# சுசித்ரா கவிதைகள்

இருக்குமிடந் தெரியாமல்
இருந்துவிட்டுப் போகிற
பச்சைப் பாம்பின்
லாவகம் கைகூடவில்லை

நோகாமல் எய்யப்படும் அம்புக்குத்
தெளிவான இலக்காகிட
நெளியாமல் வளையாமல்
நிமிர்ந்தமரும் கேனத்தனமே
இயல்பாக வருகிறது

**Levers in daily life**

இட்லிகுண்டான் மூடியை
தேக்கரண்டி கொண்டு
ஆவியை
விடுவித்த போதும்

எதிர்க்கத் துணியாத
நொடியின் அழுத்தம்
பிழியும் எலுமிச்சையில்
சாறாக வழிந்தபோதும்

எண்ணையில் விரியும்
அப்பளம் சிவக்கும்முன்
எடுக்க
இடுக்கி பிடித்த போதும்

ஊறிய வரிகளை
அப்போதே
எழுதியிருக்க வேண்டும்

பிறகெழுத
ஒத்திவைத்ததில்
மூலைக்கொன்றாய்
ஒளிந்து கொண்டன

பலூவும்
திறனும்
ஆதாரப்புள்ளியும்...
இனி
எங்கே தேடி
எழுதுவது
பூமியைப் புரட்டிவிடும்
நெம்புகோல் கவிதையை..

# From Silver Screen to Secretariat

## The Psychology of Democratic Leadership - The TEL Model

### Chapter 2

From Political Creation to Emotional Acceptance: The Journey of Building Public Trust

“People may choose a leader with their vote but they accept a leader with their trust.”




Why do some elected leaders become deeply loved and trusted while others remain merely holders of political office?

Leadership evolves in stages. Elections create political legitimacy, but only the people can bestow emotional legitimacy. Democratic leadership becomes enduring only when citizens begin to feel that the leader genuinely understands their aspirations, shares their struggles and represents their collective hopes. The Tamil Evolutionary Leadership- TEL Model explains that this transformation occurs through a psychological partnership between the people and the leader. The people continue to observe, evaluate and emotionally connect with the leader long after the election. This process gradually creates public trust—the foundation upon which all future leadership rests.

**2.1 Political Support and Emotional Acceptance are Not the Same**

Winning an election signifies political success, but emotional acceptance is something entirely different. Political support may arise from party loyalty, campaign strategy or temporary public sentiment, whereas emotional acceptance develops only when people repeatedly experience sincerity, consistency, empathy and integrity in a leader's actions. Many leaders have secured electoral victories without earning lasting public trust, while others have gradually won the hearts of the people through dedicated service and ethical conduct. The TEL Model therefore distinguishes between political creation, which grants authority, and emotional acceptance, which grants legitimacy in the minds and hearts of the people. Political office may establish a leader, but emotional acceptance determines whether that leader becomes an enduring democratic force.

**2.2 The Development of Emotional Trust**

Trust is never created overnight, it evolves through consistent behaviour and repeated positive experiences between the leader and the people. Citizens carefully observe whether a leader honours promises, remains accessible, responds honestly during crises, accepts criticism with maturity and places public welfare above personal interest. Every decision, every public interaction and every act of service either strengthens or weakens this psychological bond. The TEL Model recognises emotional trust as the bridge that connects political authority with lasting democratic leadership. Once trust becomes deeply rooted, people begin to see the leader not merely as an elected representative but as someone worthy of their confidence and respect.

**2.3 Shared Identity: When the Leader Becomes "One of Us"**

Leadership reaches a higher stage when people no longer view the leader as a distant authority but as someone who genuinely represents their aspirations,

values and identity. This shared identity develops when leaders remain connected with ordinary citizens, understand their everyday challenges and demonstrate empathy through both words and actions.

Gradually, people begin to feel that the leader belongs to them rather than above them, creating a powerful sense of psychological ownership. The TEL Model explains that this emotional identification strengthens democratic stability because the relationship between the leader and the people becomes rooted in mutual understanding, shared purpose and collective trust rather than mere political affiliation.

**2.4 Communication: The Bridge Between Leadership and Public Trust**

Communication is far more than delivering speeches or making public announcements; it is the continuous process through which leaders build confidence, reduce uncertainty and strengthen emotional relationships with the people. Democratic leaders communicate effectively when they speak honestly, listen attentively, acknowledge public concerns and ensure that their actions consistently reflect their words.

Citizens judge not only the quality of a leader's speeches but also the sincerity behind them. Transparent communication, particularly during difficult periods, often strengthens public confidence because it demonstrates respect, accountability and integrity. The TEL Model therefore considers communication an essential psychological bridge connecting leadership with public trust.

**2.5 Emotional Acceptance: The Foundation of Future Expectations**

Once people emotionally accept a leader, they naturally begin expecting higher standards of performance, ethical governance and visionary leadership. Trust creates hope, and hope gives rise to expectations for better administration, greater transparency, social progress and responsible decision-making. These

expectations should not be viewed as burdens but as evidence of the people's confidence in the leader's ability to serve them effectively. According to the TEL Model, emotional acceptance is not the destination of leadership but the beginning of a new phase in which public expectations continue to shape and elevate the leader's democratic journey.




Trust is earned through consistent action.

Authenticity creates stronger emotional connections than popularity.

The TEL Model

People identify leaders.

People create leaders.

People guide leaders.

People sustain leaders.

Great leaders never forget the people who made their journey possible.

**Bridge to Chapter 3**

Once people emotionally accept a leader, their trust naturally evolves into expectations. The next chapter explores how emotional acceptance gives birth to public expectation, where citizens begin looking to their leader not only for representation but also for a better future, higher standards of governance and meaningful societal transformation.

## Hello CM . . .

### The People's Policy

### Park Revolution

Neighbourhood Community Park Mission

**Building Human Capital through Neighbourhood Community Parks:**

Human resources are the greatest asset of any nation. Every investment that enhances the physical, mental, emotional and social well-being of citizens contributes directly to sustainable economic development, social progress and improved quality of life. Tamil Nadu has consistently demonstrated national leadership by investing in education, healthcare, nutrition, women's empowerment and social justice. As the State progresses towards becoming one of India's leading knowledge-based and industrial economies, a new generation of public policy challenges has emerged that requires innovative and integrated solutions.

**Consequence of Change in Lifestyle:**

Rapid urbanisation, changing lifestyles and increasing dependence on digital technology have significantly altered the daily lives of children, youth and adults. Smartphones, computers and digital entertainment platforms have become indispensable for education, employment and communication. However, excessive recreational screen time, declining physical activity, shrinking public open spaces and reduced opportunities for neighbourhood interaction have created serious concerns relating to physical health, mental well-being and community life.

**To Save the Future Pillars of our Nation:**

Children and adolescents are among the most affected. Outdoor play, once an essential part of childhood, has steadily declined in many neighbourhoods. Recreational activities have increasingly shifted indoors, resulting in reduced physical fitness, weaker social interaction and greater dependence on digital devices. Similar changes have affected adults through sedentary occupations, occupational stress and lifestyle-related diseases, while senior citizens often lack safe and accessible public spaces for exercise and social engagement.

**Green Space does Great Wonders:**




Scientific evidence published by the World Health Organization (WHO), UNICEF and numerous international research institutions demonstrates that *neighbourhood parks and green public spaces contribute significantly to improved physical health, reduced stress, enhanced mental well-being, healthier childhood development, stronger social cohesion and improved environmental quality.* Parks therefore represent much more than recreational amenities—they are essential public infrastructure that supports human development and preventive healthcare.

**Development of Human Resources:**

This report proposes the establishment of the Tamil Nadu Neighbourhood Community Park Mission, a comprehensive four-year initiative designed to ensure that every citizen has access to a safe, inclusive and vibrant neighbourhood community park.

**Not only New But also Renovation:**

The Mission recommends adopting a planning benchmark of one fully functional neighbourhood community park for every 15,000 residents. Based on Tamil Nadu's estimated population of approximately 8.4 crore, the State would require around 5,600 neighbourhood community parks. Rather than relying exclusively on new construction, the Mission recommends renovating existing parks and creating new parks only in areas where significant gaps exist, thereby making efficient use of public resources and reducing land acquisition requirements.

**Development of Parks as Community Activity Centres:**

The proposed parks are. envisioned as Neighbourhood Community Activity Centres, equipped with walking and jogging tracks, children's play areas, open gyms, yoga and meditation spaces, reading gardens, senior citizens' activity zones, biodiversity gardens, rainwater harvesting systems, public conveniences, universal accessibility and community gathering spaces. These parks should serve as centres for recreation, preventive healthcare, environmental education, cultural activities and community engagement throughout the year.

**The Collaborative Governance Model:**

In this model by involving the Government of Tamil Nadu, Urban Local Bodies, Resident Welfare Associations, educational institutions, Corporate Social Responsibility (CSR) partners, non-governmental organisations and community volunteers. Through shared ownership and active public participation, neighbourhood parks can become vibrant, safe and sustainable public assets.

**Investment in Human Capital:**

The Tamil Nadu Neighbourhood Community Park Mission is not merely a proposal for developing parks. It is a comprehensive strategy for investing in human capital, promoting preventive healthcare, reducing excessive screen dependency, strengthening families, improving environmental sustainability and enhancing the overall quality of life of every citizen.

*By adopting this Mission, Tamil Nadu has the opportunity to become* *India's "State of Parks"* and establish a nationally replicable model demonstrating how investments in neighbourhood green space results in the human development.

*Just as the Green Revolution transformed agriculture this Park Revolution can transform public health, strengthen families, nurture healthier children, build resilient communities and create a greener, happier Tamil Nadu.*

# பெண்ணின் ஆளுமை

ஜெ. மைதிலி
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல்
மகளிர் கல்லூரி தன்னாட்சி
திருச்செங்கோடு

மனித குலத்தின் வரலாறு பெண்களிடமிருந்தே தொடங்கியது. என்பதுதான் முற்றிலும் உண்மை. ஆதி மனித இனத்தின் தலைமையாக பெண்தான் இருந்து வழி நடத்தினார். தனக்குரிய ஆணை தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையும் அவளிடம் இருந்தது. காலங்கள் மாற மாற மாற "விழித்துக்" கொண்ட ஆண்களால் தான் அவளது தலைமை பொறுப்பு தட்டிப் பறிக்கப்பட்டது.

ஆளுமை திறன் என்பது ஒரு சிக்கலான பிரச்சனையில் மனம் தடுமாறாது அதை தீர்க்க முயற்சிப்பதும், கை மீறிப் போய்விட்ட விஷயங்களைத் தடுமாறாமல் கையாளுவதும் தான். இந்த விஷயத்தில் ஆண்களை விடப் பெண்கள் தான் அதிகம் திறமை வாய்ந்தவர்கள். இந்த ஆளுமைத்திறன் ஆண்களுக்கு பெரும் சவாலாக இருந்ததில் மெதுவாக பெண்களின் தலைமை பொறுப்பை கையகப்படுத்திக் கொண்டு அவர்களுக்கு நிர்வகிக்கும் திறன் இல்லை, ஆட்சி செய்யும் திறமை இல்லை, என்றெல்லாம் தொடர்ந்து அவர்களின் மூளை வழியாக மரபணுக்களில் புகுத்தி விட்டார்கள். பெண்களும் இதை நம்பத் தொடங்கி விட்டார்கள் என்பதுதான் பெரும் சோகம்.

படிப்புக்கும் ஆளுமைத் திறனுக்கும் சம்பந்தம் இல்லை. அது அவரவர் வளர்ந்த விதத்திலும், எதிர்கொண்ட பிரச்சனைகளிலும் தான் மேம்படுகிறது. இந்த ஆளுமை உணர்வு தான் மேம்படுகிறது. இந்த ஆளுமை உணர்வு தான் சாதாரண மனிதர்களில் இருந்து தலைவர்களை தனித்துக் காட்டுகிறது. மற்றவர்களை கட்டுப்படுத்துவது மட்டுமல்ல ஆளுமை தன்னைத் தானே முதலில் கட்டுப்படுத்துபவர்களே மற்றவர்களையும் எளிதாகக் கட்டுப்படுத்துகின்றனர். அந்த வகையில் பெண்கள் தன் ஆசைகளையும் விருப்பங்களையும் ஒடுக்குவதில் வல்லவர்கள். ஆனால், ஆண்கள் எளிதில் சலனப்படும் இயல்புடையவர்கள்

.ஆண்கள் மாங்கு மாங்கு என்று வேலை செய்தாலும் பெண் தான் அவற்றை ஒழுங்குப்படுத்தி நிர்வகிக்கிறாள். ஆதியில் ஆண்கள் தான் வேட்டைக்கு போய் உணவு கொண்டு வந்தார்கள் என்றும். பெண்கள் வீட்டில் இருந்து பயிரிட்டு விவசாயம் கண்டறிந்தார்கள். என்றும் காலங்காலமாக சொல்லப்பட்டு வந்ததைச் சற்றே மாற்றிப் போட்டு இருக்கிறது கடந்த வருடத்தின் கண்டுபிடிப்பு.




Image source:
https://www.science.org/doi/10.1126/sciadv.abd0310

*2020* ஆம் வருடம் நவம்பர் மாதம் நாலாம் தேதி தென் அமெரிக்காவில் உள்ள ஆண்டுஸ் மலையில் *9000,* வருடங்களுக்கு முந்தைய ஒரு சடலம் கண்டறியப்பட்டது. சோதனைக்கு உட்படுத்தியதில் அது ஒரு பெண்ணின் உடல் என்றும் வேட்டை அவளது தொழில் என்றும் அறிய முடிந்தது. இதன் மூலம் ஆண்கள் மட்டுமே வெளியே வேட்டையாடினார்கள். பெண்கள் வீட்டோடு இருந்து உணவு சேகரித்தார்கள் என்ற கருத்து மாறியது.

இந்த ஆய்வினை டாவீசில் யு எஸ் ஏ உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழக ஆய்வாளர்கள் செய்திருக்கின்றனர். இது தொடர்பான ஆய்வு கட்டுரை ஃபீமேல் ஹண்டர்ஸ் ஆப் தி இயர்லி அமெரிக்காஸ் என்ற தலைப்பில் நவம்பர் *4* பேதியிட்ட இன்சைன்ஸ் அட்வான்ஸ் ஆய்விதழில் வெளியாகி இருக்கிறது. பெண் என்றாலே

மெல்லியளாள் என்று பொது பார்வை இருக்கிறது. ஆனால், ஆணை விட வலுவானவள் என்ற விஷயத்தை யுகங்களாக மறைத்ததில் தான் ஆண்களின் சாமர்த்தியம் வெளிப்படுகிறது. மனதையும் எண்ணங்களையும் வலுவிழக்கச் செய்தாலே போதும். இயல்பாகவே உடலும் வலுவிழக்கும் என்ற உளவியல் ரீதியான தாக்குதலை தான் ஆண்கள் தொடுத்திருக்கிறார்கள். சங்க கால பெண்கள் படிப்பறி உடன் திகழ்ந்தார்கள்.

அவ்வையார், வென்னி குயத்தியார், வெள்ளிவீதியார், இளவயிணி, பாரி மகளிர், காக்கை பாடின நற்செல்லை இன்னும் எத்தனையோ மகளிர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர். இலக்கியங்களில் சிறந்து இருந்தனர். பெண்களின் பெருமை ஓங்கி இருந்தது. என்றாலும் பிற்காலத்தில் வந்த ஆண்கள் பெண்கள் முடக்க முதலில் கையில் எடுத்தது அவர்களது கல்வி பயிலும் உரிமையை பறித்தது தான்.

பழந்தமிழகத்தில் கூட அரசாட்சியை நேரடியாகவும் மறைமுகமாகவும் பெண்களின் பங்களிப்பு இருந்திருக்கிறது. சோலை இளவரசி குந்தவை, நூர்ஜகான், ஜஹாநாரா ,என்று நிறைய உதாரணங்கள் இருக்கின்றனர். இன்னும் எத்தனையோ குடும்பங்களில் பெண்தான் முடிவெடுப்பவளாக திகழ்கிறாள். அவள் தொலைநோக்குப் பார்வையுடன் தான் சிந்திக்கிறாள். பெண்ணை கலந்துக் எடுக்காத எந்த முடிவும் வெற்றி பெறுவதில்லை. ஆனால், இதை ஏற்றுக் கொள்ள

ஆண்களுக்கு வறட்டு கௌரவம் தடுக்கிறது.

ஆணைக் கையாளும் பக்குவமும் பெண்ணுக்கு நிறைய உண்டு. தன்னைவிட 'இளைய வயது' பெண்ணை ஒரு ஆண் மணமுடிக்க என்னென்னவோ காரணங்கள் சொல்லலாம். ஆனால், வயது அதிகமான ஆணைக் குறைந்த வயது பெண் சுலபமாக ''ஹேண்டில்'' செய்வாள் என்பதுதான் உண்மை. பெண்ணின் ஆளுமை திறனுக்கு சரியான எடுத்துக்காட்டாக அவளது ''மல்டி டாஸ்கிங்'' வேலைகளை செய்வதை சொல்லலாம். அவள் சமைத்துக் கொண்டு, வாஷிங் மிஷினில் துணிகளை போட்டுவிட்டு, குழந்தைகளுக்கு பால் புட்டியை கொடுத்து, வயதானவர்கள் இருந்தால் காபி போட்டுக் கொடுத்துவிட்டு, வரும் தொலைபேசி அழைப்பையும் கவனித்துக் கொள்ள முடியும்.

ஆனால், ஆணால் ஒரு நேரத்தில் ஒரு வேலை தான் செய்ய முடியும் சமையல் கூட நிறைய ஆண்கள் ஒவ்வொன்றாகத் தான் சேமிப்பார்கள். ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வகை சமைக்க முடியாமல் திணறுவார்கள். அவ்வளவு ஏன் பெண்ணால் வீட்டு வேலை, அலுவலக வேலை, இரண்டையும் அசால்டாக சமாளிக்க முடியும் ஆணால் நிச்சயமாக முடியாது. இயற்கையாகவே ஆண்களின் மூளையை விட பெண்களின் மூளை எட்டு சதவீதம் சிறியதாக இருந்தாலும் அவர்களின் மூளைக்கு அதிக திறன் உள்ளதா தான் ஆராய்ச்சியில் கண்டறியப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆளுமை என்பது மூளையின் அளவில் இல்லை செயலில் தான் இருக்கிறது என்பது புரிகிறது.

படித்தவர்களை விட படிப்பறிவு இல்லாத அனுபவ அறிவு மிகுந்த கிராமப்புறங்களில் எத்தனையோ, இக்கட்டான சூழ்நிலைகளையும் இலகுவாக சமாளித்திருக்கிறார்கள். கடலோர மீனவ குடும்பங்களில் ஆண்கள் மீன் பிடித்து வருவதோடு அவர்களது வேலை முடிந்து விடும் அந்த மீன்களை சுத்தப்படுத்தி, வியாபாரம் செய்து, மீதமான மீன்களை கருவாடாகி, காசு பார்ப்பது எல்லாம் பெண்கள் வேலை தான். சிக்கல்களை எதிர்கொள்ளும் திறன் கொண்டவர்கள் தான் அவற்றைச் சமாளித்துக் கடக்கிறார்கள்.

எனக்கு தூரத்து உறவு பெண் ஒருவர் காதல் மணம் புரிந்தவர்.ஒரு மகன் பிறந்த பிறகு கணவருக்கு நாள் பட்ட புற்று நோய் என்று தெரிய வந்தது.

எவ்வளவோ மருத்துவ செலவுகள் செய்தும் அவரைக் காப்பாற்ற முயலவில்லை. கணவர் இறந்த பின் உறவினர்கள் வற்புறுத்தியும் மறுமணத்தைத் தவிர்த்து விட்டு, வேலைக்குச் செல்லத் தொடங்கினார். வயதான தாயார், திருமணத்திற்குக் காத்திருந்த இரண்டு தங்கைகளைகக் கவனித்துக் கொண்டு, வீடு ஒன்றையும் சிறியதாகக் கட்டி மகனையும் நன்கு படிக்க வைத்தார். தங்கைகளுக்குத் திருமணத்தையும் முடித்து வைத்தார். இப்போது மகன் வேலைக்குச் செல்கிறார். இருந்தும் ஓய்வின்றி உழைத்துக் கொண்டுதான் இருக்கிறார் அந்தப் பெண்மணி. கணவன் இறந்ததும் சோகம் கொள் கொண்டாடிக் கொண்டே மூளையில் முடங்கி விடாமல் இயங்கத் தூண்டியை இவரது ஆளுமை தான் அந்தக் குடும்பத்திற்கு உறுதுணையாக இருந்திருக்கிறது என்று உறுதியாகச் சொல்லலாம்.

கணவன் இறந்த பின்னும் வாழ்க்கையை நகர்த்திச் செல்லும் பெண்கள் ஏராளமாக இருக்கின்றனர். ஆனால், மனைவி இறந்த பின் மனதளவில் முடங்கிவிடும் ஆண்கள் நீதி வாழ்வை அச்சத்துடன் தான் எதிர்கொள்கின்றனர். அல்லது இன்னொரு பெண்ணை மனம் புரிந்து தங்கள் இருப்பைக் காப்பாற்றிக் கொள்கின்றனர். என்பது மறக்கவியலாளர் நிதர்சனம் ஆகும். இத்தகைய ஆளுமை மிக்க பெண்களை மட்டம் தட்டி வைத்திருக்கும் ஆண்கள் இனிதாவது தங்கள் குடும்பத்தில் இருக்கும் பெண்களின் ஆளுமைத் திறனைப் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

# யாரும் பார்க்கவில்லை அப்பாடா

**கவிஞர் சம்சுல் ஹுதா பானு**

குதித்துக் குதித்து நடக்கிறேன்
நடக்கும்போதே குதிக்கிறேன்
நொண்டியடித்து விளையாடுகிறேன்
கால்கள் கட்டப்பட்டவள் நான் அப்பாடா!

சமையலை சொல்லிச் சொல்லி
சமைத்துச் கொண்டிருக்கிறேன்
எனது சமையலை பேட்டி எடுக்க
தொலைக்காட்சியிலிருந்து வந்துள்ளார்கள் என
சமையல் கட்டுக்குள் அடங்கியவள் நான்
யாரும் பார்க்கவில்லை அப்பாடா!

வாசித்த புத்தகத்தில் பிடித்த வரிகளை
சத்தமாக ஏற்ற இரக்கத்தோடு வாசிக்கிறேன்
செய்தி வாசிப்பாளராக
சப்தம் குறைவாகத்தான்
யாரும் பார்க்கவில்லை அப்பாடா!

புடவையைக் கைகளால் பிடித்து
தட்டாமாலை சுற்றிச் சுழல்கிறேன்
தலை கிறு கிறுத்தாலும்
மனம் விட்டுச் சிரிக்கிறேன்
கூட்டுப் புழுவின் இருந்து அழகு
வண்ணத்துப் பூச்சியானேன்
பார்க்கட்டும்.. பார்க்கட்டும்

# அன்பின் அர்ப்பணிப்பு – பெண்ணின் பராமரிப்பு

L. இமயா
Queen Mary's College,
Chennai-04

**முன்னுரை**

மனித சமுதாயம் அன்பும் பராமரிப்பும் இன்றி முழுமையடையாது. குறிப்பாக பெண்கள், தங்கள் இயல்பான அன்பு, பொறுமை மற்றும் தியாக உணர்வால் குடும்பத்தையும் சமூகத்தையும் காத்து நிற்கின்றனர். அவர்கள் இல்லாமல் "பராமரிப்பு" என்ற சொல்லே அர்த்தமற்றதாகி விடும். இத்தகைய பெண் பராமரிப்பாளர்கள், நம் வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் மறக்க முடியாத பங்கை வகிக்கிறார்கள்.

**குடும்பத்தில் பராமரிப்பாளர்கள்**

குடும்பத்தில் பெண்கள் குழந்தைகள், முதியோர், உடல் நலம் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோரின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்கின்றனர். அவர்கள் காட்டும் அன்பும் பொறுமையும் குடும்ப உறவுகளை வலுப்படுத்துகின்றன. தாயின் பராமரிப்பு இல்லாமல் குழந்தை வளர்ச்சி சாத்தியமில்லை என்பதை நம் வாழ்க்கைச் சூழலில் தினமும் உணர்கிறோம்.

**தொழில்முறை பராமரிப்பாளர்கள்**

மருத்துவமனைகள், முதியோர் இல்லங்கள், குழந்தைகள் பராமரிப்பு மையங்கள், மாற்றுத் திறனாளிகள் பராமரிப்பு நிலையங்கள் போன்ற இடங்களில் பெண்கள் பராமரிப்பாளர்களாக பணியாற்றுகின்றனர். அவர்கள் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதோடு மட்டுமல்லாமல் மன உறுதியையும் நம்பிக்கையையும் ஏற்படுத்துகிறார்கள். இவர்களின் சேவைகள் சமூக நலத்துக்கான வலுவான தூண்களாக உள்ளன.

**பெண்களின் தனிச்சிறப்பு**

பெண்களைப் பராமரிப்பாளர்களாகச் சிறப்பிக்கச் செய்யும் பண்புகள் பல:

அன்பும் இரக்கமும் நிறைந்த அணுகுமுறை

பொறுமை மற்றும் தியாக மனப்பான்மை

ஒழுக்கம் மற்றும் கடமை உணர்வு

இந்த இயல்புகள் காரணமாக பெண்கள் எங்கு பராமரிப்பாளர்களாக இருந்தாலும் அவர்கள் தனித்துவம் பெற்றவர்களாக திகழ்கிறார்கள். சமூகத்தின் நன்றி பெண் பராமரிப்பாளர்கள் காற்றும் அர்ப்பணிப்பு சமூக நலனுக்கு மனித ஒற்றுமைக்கும் முக்கிய பங்களிப்பாக இருக்கிறது. அவர்களுக்கு உரிய அங்கீகாரம் மரியாதை மற்றும் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

**முடிவுரை**

பெண் பராமரிப்பாளர்கள் குடும்பத்தின் சமூகத்தின் தாங்கும் உண்மையான தூண்கள். அவர்கள் அன்பு அர்ப்பணிப்பும் இல்லாமல் மனித வாழ்க்கை முழுமை அடையாது. எனவே, அவர்களின் சேவையை நாம் பாராட்டி அவர்களுக்கு தேவையான ஆதரவையும் ஊக்கத்தையும் அளிப்பது ஒவ்வொருவரின் கடமையாகும்..

# பெண்மை என்னும் பேராற்றல்

பூமீனாட்சி
திரு கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி
கடலூர்

## குறிப்புச் சட்டகம்

*1) முன்னுரை,*

*2) நடத்தை முறைகள்,*

*3) துணிச்சலும் தைரியமும்,*

*4) வெற்றி எனும் இலக்கு,*

*5) விழுவதும் எழுவதும்,*

*6) மென்மையும் பெண்மையும்,*

*7) சமூகத்தில் பெண்,*

*8) முடிவுரை.*

***முன்னுரை:***

*பெண் ஆளுமை என்பது ஒரு பெண்ணின் ஒட்டுமொத்த குணங்கள், நடத்தை முறைகள், உணர்ச்சிகள், ஒரு தனித்துவம் வாய்ந்த அடையாளம் போன்றவைகளை குறிப்பதாகும்.ஒவ்வொருவருமே ஒரு குறிப்பிட்ட வயதில் வாழ்க்கை முறைகளைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனைக்கு தள்ளப்படுவோம். அவற்றில் பெண்கள் ஒன்றை யோசித்து பதிலை மிக விரைவாக அறிந்து வாழ்க்கை முறைக்கு வந்து விடுகின்றனர்.*

*ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒரு தனித்துவம் வாய்ந்த குணம் உண்டு. அதில் பெரும்பாலும் பொறுமை குணம் பெண்களுக்கே உரியதாகும். ஒரே நேரத்தில் பல வேலைகளையும் கையாள பெண்களால் மட்டுமே முடியும். ஒரு பெண் எந்த அளவுக்கு மனதளவில் உடைகிறாளோ அதே அளவு மிக விரைவாக சட்டென்று மீண்டும் கடினமாகும் தன்மை உடையவளாக திகழ்கிறாள்.*

ஒரு சில பிரச்சனைகளை கண்டு அவளே வேண்டாம் என்று தள்ளி விலகி போவதுண்டு. அதனால் அவள் பயந்தவள் என்றோ தைரியம் இல்லை என்றோ எண்ணுதல் கூடாது. சண்டைக்குப் பின் நடப்பனவற்றை முன்கூட்டியே யோசித்து செயல்படுகிறாள் என்றும் அர்த்தம் ஆகும்.

பெண் ஆளுமை பற்றியும் நடத்தை முறைகள், உணர்ச்சிகள், வெற்றி எனும் இலக்கை எவ்வாறு அடைகின்றனர், துணிச்சல், தன்னம்பிக்கை, முயற்சி எவ்வாறெல்லாம் கொண்டு வாழ்ந்து வருகின்றனர் என்பதை இந்த கட்டுரையில் விரிவாக காணலாம்.

***நடத்தை முறைகள்:***

பெண் என்பவள் மிகவும் பணிவுடன் நடந்து கொள்பவள். எல்லோரையுமே சமமாக கருதும் எண்ணம் உடையவள். தாய்மை உணர்வு பெண்களுக்கு இயற்கையாகவே படைக்கப்பட்ட ஒன்றாகும். எப்போதும் எல்லோரிடமும் அன்பாக நடந்து கொள்வார்கள்.

(பொறுமை என்றொரு குணமுண்டு பெண்களுக்கு மட்டுமே அது உரித்தான ஒன்று).பெண்கள் சிறு வயதிலிருந்தே தன் குடும்ப சூழ்நிலைகளை புரிந்து நடந்து கொள்வார்கள். எந்த செயலில் ஈடுபட்டாலும் மிகவும் பொறுமையுடனும் பொறுப்புடனும் செயல்படுவார்கள். கோபமோ சோகமோ, மகிழ்ச்சியோ எதுவானாலும் வெளிப்படையாக காண்பித்துக் கொள்ள மாட்டார்கள்.

***துணிச்சலும் தைரியமும்:***

ஒரு பெண் எந்தவொரு செயலையும் செய்வதற்கு முன் பல முறை நன்றாக யோசித்து செயல்படுகிறாள். இதை செய்ய என்னால் முடியும் என்ற துணிவை அவளே ஏற்படுத்தி கொள்கிறாள். எவ்வளவு பெரிய தோல்வியாக இருந்தாலும் அதனைக் கண்டு துவண்டு விடாமல், நம்பிக்கையோடு மீண்டும் எழுந்து வருவார்கள். வாழ்க்கையில் எத்தனை போராட்டங்கள் வந்தாலும் அத்துனையையும் அமைதியாக கடந்து வந்து விடுவார்கள். கனவு காண்பது மட்டும் அல்லாமல் கனவுகளை நினைவுகளாக மாற்ற முயற்சியும் செய்வார்கள்.

**வெற்றி எனும் இலக்கு:**

தோல்வி என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். தோல்வியை எல்லோராலும் எளிதில் கடந்து வந்துவிட முடியாது. ஆனால் பெண்கள் பெரும்பாலும் தோல்விகளைக் கண்டு துவண்டு போவதில்லை. வெற்றிகளை தொடர்ந்து பெற்றுக்கொண்டே இருப்பார்கள்.

(இலக்கை அடைந்தவுடன் இலக்கியமே படைப்பாள் பெண்).

பெண்கள் பிறரால் தள்ளி வைக்கப்பட்டாலோ, தூக்கி எறியப்பட்டாலோ, புறக்கணிக்கப்பட்டாலோ எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு வெற்றி எனும் இலக்கை அடைந்து விடுவார்கள். அவ்வாறு வெற்றி பெறும் பெண்கள் வெற்றியிலும் அழத்தான் செய்வார்கள். வலிகள் நிறைந்த இவ்வுலகில் வலிகளை ஒரு பொருட்டாக எண்ணாது ஒரு இலக்கை அடைந்து விடுவார்கள்.

ஒரு சில முயற்சிகளுக்கு பின்பு பலரும் முயற்சியை பாதியிலேயே கைவிடுவது உண்டு. ஆனால் தோல்விகளை ஒரு சிறந்த அனுபவமாக பெண்கள் எடுத்துக் கொள்கிறார்கள். எப்போதுமே ஒரு இலக்கை அடைவதற்கு ஒரு குறிப்பிட்ட முயற்சியை செய்து கொண்டே இருக்கிறார்கள்.

**விழுவதும் எழுவதும்:**

விழுவதை அவமானமாக கருதாமல் விழுந்து உடனே எழுந்து விடுவார்கள். விழுந்தவனுக்கு வரலாறு ஏது, விழுந்து எழுந்தவனுக்கு தான் வரலாறு. விமர்சனம் செய்பவர்களை எல்லாம் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள். அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் எழுந்து நடை போடுவார்கள்.

(விழுதல் என்பது முயற்சி எழுதல் என்பது பயிற்சி)

ஒரே விஷயங்களில் துவண்டு போகாமல், முடியும் என்று தன்னம்பிக்கையோடு முயற்சி செய்து கொண்டே இருப்பார்கள். என்னால் இவற்றை செய்ய முடியும் என்று நம்பி அதனை முடித்தும் காண்பிப்பார்கள்.

எந்த ஒரு சூழ்நிலையிலும் எவரையும் எதிர்பார்க்காமல் தன் சுய சிந்தனையால் வளர வேண்டும் என்று எண்ணுவார்கள். வாழ்க்கையில் எதிர்பாராமல் ஏதேனும் நிகழ்ந்தால் கூட அவற்றை பெரியதாக கருதாமல் அதனை

ஏற்றுக்கொண்டு வாழ்வார்கள். எந்தவொரு காரியத்தை தொடங்கும் போதும் துணிச்சலோடு செயல்படுவார்கள்.

**மென்மையும் பெண்மையும்:**

பெண் என்பவள் மென்மையான குணம் உடையவள்.மற்றவர்களிடம் விட்டுக் கொடுத்தும் அனுசரித்துப் போகும் குணமும் உடையவள்.

(வர்ணித்தலிலும் இல்லை அழகு
வார்த்தையிலும் இல்லை அழகு
பெண்மை மட்டுமே பேரழகு)

பெண்களை பெரும்பாலும் பிறையோடு ஒப்பிட்டு கூறுவர். இலக்கியங்களில் மதி போன்ற முகம் என்று பெண்களை வர்ணிப்பதுண்டு. பெண்கள் எந்தவொரு உணர்வுகளையும் அவ்வளவு எளிதாக வெளிப்படையாக காண்பித்துக் கொள்ள மாட்டார்கள். ஒரு பெண்ணின் மனதில் என்ன இருக்கிறது என்றும் அவள் என்ன நினைக்கிறாள் என்றும் கண்டுப்பிடிப்பது அவ்வளவு எளிதான காரியமல்ல.பெண்ணின் மனதில் அத்துணை ரகசியங்கள் ஒளிந்திருக்கும்.

**சமூகத்தில் பெண்:**

பெண் என்பவள் சமூகத்தில் ஒரு முக்கிய அங்கீகாரத்தை பெற்றிருக்கிறாள். சமூகத்தின் மீது பெண்களுக்கு ஒரு பொறுப்புணர்வு இருக்கிறது. பெண்களின் செயல்களை சமூகம் போற்றுகிறது. சமூகத்தில் பெண்களுக்கென்று தனி மரியாதை எப்போதுமே உண்டு. பெண்களை போற்றுவது, வழி நடத்துவது, பாதுகாப்பு கருதுவது போன்றவையெல்லாம் ஒரு சமூகத்தை சார்ந்தும் இருக்கும்.

**முடிவுரை**

ஒரு பெண் எவ்வாறு நடந்து கொள்கிறாள், என்னென்ன பண்புகளை பெற்றிருக்கிறாள், தன்னம்பிக்கையை எந்த அளவிற்கு கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறாள், அவளுக்கே உரிய குணங்கள் என்ன, தோல்விகளை எவ்வாறு எடுத்துக் கொண்டு அவற்றைக் கையாளுகிறாள் என்பதை பற்றி இக்கட்டுரையில் அறிந்தோம்.

# வெட்க வண்ணம்

நெல்லை அன்புடன் ஆனந்தி
மிச்சிகன், அமெரிக்கா

காதல் மனம் நிறைக்க
கன்னியவள் நாணுகிறாள்
காதலன் அருகே வர
கடைக்கண்ணால் நோக்குகிறாள்

நெஞ்சம் படபடக்க
நேரிழை தலைகுனிந்தாள்
கொஞ்சம் நிமிர்கையில்
கோதையவள் நாணுகிறாள்

கண்கள் படபடக்க
காதலில் நிறைந்திருந்தாள்
கனவோ என எண்ணும்படி
கன்னியவள் எதிரில் நின்றாள்

வெட்க வண்ணம் பூசி
வெகுளியாய்ப் பார்த்து நின்றாள்
பக்கம் வந்திடவே
பாவையும் நாணி நின்றாள்

காரிகையின் காந்தப்பார்வை
காதலதை வளர்த்திடுமே
நங்கையவள் நாணப்பார்வை
நற்பயிராய் வளர்ந்திடுதே!

**குறள் கவிதை:**

நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர். - குறள் 109

# வரலாற்றில் பெண்ணின் நிலை

மு. ஜன்னத்துல் பிர்தௌஸ்
விவேகானந்தா கலை மற்றும்
அறிவியல் மகளிர் கல்லூரி
திருச்செங்கோடு

***வரலாற்றில் பெண்ணின் நிலை:***

*பெண் என்பது சமுதாயத்தின் அடித்தளமும், உயிரின் தோற்றத்தின் மூலமும் ஆகும். அவள் இல்லாமல் உலகம் இயங்காது என்று சொல்லலாம். வரலாற்றின் ஒவ்வொரு கட்டத்திலும் பெண் தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றிருந்தாள். சில காலங்களில் உயர்ந்த மரியாதையையும் அதிகாரத்தையும் பெற்றிருந்தாள்; சில காலங்களில் பின்தள்ளப்பட்டு அநீதிகளுக்கும் சமத்துவமின்மைக்கும் ஆளானாள். இருந்தாலும், அவள் தன்னுடைய ஆளுமையாலும் துணிவாலும் சமூகத்தில் நிலையான தடத்தை விட்டுச் சென்றிருக்கிறாள்.*

***சங்க காலத்திலிருந்து ஆரம்ப காலம் வரை:***

*தமிழ் சங்க இலக்கியங்கள் பெண்களின் இடத்தை உயர்வாக எடுத்துரைக்கின்றன. அக்காலத்தில் பெண்கள் கல்வியில் சிறந்து விளங்கினர். மடல்வாணன், அவ்வையார், காக்கைப்பாடினியார் போன்ற பெண்கவிஞர்கள் சமூகத்தில் புகழ் பெற்றவர்கள். அவ்வையார் எழுதிய நன்னூல்கள் இன்று வரை சிறுவர் கல்வியில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. இது சங்க காலத்தில் பெண்ணின் இடம் எவ்வளவு உயர்ந்தது என்பதை நிரூபிக்கிறது._வேதகாலத்திலும் பெண்கள் சம உரிமையுடன் இருந்தனர். கார்கி, மைத்ரேயி போன்ற பெண்கள் தத்துவம், யாகங்கள், வேதங்கள் குறித்து ஆண்களுடன் விவாதித்தனர். அந்தக் காலத்தில் பெண் குருகுலத்தில் கல்வி கற்று, சமூக விவாதங்களில் பங்கேற்கும் நிலையை பெற்றிருந்தாள்.*

***நடுத்தர காலத்தில் பெண்ணின் நிலை:***

*நடுத்தர காலத்தில் பெண் சமூகத்தில் பின்தள்ளப்பட்டனர். சமூகக் கட்டுப்பாடுகள், குழந்தை மணம், கல்வியறிவு மறுப்பு போன்றவை பெண்களை முன்னேற்றத்திலிருந்து தடுத்தன. ஆனால், சிலர் மட்டுமே தங்களின் ஆற்றல் மற்றும் திறமையால்*

வரலாற்றில் பெயரைப் பெற்றனர். உதாரணமாக, சங்கிலியாராணி கற்பகவள்ளி வீரத்தையும், ராணி வேலு நாச்சி சமூகப் போராட்டத்தையும் முன்னெடுத்தவர்கள். இவர்கள் பெண்களின் வலிமையும் தைரியத்தையும் வெளிப்படுத்துகின்றனர்.

**சுதந்திர போராட்டத்தில் பெண்களின் பங்கு:**

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பெண்கள் மறக்க முடியாத பங்கு வகித்தனர். ராணி லட்சுமிபாய் ஆங்கிலேயர்களுக்கு எதிராக வீரமாக போராடி "சாரகாரி" வீராங்கனை என போற்றப்பட்டார். அன்னி பசந்த், சரோஜினி நாயுடு, கஸ்தூரிபாய் காந்தி போன்றோர் சுதந்திரப் போராட்டத்தில் முன்னிலை வகித்தனர். தமிழ்நாட்டில் வேலு நாச்சி, உய்யக்கொண்டான் பந்தியராணி, சுப்ரமணிய பாரதியாரின் சிந்தனையால் ஊக்கமடைந்த பல பெண்கள் சுதந்திரத்திற்காக குரல் கொடுத்தனர்.

**பாரதியாரின் பார்வையில் பெண்:**

பாரதியார் "பெண்ணின் இடம் சமத்துவத்தில் தான் இருக்க வேண்டும்" என்று வலியுறுத்தினார். அவர் பெண்ணை "படைப்பின் துணைவர்" என்று வர்ணித்தார். பெண்ணின் கல்வியும் சுதந்திரமும் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு அவசியம் எனக் கூறினார். பாரதியார் சிந்தனைகள் இந்தியப் பெண்கள் சமூகத்தில் முன்னேறுவதற்கு அடித்தளமாக அமைந்தன.

**சுதந்திரத்திற்குப் பிந்தைய காலம்:**

சுதந்திரம் கிடைத்த பின்பு பெண்கள் பல துறைகளில் முன்னேற்றம் அடைந்தனர். அரசியல், கல்வி, மருத்துவம், அறிவியல், தொழில்நுட்பம், விளையாட்டு, கலாசாரம் எனப் பல துறைகளில் பெண்கள் தங்கள் ஆளுமையை வெளிப்படுத்தினார்கள். இந்தியாவின் முதல் பெண் பிரதமராக இந்திரா காந்தி, முதல் பெண் ஜனாதிபதியாக பிரதிபா பாடில், முதல் விண்வெளி வீராங்கனையாக கல்பனா சாவ்லா, சுனிதா வில்லியம்ஸ் ஆகியோர் உலகளவில் இந்தியப் பெண்களின் இடத்தை உயர்த்தினர்.

***இன்றைய பெண்களின் இடம்:***

இன்றைய பெண்கள் உலகம் முழுவதும் கல்வி, வேலை, அரசியல், விளையாட்டு, ஆராய்ச்சி போன்ற துறைகளில் தங்கள் திறமையை நிரூபித்து வருகின்றனர். ஒலிம்பிக் போட்டிகளில் பி.வி.சிந்து, மேரி கோம், மிராபாய் சானு போன்றோர் நாட்டின் பெருமையை உயர்த்தினர். தொழில்நுட்ப துறையில் பெண்கள் தலைமைப் பொறுப்புகளில் அமர்ந்து நிறுவனங்களை வழிநடத்துகின்றனர்._அதே சமயம் பெண்கள் இன்னும் பல சவால்களைச் சந்தித்து வருகின்றனர். பாலின சமத்துவமின்மை, பாதுகாப்பு பிரச்சினைகள், வேலை

இடங்களில் பாகுபாடு போன்றவை நீங்காத பிரச்சினைகளாக இருக்கின்றன. இருப்பினும், தன்னம்பிக்கையுடனும் துணிவுடனும் பெண்கள் தங்கள் உரிமைக்காக குரல் கொடுத்து சமூகத்தில் முன்னேற்றம் அடைந்து வருகிறார்கள்.

***முடிவுரை:***

வரலாற்றில் பெண்ணின் இடம் பல்வேறு காலங்களில் பல்வேறு மாற்றங்களை எதிர்கொண்டுள்ளது. சில காலங்களில் உயர்ந்த மரியாதை பெற்றிருந்தாலும், சில காலங்களில் அநீதிகளுக்கும் ஆளானாள். இருந்தாலும் பெண் எப்போதும் தன்னுடைய திறமை, துணிவு, தியாகம், அன்பு ஆகியவற்றின் மூலம் சமூகத்தில் தன் இடத்தை நிலைநிறுத்தியிருக்கிறாள். இன்று கல்வியும் தன்னம்பிக்கையும் பெண்ணை மேலும் வலிமையாக்கி, சமூகத்திலும் உலகத்திலும் முன்னேற்றம் பெறச் செய்கின்றன. பெண்ணின் இடம் வரலாற்றில் மட்டும் அல்ல, எதிர்காலத்திலும் உயர்ந்த நிலையில் இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

கவிஞர் மானசீகன்

*உண்மையில் பெரும்பாலான*

*பெண்கள் காதலிப்பது*

*ஆணையல்ல; தன் தேர்வை…*

*அதனால்தான் சேர்ந்து வாழும்*

*போது அது எத்தனை மோசமானதாக இருந்தாலும்*

*‘சிறந்தது’ என்று நிரூபிக்கத் துடிக்கிறாள்..*

*பிரிந்து விட்டால் அது எத்தனை*

*உயர்வானதாக இருந்தாலும்*

*சகலத்தையும் மறந்து விட்டு*

*வன்மத்தோடு சாத்துகிறாள்…*

*ஆயிரம் பேரை அலட்சியப்படுத்தி*

*விட்டு ஒருவனே சகலமும் என்று*

*சரணடைந்த பின் அவன்*

*அலட்சியத்தால் கண்ணீர் சிந்திக்*

*கதறும் உயிருக்கு ‘பெண்‘ என்று பெயர்…*

முகநூல் பதிவு

# பெண்ணும் எழுத்தும்
## கவிதை நூல்: இதுவும் கடந்து போகும்

திருமதி N.S பிரேமா
மேனாள் ஆணையர்,
திருச்சி மாநகராட்சி,
சென்னை.

*"இதுவும் கடந்து போகும்" எனும் தலைப்பில் பாவலர் மு.செந்தாமரை எழுதியுள்ள கவிதைகள் சிறப்பாக உள்ளன என்று பொதுவாகச் சொல்வதைவிட சீரிய கருத்துக்களை எளிய கவிதைகளில் அழகாகத் தெரிவித்துள்ளார் என உறுதியாகச் சொல்லலாம். 80 கவிதைகளில் பல கவிதைகள் சுய முன்னேற்றத்திற்கு ஊக்கமளிக்கும் வகையில், தன்னம்பிக்கையை விளக்கும் வகையில், தோல்வி கண்டு துவளாமல் இலக்கை நோக்கி முன்னேறத் தூண்டும் வகையில் அருமையாக அமைந்துள்ளது.*

*தோழிக்கு இலக்கணம் கூறுகிறார் கவிஞர்,*

*"என் வெற்றி*
*என் தோல்வி*
*என் முதல் காதல்*
*என என் அனைத்தும் அறிந்த*
*ரகசிய காப்புப்பெட்டகம் அவள்"*

*அப்படி ரகசியப் பெட்டகமாக இருந்தால் தானே தோழி?*

*நண்பன் நல்ல நண்பன் என்றால் அவனிடம் இருக்கும் குணங்கள் நம் தந்தையையோ தமையனையோ நினைவூட்டும் தானே?*

*நண்பன் கவிதை*

*"மீண்டும் என் தந்தையைக்*
*கண்டேன்!*

**சக்தி| ஆகஸ்ட்|2026**

மு.செந்தாமரை

அவரின் இறப்பில்

முதல் ஆளாய் வந்த

நண்பனிடம்"

மிகச்சிறப்பான இலக்கணம் வகுத்துள்ளார் நண்பனுக்கு.

"தேன் மிட்டாய்" கவிதை 1960 - 70களில் பிறந்த அனைவருக்கும் மலரும் நினைவுகளாய்....

"சிகரம் தொடு" எனும் கவிதையில் எவரெஸ்ட் சிகரம் தொட்ட முதல் மாற்றுத்திறனாளி அருணிமா சின்ஹாவைச் சுட்டிக்காட்டியது அனைவருக்கும் பாடம்.

கவிஞர் தன் "கனா" என்னும் கவிதையில் தன் கனவுகளில் பல என குறிப்பிடுபவை இந்நாட்டிற்கு இன்றைய தேவை.

"பார் போற்றும் இளைஞர்கள் உருவாக எண்ணிலடங்காக் கனா கண்டேன்."

"இதுவும் கடந்து போகும்" எனும் கவிதையில்

"ஒவ்வொரு பிறப்பும் இறப்பு என்ற ஒன்றை அடைந்தே தீரும் என்பது விதி!

இரண்டிற்கும் இடையே உள்ள கால இடைவெளியை வெல்வது மதி!

சோதனைகள் இல்லாதபோது

சாதனைகள் ஏது!

பள்ளம் உண்டெனில் வெள்ளம் வந்தே தீரும்...

இரவைக்கடந்தால் பகல் உண்டு...

துன்பம் கடந்தால் இன்பம் அடைவாய்...

கற்றுக்கொள் ஒவ்வொரு தோல்வியிலும்...

யானைக்கும் அடிசறுக்கும்

நினைவில் கொள்!

உலகில் சாதித்தவர்கள் அனைவருமே

சோதனையைத் தாண்டியவர்களே."

இக்கவிதையில் கடைசி வரியாக, "இதுவும் கடந்து போகும்" என்று நினைக்க வேண்டும் எனக்குறிப்பிடுவது தன்னம்பிக்கையுடன் வாழ வழங்கிய அறிவுரையாக உள்ளது.

இன்றைய பெண்கள் அடைந்திடும் துன்பத்தை "மகளிர் தினம் எதற்கு?" எனும் கவிதையில் சமுதாயத்தில் சாதிக்கும் பெண்களைப் பாராட்டி அவர்களைச் சீரழிக்கும் சம்பவங்களைப் பட்டியலாக்கி விளாசியுள்ளது மிகச்சிறப்பு.

"பிறந்த குழந்தை முதல் மூதாட்டி வரை சுடுகாட்டிற்குச் செல்லும் போது தான் விடுதலையா? என்று விடியும்? என்று இக்கொடுமை ஒழியும்? எனக் கேள்வி கேட்டுத் தாய்மார்களுக்கு ஒரு செய்தியாக "தன் ஆண் குழந்தையை மனிதனாக வளர்ப்போம். பெண்ணின் மகத்துவம் அறிய வைப்போம்" என்று குறிப்பிட்டுள்ளது மிகப் பொருத்தமான அறிவுரையாக உள்ளது. ஒவ்வொரு கவிதையும் இப்படி அனுபவப் பகிர்வாக, அறிவுரையாக மிகச்சிறப்பாக எழுதப்பட்டுள்ளது.




"ஈடில்லாப் பொழுதுகள்" எனும் கவிதை எத்தனை இன்பங்கள் முந்தைய தலைமுறை அனுபவித்தது இன்றைய தலைமுறை அறியாதது என்பதை அழகாக விளக்குகின்றது.

*“வாழ்க்கை வாழவே அன்றி வீழ்வதற்கெல்ல*

*ஏழ்மை ஒன்றும் இழிவல்ல*

*எண்ணத்தில் ஏற்றம் முன்னேற்றம் பெறும்*

*விண்ணும் தொடலாம் இதையெல்லாம் கடந்தால்” என ஊக்கமூட்டும் கவிதை, ‘‘கடந்து செல்வதே வாழ்க்கை.’’*

*‘‘தமக்கைப் பாசம்’’ சொல்லும் கவிதை அருமை.*

*‘‘எழுத்தறிவித்தவளை’’ என்ற கவிதையில்*

*“உயிர் கொடுத்தவள் உயிர்த்தெழவேயெனை*

*ஊன்றுகோலாய் எழுதுகோல் பிடிக்க பழக்குகிறாள்*

*நாளை உலகமே உற்றுப் பார்க்குமெனை*

*உயிர்ப்பாய் எழுதுகிறாளென” என ஆசிரியப் பெருமக்களைப் பாராட்டுவது சிறிய கவிதை என்றாலும் மிகச் சிறப்பாக உள்ளது.*

*கவிஞர், எழுத்தாளர், தொகுப்பாசிரியர், நிகழ்வு நெறியாளர் எனப் பன்முகம் கொண்ட ‘‘ஆல் இந்தியா புக் ஆப் ரெக்கார்ட்ஸின்’’ உமன் அச்சீவர் அவார்டு 2024 பெற்றுள்ள பாவலர்.மு.செந்தாமரையை எனக்கு சமீப காலமாகத் தெரியும். அவருடைய கவிதைகளை, படைக்கும் ஆற்றலைப் பாராட்டுகிறேன். பல அனுபவங்களைக் கவிதையாக வடித்துள்ளார். பல விருப்பங்களாக சமுதாயம் எப்படி இருக்க வேண்டும் தன்னம்பிக்கையோடு தடைகளைத் தாண்டி துவளாமல் முன்னேற வேண்டும் என்று பல கவிதைகளில் ஓங்கி உரைத்துள்ளார்.*

*இவருடைய பல கவிதைகள் மிகப்பொருத்தமானவையாகவும் சமுதாயத்திற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என வலியுறுத்துவதாகவும் உள்ளன. தமிழுலகம் இவருக்கு நல்லாதரவு நல்கும் என நம்புகிறேன். இவர் தன் தமிழ்ப்பணியைத் தொடர வேண்டும் எனப் பாராட்டி வாழ்த்துகிறேன்.*

*இந்த மிகச் சிறப்பான கவிதைகள் உள்ள ‘‘இதுவும் கடந்து போகும்’’ கவிதைத் தொகுப்பு அவருக்குப் புகழையும் பாராட்டுகளையும் கட்டாயம் பெற்றுத் தரும் என வாழ்த்தி மகிழ்கிறேன்.*

# சக்தி விருது வழங்கும் விழா

திருமதி மல்லிகா சைதை சா. துரைசாமி அவர்களுக்கு இதழாசிரியர் முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி அவர்கள் சிறப்புச் செய்தல்

திருமதி மல்லிகா சைதை சா. துரைசாமி மற்றும் பேராசிரியர் முனைவர் மோ மைக்கேல் ஃபாரடே அவர்களுடன் சக்தி விருதாளர்கள்

சக்தி தமிழணங்கு ஆசிரியர் முனைவர் செ ராஜேஸ்வரி அவர்கள்

வரவேற்புரை வழங்குதல்

பேராசிரியர் முனைவர் மோ மைக்கேல் ஃபாரடே அவர்கள்

வாழ்த்துரை வழங்குதல்

சக்தி விருதாளர்களுக்கு மனித நேயச் செம்மல் திரு சைதை சா துரைசாமி அவர்கள் விருது வழங்குதல்

சக்தி விருதாளர்களுக்கு முனைவர் மோ மைக்கேல் ஃபாரடே அவர்கள் புத்தங்கங்கள் பரிசளித்தல்

சக்தி விருதாளர்கள் ஏற்புரை

கவிஞர் சம்சுல் ஹுதா பானு விருது பெறுதல்

சக்தி விருதாளர்களுக்கு இதழாசிரியர்

முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி பொன்னாடை வழங்கிச் சிறப்பித்தல்

பேராசிரியர் முனைவர் மரிய தெரசா அவர்களின் நாவல் பற்றிய

திறனாய்வு வெளியீடு

# அம்மா

**கவிஞர் அழகை ஹைருன்நிஸா**

அம்மா என்பது முற்றுப்புள்ளி
அல்ல
எழுதுகோலின் நிரம்ப வடிந்த
உணர்வின் துளி
முந்தானையின் வாசம் பட்ட
மையப்புள்ளி
கை மணக்கின்ற சாப்பாட்டின்
மணம் உடைந்து செல்லும் வாசம்
நெடுந்தூரத்து தென்றலின் அரவணைப்பு
கை நீட்டி தொட முடிந்த
பெரும் மகிழ்வின் கடல்
என்னை ஈன்ற தாயின்
அடையாளம்
பெரும் கஷ்டத்தையும்,
வாழ்வின் துன்பங்களையும்,
ஏற்றத் தாழ்வுகளையும் சிரித்து
கடந்த தாய்
கண்ணீரை சுமந்து
அதில் எங்களை நனையவிடாமல்
காப்பாற்றிய மணிமகுடம் ஒவ்வொரு தாயுமே
வெற்றி சமுத்திரம்தான்.
அவர்கள் மண்ணிலே மரங்களைப்போல்
நம்மை விதைத்து விட்டு
இம்மரம் வளர்ந்து கனி தருகிறதை
நிமிர்ந்து பார்த்து குளிர்ந்து விட்டு
சென்ற விலை மதிப்பற்ற மகுடங்கள் தான்
பலனை எதிர்பாராமல் விட்டுச்சென்ற
தாய்மைக்கு
இப்பிரபஞ்சமே தலைவணங்கும்
பெண்ணின் மறு உருவத்தை
தாயில் காணலாம்

சக்தி| ஆகஸ்ட்|2026

# தமிழ்ப்பெண் ஆளுமைகள் – 2
## எழுத்தாளர் இரா. சைலஜா சக்தி

**பேட்டி எடுத்தவர்:** மேனகா நரேஷ்

- ***உங்களைப் பற்றிய அறிமுகத்தை கூறுங்கள்.***

*சக்தி பெண்ணிதழ் வாசகர்களுக்கு எனது வணக்கங்கள். நான் ஒரு எழுத்தாளர், பேச்சாளர். கதை, கவிதை, கட்டுரை, குறுநாவல், நாவல், நூல் விமர்சனம் ஆகிய தளங்களில் இயங்கி வருகிறேன். எனது சொந்த ஊர் தென்காசி மாவட்டம் ஆழ்வார்குறிச்சி. தற்போது சென்னையில் வசித்து வருகிறேன்.*

- ***உங்களுடைய எழுத்து வாழ்க்கை எப்போது தொடங்கியது?***

*பள்ளி நாட்களில் ஆசிரியையான எனது அம்மா தயாரித்துக் கொடுக்கும் குறிப்புகளின் மூலம் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகளை வாங்கிக் கொண்டிருந்தேன். ஆறாவது வகுப்பு படிக்கும்போது திடீரென கவிதைப் போட்டியில் கலந்து கொள்ள வேண்டிய சூழல் ஏற்பட்டது. எவ்வித முன் தயாரிப்பும் இல்லாமல் நான் சுயமாக யோசித்து எழுதிய கவிதைக்கு முதல் பரிசு கிடைத்தது. இதுவே என் எழுத்துக்குத் தொடக்கமாக அமைந்தது.*

*பதினொன்றாம் வகுப்பு படிக்கும்போது பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் தலைப்பு அறிவிக்கப்பட்ட பிறகு அரை மணி நேரம் யோசிக்க அவகாசம் தரப்பட்டது. அதில் எனது கட்டுரைக்கு முதல் பரிசு கிடைத்தது. அடுத்த ஆண்டும் அதே போட்டியில் முதல் பரிசு பெற்றேன். அப்பா சரித்திர நாவல்களையும், கிரைம் நாவல்களையும் எனக்கு அறிமுகப்படுத்தினார்கள். நான் எழுதுவதற்கு பெற்றோர், ஆசிரியப் பெருமக்கள் தவிர நூலக வாசிப்பும் மிக முக்கிய காரணம்.*

- ***தோல்பாவைக் கூத்துக் கலையை பற்றி நாவல் எழுதும் எண்ணம் எவ்வாறு தோன்றியது?***

*நீண்ட பாரம்பரியம் கொண்ட தோல்பாவைக் கூத்தைப் பற்றியும், கலைஞர்களின் வாழ்வியல் போராட்டங்களைப் பற்றியும் விரிவாக பேசும் நாவல் "ராவண நிழல்". இக்கலையைப் பற்றி முறையான கள ஆய்வுகள் செய்து நாவல் எழுத வேண்டும் என்று கூறியவர் நாட்டுப்புறவியல் அறிஞர், எழுத்தாளர் திரு.அ.கா.பெருமாள் ஐயா அவர்கள்.*

- ***கள ஆய்வுகள் செய்து எழுதுவதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும்?***

*கலைஞர்களை சந்தித்து உரையாடி, நிகழ்ச்சிகளை நேரில் பார்த்து, அதன் பின்னரே எழுதுகிறேன். அதனால் குறைந்தபட்சம் ஆறு மாதம் முதல் அதிகபட்சம் சில ஆண்டுகள் வரை ஆகும். ராவண நிழல் நாவல் எழுத மூன்று*

ஆண்டுகள் ஆனது. வில்லுப்பாட்டு குறுநாவல் எழுத எட்டு மாதங்கள் ஆனது. கணியான் ஆட்டம் குறுநாவல் எழுத ஆறு மாதங்கள் ஆனது.

- **உங்களின் குறு நாவல்கள், சிறுகதைகள் பற்றி கூறுங்கள்.**

எனது முதல் குறுநாவல் "கணியான் ஆட்டத்தை" பற்றியது, அமுதசுரபி குறுநாவல் போட்டியில் பரிசு பெற்றது. "வில்லுப்பாட்டு" பற்றிய குறுநாவல் குவிகம் போட்டியில் பரிசு பெற்றது. நாட்டுப் புறக்கலைகள் என்று மட்டுமல்ல, பல்வேறு கதைக் களங்களிலும் குறு நாவல்கள் எழுதி வருகிறேன். அவைகளும் பரிசு பெறுள்ளன.

எனது முதல் சிறுகதை "சுடுமண் சிற்பங்கள்" பற்றியது. மங்கையர் மலர் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றது. பல்வேறு இதழ்கள், அமைப்புகள் நடத்திய போட்டிகளில் சிறுகதைகள் பரிசுகளைப் பெற்றுள்ளன. பிரதிலிபி இணைய தளத்திலும், சக்தி பெண்ணிதழிலும் கதைகள் எழுதியுள்ளேன்.

- **உங்களின் கவிதைகள், கட்டுரைகள் பற்றிக் கூறுங்கள்.**

பிரதிலிபி இணைய தளத்தில் நிறைய கவிதைகள் எழுதியுள்ளேன். அதில் திருநங்கைகளின் வாழ்வியல் குறித்து எழுதிய கவிதை எனக்கு அதிக பாராட்டுகளைப் பெற்றுத் தந்தது. இக்கவிதை ஆடியோ கவிதையாக பிரதிலிபி FM இல் எனது குரலில் ஒலிக்கிறது. பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகள் எழுதி வருகிறேன். அண்மையில் வெளியிடப்பட்ட "இந்திய முகங்கள்" என்ற உலக சாதனைப் புத்தகத்தில் எனது கட்டுரை இடம்பெற்றுள்ளது. நூல் விமர்சனக் கட்டுரைகள் குவிகம், சக்தி இதழ்களில் வெளியாகி உள்ளன. தற்போது "சக்தி" பெண்ணிதழில் காவியங்கள் கவனிக்க மறந்த பெண்களைப் பற்றி கட்டுரைகள் எழுதி வருகிறேன்.

- ***உங்களின் மேடைப்பேச்சு பற்றி கூறுங்கள்.***

*பள்ளி, கல்லூரி நாட்களில் பேச்சுப் போட்டி, பட்டிமன்றங்கள் மற்றும் திருவள்ளுவர் கழக விழாக்களில் பங்கேற்று பேசியிருக்கிறேன். இன்று பல நிகழ்ச்சிகளில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றி வருகிறேன். தென்காசி மாவட்டம் கடையத்தில் நடந்த "பாரதியார் செல்லம்மாள்" திருமண விழா நிகழ்வில் பாரதியின் குடும்பத்தினர் மற்றும் கவிமணி குடும்பத்தினருடன் நானும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டது மறக்க முடியாத தருணமாக அமைந்தது.*

- ***வானொலி, தொலைக்காட்சியுடன் தொடர்பு எப்படி ஏற்பட்டது?***

*கல்லூரிப் படிப்பை முடித்த பின்னர் தனியார் தொலைக்காட்சியின் பேச்சு அரங்கத்தினர் நடத்திய ஐந்து கட்டச் சுற்றுகளிலும் தேர்வாகி இறுதியில் மேடையேறிப் பேசினேன். இதுவே முதல் தொலைக்காட்சி அனுபவம். பின்னர் தூத்துக்குடி ஆகாசவாணி வானொலியில் சிறுகதை வாசிப்பு, திருநெல்வேலி ஆகாசவாணி வானொலியில் "சூழல் காப்பது சுகம்" நிகழ்வில் உரை என வானொலி பயணம் தொடர்கிறது.*

- ***சக்தி பெண்ணிதழுடன் உங்களின் உறவு பற்றி கூறுங்கள்?***

*சக்தி இதழுக்கு முதலில் ஒரு பக்க அளவில் கட்டுரைகளை அனுப்பினேன். முனைவர் ராஜேஸ்வரி அம்மா அவர்கள் அதைத் தொடர்ந்து வெளியிட,*

கட்டுரைகளை விரிவுபடுத்தி எழுதினேன். அம்மா அவர்கள் செயற்கை நுண்ணறிவு *(AI)* தொழில்நுட்பத்தின் உதவியுடன் அழகான படங்களை உருவாக்கி கட்டுரைகளை வெளியிட்டார்கள். அது எனக்கு மிகப்பெரிய ஊக்கமாக இருந்தது. மேலும் ஊக்கமளிக்கும் விதமாக சக்தி பெண்ணிதழின் சார்பாக எனக்கு "சக்தி விருது" வழங்கினார்கள். சிறிய கட்டுரைகளில் ஆரம்பித்த "சக்தி" இதழுடனான உறவு இன்று நேர்காணல் வரை வருவதற்கு காரணம் அம்மா அவர்களின் அன்பான அணுகுமுறையே காரணம். தமிழணங்கு, சக்தி இதழ் என்று இரண்டு இதழ்களை வெற்றிகரமாக நடத்துவதுடன் அதில் எழுதும் எழுத்தாளர்களை ஊக்குவித்து குடும்ப உறுப்பினர்கள்போல் அன்பு செலுத்தி அவர்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டும் முனைவர் ராஜேஸ்வரி அம்மா அவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றிகளையும், வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

- ***நீங்கள் எழுதிய நூல்கள், பெற்ற விருதுகள் குறித்து கூறுங்கள். "ராவண நிழல்" என்ற நாவல்.. "அய்யனார் குதிரை" என்ற சிறுகதைத் தொகுப்பு...***

என் முதல் நாவலான "ராவண நிழல்" இலக்கிய உலகில் முக்கியத்துவம் வாய்ந்த சௌமா விருது, திருப்பூர் சக்தி விருது ஆகிய விருதுகளை பெற்றுள்ளது. மேலும் தூத்துக்குடி மாவட்டத்தின் சாதனைப் பெண்களுக்கான முத்துத் தாரகை விருது, சக்தி பெண்ணிதழ் வழங்கிய சக்தி விருது மற்றும்

பேர்ட்ஸ் தொண்டு நிறுவனத்தின் சார்பில் சாதனையாளர் விருது உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளேன்.

- **நீங்கள் எழுத ஊக்கம் அளிப்பவர்கள் பற்றிக் கூறுங்கள்.**

எழுத்தின் மீது எனக்கு இருந்த ஆர்வத்தைக் கண்ட கணவர் திரு. சக்தி சுப்பிரமணியன் அவர்கள் இப்பாதையை எனக்கு வகுத்துக் கொடுத்தார். அவரின் உதவியால்தான் கள ஆய்வுகள் செய்து எழுதுகிறேன். எனது இரு சகோதரிகள் திருமதி. மகேஸ்வரி நாகராஜன், திருமதி. ஷிவி மணியன் இருவரும் நான் எழுதிய அனைத்தையும் உடனுக்குடனே படித்து வாழ்த்துகளையும், நேர்மையான விமர்சனங்களையும் தருகிறார்கள். இவர்களைத் தவிர நான் தொடர்ந்து எழுத ஊக்கம் அளிப்பவர்கள் பலரும் உள்ளனர்.

- **எழுத்துத் துறையில் உங்களின் எதிர்காலக் கனவு என்ன?**

எனக்கு மிகவும் பிடித்த எழுத்தாளர்களான திரு. ராஜேஷ்குமார் மற்றும் திரு. இந்திரா சௌந்தர்ராஜன் அவர்களைப் போல் கிரைம் நாவல்கள், அமானுஷ்யம் கலந்த மர்ம நாவல்கள் எழுத வேண்டும் என்பது ஆசை. ஒரு சரித்திர நாவல் எழுதி விடவேண்டும் என்ற கனவும் உண்டு.

- **இளம் எழுத்தாளர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?**

இளம் எழுத்தாளர்கள் அதிக அளவில் உருவாகி வருவதை எழுத்துத் துறையின் ஆரோக்கியமான வளர்ச்சியாகவே பார்க்கிறேன். அதே நேரம் இத்துறையில் முன்னேற பொறுமையும், நிதானமும் அவசியம். எழுத்து மிகவும் உன்னதமானது. எழுத்தாளர் என்றால் ''எழுத்தை நாம் ஆள்பவர் அல்ல''. ''எழுத்து நம்மை ஆள்வதே'' ஆகும்.. அர்ப்பணிப்புடன் கூடிய எழுத்து காலம் கடந்தாலும் உரிய அங்கீகாரங்களைப் பெற்றுத்தரும்.

பேட்டி எடுத்தவர்:
மேனகா நரேஷ்

எழுத்தை வணங்கி நேர்வழியில் பயணிப்பதே நாம் எழுத்திற்கு செலுத்தும்

# பேரழகி

**கவிஞர் மஞ்சு**

பேரிளம் பெண்ணொத்துப்
பெருத்துப் பருத்திருப்பாள்
அந்தப் பேரழகி!

குலுங்கிக் குலுங்கி நடை பயிலுமவள்
பின்னழகில் மழலையொத்து
மனம் மயக்கும் மாண்புடையாள்!

படுத்துக் கிடக்கையிலே
கரும் பஞ்சுப்பொதி ஒத்திருப்பாள்
அந்தக் கார்மேக வடிவாள்!

கருத்திருப்பாள் பருத்திருப்பாள்
சிமிட்டும் கண்கள் மட்டும்
சிறுத்திருப்பாள்!

வயது வரம்பின்றித்
தன் வடிவால் மயக்கிடுவாள்
பலரையும் வாஞ்சை கொள்ளச் செய்திடுவாள்!

அப்பா தந்த ஐம்பது பைசாவைத் தந்ததும்
"டங்" என்று தலையில்
ஏதோ விழுந்ததாய் உணர்ந்து
நிமிர்ந்து பார்க்க....

துதிக்கையால் ஆசீர்வதித்தபடி
கண்கள் சிமிட்டித்
தன் அன்பையும்
காட்டிக் கொண்டிருந்தாள்
அந்தத் தொப்பை வயிற்றுக்காரி!

# ARANYANI

Vijeni

## CHAPTER – 13

### Her eyes watered before mine, when my leg got hurt – Sister

"Shall we have potato bajji? I love it in this stall" Rahul asks pointing at one of the stalls which are decorated with garlands that are made up of green chillis.

"No, Rahul...it will be oily and it is not very hygienic over here" Aarushi protests; and he lets out a loud sigh kicking the stones in the sand.

"Okay! If you want to have then, answer this question!" She continues "Why is buffalo Lord Yama's Vehicle?" She smiles raising her brows at him.

"If you answer I will give you the money!"

"Eh?! Are you trying to get answers for the question you get in your column? That will never happen!" He laughs aloud.

"I know the answer! Do not show off!!"

"Enough now; do not bore me with your questions...give me the money" Rahul demands after pushing his cheek out with his tongue.

Aarushi takes out some money from her purse and hands it over to him. Within seconds, he sprints through the crowd in excitement; he came to Thadaimalan, to spend time with her; but all he does is just roam around happily.

Aarushi follows him leisurely, looking around at the busily packed beach. Vendors were selling their humble wares; all south Indian snacks like murukku, soondal, sukku coffee or tea. She likes it when the sonpappaadi man attracts attention by ringing his bell pushing the cart with the colossal glass vat shouting along "sonppapadee.....sonppapadee"

The strong smell of saltwater hits her nostrils as she walks up to the rows of fish stalls. The stall is filled with customers who were busy eating the fried fillets of vanjaram, crispy nethili, stir-fried shrimp, hot and spicy.

A few shops away from the fish stall is where Rahul was sitting in a stool waiting for his plate of bajji. She takes the seat next to him, “So what have you asked for?”

“A plate of Vazhakkai bajji” he gleams.

“Why didn’t you order for a mixed plate; I do not like Vazhakkai; I want onion”

“Oh... hello... akka! Who called you here? It is unhygienic right” he says in an irritating tone.

“Don’t show off! I will leave you here itself!” She hits him on his head annoying him.

Aarushi looks at the lady behind the stall; the process of bajji making was beautiful to watch. A few quick flicks of the wrist and she has sliced the vegetables. She makes a swirl there, and the batter is ready and then she dips the slices into the mixture one by one, coating them in the creamy mix. She carefully drops them into hot oil simultaneously taking orders from the customers. After seconds of sizzling and floating in the hot oil, the bajjis take on a lovely golden hue.

At any given time, at least 10 customers are crowding around the stall, waiting to tuck into sizzling hot and crisp cauliflower, golden discs of onion, bread, and milagai bajjis.

A small boy gives a plate stacked with golden-fried Vazhakkai bajji to Rahul, and for the next 5 minutes, he is seen indulged in the repetitive action of Blow, dunk, bite, and crunch.

“Are you planning to come to the shore or eat until the shop’s bajji is all over?” Aarushi asks curiously.

“Ha-ha!! I come to this beach only to have bajji...I am not coming anywhere” he says without taking his eyes from the plate.

”Fine then, I am going to the sea, you better sit here do not leave anywhere. In case you finish it come straight to the snacks stall over there” She points to a prominent snack stall with neatly arranged packets of masala verkadalai, diced raw mangoes, roasted corn rubbed with lemon and red chilli powder. “I will be sitting near it, is that clear?”

“Ah-yes, you go Akka...” he nods licking the chutney from his fingers.

She smiles at him before leaving towards the shore; she merges herself with nature trying to forget everything. The Patravan Beach is her favorite place, there’s the sand, the endless stretch of blue, the cool breeze, dramatic sunrises and magnificent sunsets the beach is famous for. She plonks herself onto the sand and watches the waves roll in making her feel like it has secrets too.

“This beach has given the gift of living to many people,” She thinks to herself looking at the catamaran belonging to a fisherman drying along the beach end along with fishing nets rolled up in huge bundles.

The fresh air that blows at her face gives her a pleasant feeling, and she starts playing in the sand. She loves the way sand drops from her hand forming a heap; it makes her feel like she has accomplished something.

SWOOSH!!!

Before she could realize, sand was all over her face; and she is chocked. Instantly, she dusts her face and notices a brown horse gallop in front of her bearing a man and a kid, who is amused by the ride. Before she could look away from the big genuine eyes of the horse, a streak of flash strikes her mind.

*"How did Ramdev behave today, Supakshana?" a man in silk dhoti asks looking at a girl dressed in a mango colored half sari and her body is fully covered with jewels.*

*"He was very sweet abba, but I think he missed you," she says gently rubbing his nose.*

*"Yeah I know" the man smiles looking at his soft eyes.*

*"Abba" She feeds the bunch of hay to the horse and continues, "When will you teach me to ride him?"*

*"Pretty soon, Supa Kane"*

*"Humph...Ok abba!" the unfulfilled desire flashes at her face.*

*"I know you are feeling bad" he clears his throat.*

*"No...No abba, I am fine"*

*He smiles before replying, "I got him when I was 15 years old; a gift from my thathaiyya" he wipes the tear that had formed in the corner of his eyes.*

*"But do you know when I started riding him?" he widens his eyes questioningly at the girl, and she shakes her head.*

*"When I was 18 years"*

*"Ah! Then should I also wait till I turn 18 abba?"*

*He laughs before replying, "It is not about the age Supa Kanne, it is about the connection you should hold with him"*

*"Minutes back didn't you tell me that he missed me? Similarly, he should miss you too...the bond should become strong...only then the horse and the rider will care for each other; else it will become a mechanical vehicle"*

*''Yes abba; he will…he will definitely become close to me'' She says kissing him on his forelock.*

The flash vanishes bringing her back to reality, "What was that vision about? Was it me in those ancient clothes? And who was that man that I called my father? The horse? Why am I getting all these?" She mutters to herself.

"Think!" Her inner voice spoke.

"Think hard!" she strains her mind, succeeding only in getting herself a throbbing headache. Failing to get any possible answers, she consoles herself that it is just her brain playing tricks and it has become so usual for her.

Just as she decides to leave the place, she sees a familiar person strolling a few meters away from her. Instantly, she hides inside her duppatta and chooses to flee from the situation, but something stops her; the intuition from inside her tells her that those eyes are waiting to tell her something. She peeks out from the flowered cloth and stares at him, the stranger who had proposed her a week back.

Vihaan scans the crowd on the beach trying to meet her again. He starts to move amongst the families, his eyes darting more wildly with each passing second, noticing any girl who laughs, and hoping it is her innocent smile. His eyes are always on the look-out for any traces of her; to revive him.

"Hi…" Aarushi pauses; thinking about how she did not even know his name.

"Uhm-hi" Vihaan replies without looking at her and his eyes still scanning the crowd.

"Is there something you lost in here?"

"Ah! No, it's just th-" Vihaan gasps the moment he sees her. He starts laughing violently while tears roll down his cheeks; he tries to control his emotions but couldn't. He keeps on nipping his left hand and laughs to

himself. After a while, he even makes a small haul and gains little attention from the people around him.

“Hey! Stop that...what’s wrong?” she looks baffled.

“OMG!!! I just can’t believe my own eyes.....I am the luckiest guy and this is my luckiest day! My instinct told me that you would be here that’s why I came searching for you...It feels like I have seen God. I got the purpose of my life and it is like the world has stopped and only I am -”

“Hey....calm down! I don’t get you.....why were you searching for me?” mixed emotions dawns upon her.

“Why I am searching for you?? You totally shut me out and I don’t even know the reason. Maybe I made a few mistakes but how can you just leave me?” He blurts out without thinking much.

“Leave you? Excuse me?? I don’t even know your name!!” her face flashes red; she becomes a little annoyed.

“What?? So you totally erased me from your life?? And what about this?? You don’t want this too??” Vihaan asks placing the golden box in her hand. Curiously, Aarushi opens it, to reveal a gold chain that lay peacefully inside it, the pendant bearing a picture of two elephants with a round white stone between them.

She feels herself swirling as her limbs go numb. It feels like a black hole is sucking her inside. Stay focused Aarushi do not blackout her inner voice spoke out. But she couldn’t. As every second passes by, it is becoming more and more difficult for her. Her breath goes shallow until she stumbles and Vihaan catches her just before hitting the sands.

“Hey, you alright??” Nervously, Vihaan pats her cheeks trying to make her open her eyes.

After gaining her consciousness, she steadies herself and replies “Ah- y-y- yes”

“So…so....so we were together?? I mean did I give you this??” she stutters completely disbelieving the stranger that stood before her.

“Yes, and asked me to keep it with me until you ask me” He states.

As tears start whelming in her eyes, she mutters “Me? I told that?”

“What happened? You don’t talk to me the way you used to before. Is there anything that is disturbing you?? Please tell me. I will make everything fine” he pleads after taking her hand into his.

“You disconnected your landline, resigned your job, shifted house.....You also mentioned that I am a danger to your landlord. Why are you doing all this?? Are you by any chance trying to avoid me??”

“Ah....no...” She pulls her hand away from him before continuing, “Was I all good before 5 to 6 months?”

“Yes! You asked me not to talk to you for 6 months to prove my love to you and here I am”

“ARRRGGGHHHHH!!! I am sorry I need to leave now” she is agitated and tensed and nothing could ease her.

“What?? I am not going to leave you like that... I have tons of questions to ask you”

“Listen, take my landline number” She takes out a paper and a pen from her bag and writes down her number.

“I really need to go, please” She begs after passing the paper to him.

“I just hope you will not leave me again!” He says as his shoulders slumps and his eyes cast down in a mournful gaze.

“I will not” She manages to smile back before leaving the place.

She turns around, glancing back at him. His dark brown eyes lock with hers for a moment. She hastily turns around and thinks to herself “Why can I not make eye contact with him for more than one second?”

Aarushi could feel her energy being sucked up like the nectar by the flies. She walks towards Rahul, averting her eyes to the sand, but yet she did not want to look distressed in front of him.

“I am coming home with you,” she says to Rahul who is now buying a vanilla ice-cream from a nearby stall.

“What? Don’t you have to go to office tomorrow? And dad booked ticket only for me” he says licking the ice-cream cone that he had in his hand.

“That’s ok, I will manage”

“Why are you coming all of a sudden?” he asks pausing his lip-smacking to look at her.

“You will not understand”

“Why will I not understand? Tell me akka! Tell me! Tell me!” He keeps hitting her on her arms.

“Stop it, Rahul! You are irritating me!” Her words turn into sobs.

“Akka! Are you crying?” He waits for his sister to respond, but hears only her whimpering.

“I - I am sorry akka; I will not irritate you!” He says feeling guilty; “Do you want ice cream; look it is delicious!” He hands out the melting cone in front of her.

Smiling away, she replies “No Rahul; I am fine, you have it before it completely melts down”

“Do not feel bad akka, if you want I will find the answer to your question to make you feel better!” he slowly murmured.

She smiles before replying, “I already know it, Rahul!”

“Oh...what is the answer?”

“The buffalo is slow and persistent, like death. From the moment we are born, Yama begins his journey towards us, moving slowly, but will surely reach us one day!” She replies wearily staring at the busy road.

# ஹைக்கூ கவிதைகள்

**Dr ஜலீலா முஸம்மில்**
**ஏறாவூர்**
**இலங்கை**

*கண் கொள்ளாக் காட்சி!*
*விரியும் மயில் தோகையில்*
*ஆயிரம் கண்கள்.*

*சுற்றிச் சுற்றி வந்து*
*பேசுகிறார் தாத்தா*
*நேசிக்கும் பழைய வண்டியோடு*

*பஞ்சு மேகங்கள்*
*கொஞ்சியிருக்குமோ?*
*பறக்கும் குருவிகள்*



*மையில் குளித்து*
*மனதை வருடுகிறது*
*எழுதிய கவிதை*

*பூக்களில் இருந்து*
*பிரதி எடுத்திருக்குமோ*
*வண்ணத்தை பட்டாம்பூச்சி*



*கேட்கப்படவில்லை*
*மனிதனிடம் சம்மதம்*
*பிறப்புக்கும் இறப்புக்கும்*

*குட்டியை சுமக்கும் இடையன்*
*ஓடோடி வரும்*
*பின்னால் தாயாடு*

*மசூதியில் அடையும்*
*புறாக்களின் சிறகுகளில்*
*குவியும் பிரார்த்தனைகள்*

*தையல் கலை*
*யாரிடம் கற்றதோ*
*கூடு கட்டும் குருவி*

*சுழிக்காற்று*
*கரை நோக்கி நகரும்*
*அலைச்சுருள் முடி*

அந்தி வானில்
அசையும் கவிதை
கூடு திரும்பும் பறவைகள்

ஆயிரம் நட்சத்திரங்கள்
இருந்தும் தேடுகிறேன்
வானில் நிலவை

நிலவொளி
அகன்று பெரியதாக
நகரும் நத்தை நிழல்

விடியற்காலை
தரையில் படுத்திருக்கிறது
பனிப்படலம்

இருண்ட மலை
நீண்டு கிடக்கிறது
நிசப்தம்

காலை சூரிய ஒளி
ஜன்னலோர இருக்கையில்
தூங்கும் பூனை

ஓடும் நதி
கொண்டு செல்கிறது
குளிர்ந்த அமைதி

ரோஜா மலர்
பணிந்து தரை தொடும்
சிறு குருவி அமர

மரங்களின் இலைகள்
எஞ்சி இருக்கும்
அந்தி மஞ்சள்

சேறாவதில்லை
சோறு தரும்
செம்மண் மழை

# வேண்டுதல்

**எழுத்தாளர் சசிகலா விஸ்வநாதன்**

**பெங்களூரு**

அன்று ஏனோ தெரியவில்லை; ஆவுடையார் கோயில் செல்லும் உள்ளுணர்வு உந்தியது. மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் சென்று புதுக்கோட்டை செல்லும் பேருந்தில் ஏறி அமர்ந்தேன். ஓட்டுநர் அருகே வாகாக சன்னலோரமாக உட்கார இடம் கிடைத்தது. உட்கார இடம் கிடைத்த மன நிறைவில் ஐந்து நிமிடம் கண்மூடி திறந்தவனுக்கு இன்னுமொரு ஆச்சரியம் காத்திருந்தது. பவுன் ராசு, ''என்ன சார்! சிவன் கூப்பிட்டு விட்டாரா?'' என்று கேட்டபடியே ஓட்டுநர் இருக்கையில் அமர, நானும் ''வாய்யா பவுனு! உன்னைத்தான் பார்க்க வேண்டும், என்று நினைத்துக் கொண்டிருந்தேன்.'' என்றேன் ''சும்மா புருடா விடாதீங்க! என்னை நீங்க மறந்தே போய்ட்டீங்க.'' என்றவாறே தன் இருக்கையை கையில் இருந்த துணியால் அழுந்த துடைத்து விட்டு, இருக்கையில் அமர்ந்தவன், சிலுவைக் குறியிட்டுக் கொண்டு ''பாம் பாம்' என்று இருமுறை ஹார்ன் அடித்து பேருந்தைக் கிளப்பினான்.

''இல்லை! பவுனு! உன்னைப் பார்க்கணும்னு தான் நினைச்சேன். நீ எந்த ரூட் வண்டியில் உனக்கு ட்யூடி போட்டிருக்காங்களோ; என்று யோசித்துக் கொண்டடேயிருந்தேன். அந்த 'சிவன்' திடீரென பிரசன்னம் ஆவது போல் பவுன் பிரசன்னம் எனக்கு வாய்த்தது'' என்று பதிலளித்தேன்.

எப்படியோ உங்க சிவன் சாமி இடத்துக்கு என்னைத் தூக்கிட்டீங்க! அது மட்டும் சந்தோசம் தான். இப்போ சாமி நான் கேட்கிறேன்; நம்ம சாருக்கு என்ன வரம் வேண்டும்?'' ''என்ன வரம் கேட்டாலும் கொடுக்கும் சாமியா; நீ, பவனு'' என்று சிரித்தேன். ''கேட்டுப் பாருங்க; கிடைக்குமா, இல்லையான்னு அப்புறம் தெரியும்.'' என்றான்.'' நான் எப்பவும் அந்த சிவனிடம் வேண்டுவது, பிறவா வரம் ஒன்றுதான். பிறப்பும் இறப்பும் என்னும் இருமையிலிருந்து விடுதலை ஒன்றே ஒன்று தான் வேண்டி நிற்கிறேன்; அந்த இறைவனிடம். பவுனு சாமி! எனக்கு இந்த

வரம் மட்டும் தந்திடுங்கபோதும்.'' என்று சற்று கிண்டலாகத் தான் கேட்டேன்; பவுனிடம்

சரிங்க! அது, ஒன்றுக்கும் உதவா வரமாச்சே. அதுவா நீங்க பவுன் சாமி கிட்ட கேட்கிற வரம்! ஒன்றும் பிரச்சினை இல்லை. வேண்டும் வரம் தந்தேன் என்றே வைத்துக் கொள்ளுங்கள். ஆனா; அதுக்கு முன் உங்களிடம் ஒரு கேள்வி. இந்த பிறவா வரம் உங்களுக்கா; இல்லை உங்கள் உயிரைத் தாங்கி நிற்கும் உங்கள் உடலுக்கா? யோசித்துப் பார்த்து சொல்லுங்கள்'' என்று கேட்டான். இந்தக் கேள்வியில் நான் திக்கு முக்காடிப் போனேன்.

பேருந்து மாட்டு தாவணி பேருந்து நிலையத்திலிருந்து திருமோகூர் சமீபம் விரைந்து கொண்டிருந்தது. ''ஐயா! எப்படியும் உங்கள் உடல் மண்ணுக்கோ, நெருப்புக்கோ இரையாகிப் போகும். இந்த உடம்பு பிறந்தாலும் பிறக்கா விட்டாலும் உங்களுக்கு எதுவும் ஆகப் போவதில்லை. அந்த உடல் என்பது நீங்கள் இல்லை, அல்லவா: அது என்னவோவாகிப் போகட்டும். நமக்கென்ன வந்தது. உங்களுக்கு அது தெரியப் போவதுமில்லை.; அதனால் நிலையற்ற உடலுக்கான வேண்டுதல் எதுவும் இல்லை; உங்களிடம், என்று, நான் புரிந்து கொண்டால் தவறில்லை; அல்லவா?

''ஆமாம்; பவுனு! உயிரோடு உறவு இருக்கும் வரைதான் உடலுக்கு மதிப்பு . அந்த உறவென்ற அறிவு அழிந்து போகையில், உடல் இற்று விழும். உயிருக்கு ஒரு கூடுதான் உடல். சரிதான்; நீ சொல்லுவது.'' என்றேன் சிறிது நேரம் மௌனமாகப் போயிற்று.. பேருந்து தெற்கு தெரு தாண்டி மேலூரைத் தொட்டு திருப்பத்தூர் மெயின் ரோட்டில் விரைந்த போது, அடுத்த கேள்வி, அவனிடமிருந்து வந்தது.

''சார்! உயிர் என்றால் என்ன?'' பவுனின் இந்த கிடுக்கிப்பிடி கேள்வியில், நான் மேலும் தடுமாறினேன். ஆனாலும் சமாளித்துக் கொண்டு,'' உயிர் என்பது உடலை இயக்குவிக்கும் ஆற்றல், ஒரு சக்தி. உயிரின்றி உடல், இயங்கா சவம் தான். உயிர் சரீரத்திற்குள் இருக்கும் ஒரு நித்திய வஸ்து என்றும்; அது சூட்சும வஸ்து என்றும்; அதற்குப் பிறப்பு, இறப்பு இல்லை என்றும் நம்பிக்கை. உடலில் இருக்கும்போது செய்த புண்ணிய பாவத்திற்கேற்ப வேறு ஒரு புது உடலை எடுக்கிறது. அது தான் மறுபிறப்பு. இந்த மறு ஜென்மம், வேண்டாம்; என்றுதான் நான் என்றும் சிவனை வேண்டுகிறேன்'' என்று சாமர்த்தியமாக சமாளித்து விட்டதாக ஒரு பெருமூச்சு விட்டேன்.

*"சரி! ஐயா! புரிந்துவிட்டது! உங்கள் உயிருக்கு மறு ஜென்மம் வேண்டாம் என்பதுதான் உங்கள் வேண்டுதல்; இல்லையா? இன்னும் ஒரே ஒரு கேள்வி! அதற்கு பதில் கொடுத்து விடுங்கள். வரம் கொடுக்க இந்த பவுன் தெய்வம் தயாராக இருக்கு. என்றான்; பவுன்.*

*"என்னப்பா! என் சிவன் பேசாமல் பாராமுகம் காட்டி விளையாடுகிறார்! நீ என்னை கேள்வி கேட்டே சதாய்க்க பார்க்கிறாய்? சரி! உன் கேள்விதான் என்ன?" என்று கேட்க, ;' சட்' என கூரிய அம்பு போல் பாய்ந்து வந்தது அடுத்த வினா.*

*" சார்! உயிர் என்றால் என்ன என்று தெளிவாகச் சொல்லிவிட்டீர்கள். ஆத்மா என்றால் என்ன?" "பவுனு! இது மிகக் கடினமான கேள்வி. இதற்கு நான் பதில் சொல்கிறேன். உன்னால் புரிந்து கொள்ள முடியுமா? ஆத்மா அல்லது ஆன்மா அல்லது ஆவி. உயிரின் உடலின் பொருள் தன்மை இல்லாத பகுதி.*

*இது ஒரு தத்துவார்த்தமான கருத்து.ஒருத்தர் நைந்து போன ஆடைகளைக் களைந்து விட்டுப் புதிய ஆடைகளை அணிவது போல, மரணத்தின் போது, 'ஆத்மா, தேய்ந்து போன உடலை விட்டு வெளியேறி புதிய உடலில் நுழைகிறது. ஆத்மா பற்றி விசாரம் செய்து பழகப் பழக, ஒரு நாள் ஆத்மனின் தரிசனம் கிடைக்கும். அந்த கணம் இறைக் காட்சி சித்தியாகும். இறைக் காட்சி சித்தியானவர்கள் நம் நாட்டில் பலர் உள்ளனர்; ரமண மகரிஷி ராமகிருஷ்ண பரமஹம்சர், இவர்களெல்லாம் ஆத்ம அனுபூதி பெற்றவர்கள். இவர்கெளுக்கெல்லாம் மறு பிறப்பு இல்லை. உனக்குப் புரிந்ததா?"*

*"புரிந்தது, சார். அவர்களுக்கு மறு பிறப்பு இருந்ததா; இல்லையா; என்று நமக்கு எப்படித் தெரியும்? அவர்களுடைய ஆத்மாவுக்கே தெரியுமா ; தெரியாதா; என்று நமக்குத் தெரியாது. அவர்களுடைய ஆத்மா அறிந்ததா; இல்லையா யாருக்குத்தான் தெரியும்? இதெல்லாம் ஒரு நம்பிக்கை தானே! ஒரு ப்ரூஃப் இல்லாத நம்பிக்கை . சரி; அதை விடுங்க ஆத்மா பழைய உடலில் செய்த பாவ புண்ணியங்களுக்கேற்ப புது உடலை ஏற்கிறது. அழிவில்லாத ஆத்மாவின் சுழற்சி ; இல்லையா?" என்று மீள் வினா அவனிடமிருந்து.*

*"ஆமாம் , பவுனு!' என்று ஆமோதிக்க; பவுன், "ஏன் சார்? இந்த உடலில் நாம் இருக்கும் போதே நன்மை மட்டுமே நினைத்தும் ,நன்மைகளைச் செயலில் கொண்டு வந்தால் ஆன்மாவுக்கு ஆத்ம தரிசனம் அதாவது இறைக் காட்சி கிட்டுமே! ஆத்மா இறைவனிடம் சேரும். ஆத்மா தன் சுழலில் இருந்து விடுதலை பெறும்.இதற்காக எதற்கு மெனக்கெட்டு வேண்டுதல் வைக்க வேண்டும்?*

இப்போது நீங்களே உங்களுக்கு வரம் கொடுத்துக் கொள்ள முடியும். உங்கள் ஆத்மாவுக்கு உண்மையாக நீங்கள் நல்லவனாக நடந்து கொண்டாலே போதும். வேண்டாமையை விட்டாலே போதும்; 'வேண்டுதல்' என்று ஒன்றும் வேண்டாம். சரி தானே சார்!' என்று சொல்லி முடிக்க வண்டி திருமயம் பேருந்து நிலையத்தை அடைந்திருந்தது.

திருமயம் பேருந்து நிலையத்தில் இரண்டு மூன்று பேர்களுக்கு டீயும் பன்னும் வாங்கிக் கொடுத்த பவுன், "ரொம்ப நாள் பழக்கம் சார்! ஒவ்வொரு ரூட்டிலும் இப்படி என்னை எதிர்பார்த்து காத்திருப்பார்கள். என் ட்யுடி ரோஸ்டர் என்னை விட அவர்களுக்குத்தான் கரெட்டாகத் தெரியும்." என்று சொல்லி வண்டியை புதுக் கோட்டைக்கு செலுத்தினான்.

"சார்! எனக்கு ஆத்மாவையும் தெரியாது, ஆத்ம விசாரம் பற்றியும் விசாரமில்லை. நான் சிகரெட் பிடிக்கறேன். லீவு நாட்களில் சரக்கு போடுவதும் உண்டு. ஞாயிறு சர்ச் கூட ஒழுங்கா போகமாட்டேன். என் பொண்டாட்டி கூட என்னை ஏசுவா. நான் உங்க வார்த்தையில் சொன்னா ஒரு 'பிரும்மம்.'பரபிரம்மம். ஒரு பிரகிருதி. நானெல்லாம் ஒரு தனி ஜன்மம் என்று சொன்னவன், நீங்க கொஞ்சம் கண்ணை மூடுங்க, சார்! நான் இன்னிக்கு ரொம்ப பேசிட்டேன். பாவம்; நீங்க. புதுக்கோட்டை வந்ததும் உசுப்பறேன்." என்றான்.

எனக்குத் தலை சுற்றியது போல் இருந்தது. பெரிய விஷயத்தை அசால்ட்டாக விளக்கி விட்டானே? இவ்வளவு நாளும் நான் செய்து வந்த பிரார்த்தனை எல்லாம் விருதாவா? கண்மூடி இருந்தவனுக்கு ,ஆத்மனின் தரிசனம் கிட்டியது, முற்றிலும் நான் எதிர்பாராதது. கண் முன் வந்து வரம் கொடுத்து விட்டான், பவுன்சாமி. இறைக் காட்சி ஒரு தனிப்பட்ட அறிதல் அன்றோ? அவரவருக்கு ஒரு தனி துய்ப்பு ;அதை அவரவரே அறிவர். புதுக்கோட்டை நெருங்க நெருங்க மழை லேசாக தூர ஆரம்பித்தது. குளிர் காற்று என் வெப்ப மனதிற்கு ஆறுதலாக இருந்தது.

பவுன் சொன்னது சரிதான். யாரால் அப்படி முழு நன்மையை பழகுவனாக இருக்க இயலும்? நாம் வேண்ட வேண்டியது ஒன்றே, ' சிவனே! என் அல்லவை அறுத்து, நல்லவை சேர்க்கும் அருள் புரி! ஏதேனும் ஒரு பிறப்பில் இறுதியாய் உன்னடி நிழலில் சேரும் நல்லருள் அருள்வாய்.

'நமச்சிவாய வாழ்க'!

நாதன் தாள் வாழ்க!

சக்தி| ஆகஸ்ட்|2026

# ஆளுமை என்னும் அழகிய கீரிடம்

பி.எம்.அய்னுல் அர்சியா
விவேகானந்தா கலை மற்றும்
அறிவியல் மகளிர் கல்லூரி
திருச்செங்கோடு

அடுப்புதும் பெண்கள் அது அந்த காலம்
ஆகாயமே அவள் கையில் அது இந்த காலம்

அத்தனைக்கும் அவள் அணிந்திருக்கும்
ஆளுமை என்னும் அழகிய கீரிடம்

வீட்டுக்குள்ளே பூட்டி வைத்த பெண்கள்
விண்னை நோக்கி பறந்த விண்மீன்கள்

விண்வெளி வரை பெண்ணின் சாதனை
விடியலை நோக்கி பெண்ணின் சாதனை

எதையாவது சொல்ல ஆண் போதும்
எதையுமே செய்ய பெண் மட்டுமே வேண்டும்

ஆளுமை என்னும் பேருருவம் கொண்டு
அகிலத்தை உய்விக்க வந்த அற்புத படைப்பு

ஆக்கத்தின் அடிக்கல்லாய்
ஆளுமையின் நிலைக்கல்லாய்

வேகமும், விவேகமும் நிறைந்த பெண் ஆளுமையில்,
வெற்றி நிச்சயம் இது வேத சத்தியம்

ஒடுங்குவதை தவிர்த்தாள் உயரப் பறந்தாள்
தன்னையே உளியாக்கி செதுக்கிய சிற்பமான சிற்பி

அழகும், ஆளுமையும், கொண்ட பேரரசி
இனிமையும்,ஈகையும், கண்ட இளவரசி

பெண்ணென்று சொல்லி பின்னுக்கு போகாமல்,
சோதனைகளை சாதணையாக்கும் தேவதை

சக்தி| ஆகஸ்ட்|2026

**இஸ்லாமியப் பெண் ஆளுமைகள்**

# கன்ஸா அம்மையார்

**எழுத்தாளர் சம்சுல் ஹுதா பானு**

மங்களகரமான அழகும், நற்குணங்களும், நாவன்மையும் கொண்ட வீரப்பெண்மணி கன்ஸா அம்மையார். அரபு இலக்கிய உலகில் புகழ்பெற்ற பெண் கவிஞர் இவர். கன்ஸா அம்மையாரின் புலமையை இன்றைய கவிஞர்களும் அரபுலகில் புகழ்கிறார்கள் என்பது பெருமைப்படத்தக்கதாகும்.

கன்ஸா அம்மையார் அவர்களின் தந்தை கன்ஸா சிறுவயதிலேயே இறந்து விட்டதைத் தொடர்ந்து, கன்ஸா அவர்களின் இரு சகோதரர்களும் தங்கையை மிக நல்லமுறையில் கவனித்து வளர்த்து திருமணம் முடித்துக் கொடுத்தனர். அந்தத் திருமண வாழ்வில் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்த கன்ஸா அவர்களின் வாழ்வில், அடுத்த வேதனை, சோதனையாக கண் நிறைந்த கணவர் இறந்து போகவும் மிக, மிக துன்பமாக கவலையுடன் இருந்த தங்கையை கன்ஸாவின் சகோதரர்கள் இருவரும் தேற்றி, அன்புத் தங்கைக்கு நாங்கள் இருக்கிறோம் என தைரியம் கூறி 'மறுமணம்' ஏற்பாடு செய்து 'மர்த்தாஸ்' இப்னு அபி - என்பவருக்கு திருமணம் முடித்து வைத்தனர்.

இரண்டாம் திருமண வாழ்வில் மூன்று குழந்தைகளைப் பெற்றவராக இரண்டாம் கணவர் நோய் வாய்ப்பட்டு இறந்துபோக, தான் பெற்ற மக்களை மிகச் சிறப்பாக வளர்ப்பதில் தனது முழு கவனத்தையும் குழந்தைகள் மேல வைத்தார். அப்பொழுதும் கன்ஸாவின் சகோதரர்கள் தங்கையையும் அவரின் குழந்தைகளையும் பொறுப்பேற்று கவனித்துக் கொண்டார்கள். தன்னாலும், தனது பிள்ளைகளாலும் தன் உடன் பிறந்த அண்ணன்மார்களுக்கு கஷ்டம் வரக்கூடாது என நினைத்து, தங்களது தேவைகளைக் குறைத்துக் கொண்டாலும்,

கைம்பெண்ணாக குழந்தைகளுடன் வாழ்வாதாரத்துக்கு உடன் பிறந்தோர் உதவி தேவையாகத்தான் இருந்தது. கன்ஸாவின் சகோதரர்கள் கன்ஸாவின் மனம் கோணாமல், தங்களால் இயன்றதை தங்கைக்குச் செய்வதில் முதன்மையாக இருந்தார்கள்.

இந்தச் சூழலில் கன்ஸாவின் சகோதரர்கள் இருவரும் இறந்துபோனபோது கன்ஸாவின் மனம் சுக்குநூறாக உடைந்து போனது. ஆனாலும் தான் பெற்றமக்களுக்காக தன்னைத் தேற்றிக் கொண்டு தனது விம்மலையும், வேதனையையும் "இரங்கற்பா" வாக எழுத ஆரம்பித்தார். கன்ஸா அம்மையாரின் கவிபாடும் திறமையான வெளி உலகுக்குத் தெரிந்தாலும், தன்னை ஆற்றுப்படுத்திக் கொள்ள எழுதிய "இரங்கற்பா" என கன்ஸா நினைத்தாலும் இன்றளவும் அரபு இலக்கிய உலகம் இவரின் இரங்கற்பாவைப் போற்றிப் பாராட்டுகிறது. மிக உயர்வான வார்த்தைகள், நயமான வரிகளில் அமைந்துள்ள இரங்கற்பாவை அரபி இலக்கிய உலகம் போற்றுகிறது.

கன்ஸா அம்மையார் தனது பிள்ளைகள் நால்வருக்கும் வீரமான விளையாட்டுகள், பயிற்சிகள், மரணபயம் இல்லாத மனதைத் தயார்படுத்துதல் என பிள்ளைகளை மிக, மிக தைரியசாலிகளாக, துணிச்சல் மிக்கவர்களாக வளர்த்தார்கள். தானும் அழுவது மன வேதனைப்படுவதில் இருந்து வெளியே வந்தார்கள். "வாழ்வது ஒருமுறை வாழ்த்தட்டும் தலைமுறை" என்ற வீரமிக்க பெண்ணாக கண்களில் கண்ணீர் என்பதே வராதவராக நெஞ்சுரம் கொண்டவராக மாறிப் போனார்.

*ஒரு சந்தர்ப்பத்தில் அண்ணல் முகம்மது நபியவர்கள் கன்ஸா அம்மையார் மற்றும் குழுவினரோடு உரையாடிக் கொண்டிருந்தபோது, கருத்தாழத்துடன் பொருள் நலத்துடன் தனது உரையை கன்ஸா அம்மையாரைப் பார்த்து ''சபாஷ் கன்ஸா'' எனப் பாராட்டி உங்களுடைய பேச்சு வன்மை வெளி உலகத்துக்கு வர வேண்டும் என இஸ்லாம் மார்க்கத்தின் அடிப்படை வழிமுறைகளை எடுத்து பொதுவில் பேசச் சொன்னார்கள். கன்ஸா அவர்களின் பேச்சுப் பிரசங்கத்தைக் கேட்க மக்கள் கூட்டம் அலைமோதியது, ஆதரவும் அதிகமானது.*

*அண்ணல் முகம்மது நபியவர்களின் மரணத்திற்குப் பிறகு கலீபாவாகப் பொறுப்பேற்ற உமர் அவர்களின் தம்பி ஜைது அவர்கள் போரில் மரணமடைந்த செய்தி கேட்டு கலீபா உமர் அவர்கள் மிகக் கவலையுடன் இருந்தார். நேர்மை, வாய்மையுடன் ஒழுக்கத்தைப் பேணி நடந்த தனது தம்பியின் மறைவு கலீம் உமரை கவலையில் ஆழ்த்தியபோது, கன்ஸா அம்மையார் உமர் அவர்களை சந்தித்து ஆறுதல் கூறி ஜைது அவர்களுக்காக இரங்கற்பா பாடியபோது கலிபாஉமர் அவர்கள் எனது கவலையைப் போக்கிய கருத்தாழமிக்க இரங்கற்பாவை என்னுடைய உணர்வை எனது தம்பியின் நினைவை உயர்த்திப்பிடித்த இரங்கற்பா எனப் பாராட்டி என்னை இருந்து மீட்டெடுத்த சகோதரி தாங்கள் என உளமாறப் பாராட்டினார். கன்ஸா அம்மையார் கவிதையில், சொல்வன்மையைச் சேர்த்து கவலையைப் போக்குமளவு திறமையாக கவிதைகளை இயற்றும் திறமை பெற்றவர்.*

**புறநானூற்றுப் பாடல்**

*''நரம்பு எழுந்து உலறிய நிரம்பா மென்தோள்*
*முளரி மருங்கின் முதியோள் சிறுவன்*
*படை சுழிந்து மாறினன் என்று பலர் கூற*
*மண்டு அமர்க்கு உடைந்தனன் ஆயின் உன்உ என்*
*முலை அறுத்தெறிவேன் யான் எனச் சினைக்*
*கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்*
*செங்களம் துழவுவோள் சிதைந்து வேறாகிய*
*படுமகன் கிடக்கை காணுரஉ*
*ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தளளே''*

**பொருள்:**

நரம்புகள் வெளியே தெரியும்படி சதை நிரம்பாத உலர்ந்த மெல்லிய தோள்கள் கொண்ட தாமரை சிலை போன்ற அடி வயற்றினையுடைய முதியதாய், தன் மகன் போருக்கு அஞ்சிப் புறமுதுகிட்டான் என்று பலர் கூறக்கேட்டு நெருங்கிப் போரிடும் போர். களத்தில் என் மகன் தோற்று ஓடினான் என்றால் அவன் பால் உண்ட என் முலைகளை அறுத்திடுவேன் என்று கூறிக் கோபம் கொண்டு கையில் வாளோடு போர்க்களம் நோக்கிச் சென்றாள். அங்கு கிடந்த மறவர்கள் பிணங்களைப் பெயர்த்துப் பார்த்தபடி குருதியால் சிவந்த போர்களம் முழுவதையும் தேடித் துழாவினாள். சிதைந்து துண்டு, துண்டாக தன்மகன் கிடப்பதைக் கண்டதும் அவனைப் பெற்ற நாளில் அடைந்ததைவிடப் பெரு மகிழ்ச்சி அடைந்தாள் தமிழ் மறப்பெண் என்பதை நாம் அறிவோம்.

அரபு மறப்பெண்ணாக கன்ஸா அம்மையார் தனது நான்கு மகன்களையும் போருக்கு அனுப்பி வீரமரணம் அடையச் செய்த வரலாறும் ‘‘பெண் என்பவள் எந்த இனத்திலும் பெண்தான் என்பதை உறுதிபட அறியலாம்: கன்ஸா அம்மையார் உறுதியான இறை நம்பிக்கை, தனது பிள்ளைகளுக்கு இறைபோதனைகளை தீர்க்கமாகச் சொல்லித் தந்து வளர்ந்தவிதம், ‘‘காதிஸிய்யா’’ போர் கலீபா உமர் ஆட்சியில் நடந்தபோது, தான் பெற்று பாசத்துடன், நேசத்துடன் வீரத்துடன் வளர்த்த நான்கு மகன்களையும் போர் புரிய அழைத்து வந்து, நான் பெற்ற மக்களே! நீங்கள் வீரமாகப் போர் புரியுங்கள் கன்ஸாவின் பிள்ளைகள் கோழைகள் அல்ல என்பதை நிரூபியுங்கள். கணவர் உடன் பிறந்தவர்கள் துணை இல்லாது போனாலும் துணிச்சலான, தைரியமான பிள்ளைகளாக உங்களை நான் வளர்த்துள்ளேன். ‘‘வெற்றி அல்லது வீரமரணம் உங்களதாகட்டும் என போருக்குப் பிள்ளைகளை அனுப்பினார் அந்த வீரத்தாய்.

தம்முடைய பிள்ளைகள் நால்வரும் போரில் வீரமரணம் எய்தியதை அறிந்த கன்ஸா அம்மையார் தன் இருதயத்தை இரும்பாக்கி பிள்ளைகள் மரணத்தை ஏற்றுக்கொண்டு எந்த சஞ்சலமும் இல்லாமல் போருக்கான அடுத்தடுத்த, பணிகள் செய்ய தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டார். போரில் வீரர்களுக்கு உதவியாளராக பணியைத் தொடர்ந்தார். தனது தந்தை சகோதரர்கள், கணவர் இறந்தபோது அழுது புலம்பித்திரிந்த பெண் இல்லை. தன்னையும், தனது பிள்ளைகளையும் தீரமிக்க செயல்களுக்கு ஒப்படைத்த உயர்ந்த மனம் கொண்ட வீரப் பெண் என கன்ஸா அம்மையார் உலகம் உள்ள மட்டும் போற்றப்படுவார்.

## வாழ்வமுதம் தா

முத்தமிழ் விரும்பி



*உனக்கென்ன கண்ணே*
*ஏதேனும் சொல்லி*
*உறங்கப் போய்விடுவாய்*
*இரவென்பது*
*ஏகாந்தம் அல்ல கண்மணி*
*சமயா சமயத்தில் நினைவலைகள்*
*துள்ளி எழுந்து*
*நனைகிறது குளிர்*

*இவள் ராட்சசியா இல்லை*
*ரட்சகி தான் என்கிறது*
*நள்ளிரள் விழிப்பு.*
*இற்றைக் கணத்தின்*
*இடர் களைய*
*வாயமுதல்ல கண்ணே*
*வாழ்வமுதம் தா*

# பெண்ணும் எழுத்தும்

நூல் : காத்திருப்பு

ஆசரியர் : வித்யா மனோகர்

பக்கங்கள்: 102

வெளியீடு : ஒருதுளிக்கவிதை, புதுச்சேரி, ஆண்டு 2021

நூல் விமர்சனம்: கா. ஹபீப் முகமது.

***இரண்டாம் காக்கைப்பாடினி***

*‘காத்திருப்பு’ என்ற இந்நூல் ,ஆசிரியர் வித்யா மனோகர் அவர்கள் படைத்துள்ள இரண்டாவது நூலாகும். கவிதை இவருக்கு சுவாசக்காற்று என்றால் அது மிகையாகாது. ஈரோடு தமிழன்பன் தனது குறிப்புரையில் நூலாசிரியரை, ‘இரண்டாம் காக்கைப்பாடினி’ என்று விளித்திருப்பது இதற்குச் சான்று பகரும்.*




*சென்னை பிறந்த ஊர்; தற்போது புதுச்சேரியில் வசிக்கும் இந்நூலாசிரியர், தமிழ் இலக்கியத்தில் முதுகலை பட்டாதாரியாவார்.*

*நூல் முழுவதும் எளிமையான பதங்கள் மற்றும் வரிகள் முகிழ்த்திருப்பது நூலின் வெற்றிக்குப் படிக்கற்களாக உள்ளன. இந்நூலில் காத்திருப்பு1, காத்திருப்பு2 என்று 30 கவிதைகள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு கவிதையும் ஒரு விதத்தில் வாசிப்பவர்களை ஈர்ப்பதாக உள்ளது.*

*‘காத்திருப்பு’ என்றவுடன் காதல் அல்லது நட்பு தொடர்பான கவிதைகள் இருக்கக்கூடும் என்று வாசிப்பவர்கள் முடிவு செய்திட முடியும். இந்நூலில் பெரும்பாலும் காதல் மண(ன)ம் வீசுவது உண்மை; ஆனால் அது ஆழமாக உள்ளது.*

காத்திருப்பு 8 என்ற தலைப்பில், ஒருவரின் காதல் அல்லது அன்பு எந்த அளவிற்கு மற்றொருவரின் மனத்தைப் பற்றியுள்ளது என்பதை கீழ் உள்ள கவிதை அழகாக எடுத்தியம்புகிறது:

'இரையை
இறுக்கி அழுத்தும்
சாரைப் பாம்பென
உன்
நினைவுகள்
என்னை அழுத்துகையில்
நானும்
அந்தியில்
சந்தித்த நம்
பொழுதுகளைச்
சிந்தித்துக் கொண்டிருப்பேன்....

இக்கவிதையை வாசிக்கும்போது குளிர்ந்த காற்றினை உள்ளிழுப்பது போன்ற ஓர் உணர்வு ஏற்படுகின்றது.

காதலில், எப்போதுமே இன்பம் மட்டும் பூப்பதில்லை. கோபம், வருத்தம், ஊடல் என்று ஏதாவது ஒன்று தோன்றி மறைந்துகொண்டுதானிருக்கும். இருவருக்கும் இடையில் இப்படித்தான் ஒரு சூழ்நிலை உருவாகிவிடுகிறது. கோபத்தில் அவன் உதிர்த்த வார்த்தைகூட அவளைக் காயப்படுத்தவில்லை; மாறாக அவன் காக்கும் மௌனம் அவளைக் கொல்லுகிறது. இதோ காத்திருப்பு12 ல் சில வரிகள் உங்களுக்காக :

'... நீ
உதிர்த்த
வார்த்தைகளின்
வெப்பத்தைவிட
உன் மௌனத்தில்
நான்
உடையாதிருக்க
என்
பொறுமை
போதுமானதாக
உள்ளது....

இருவருக்கும் இடையே ஏற்பட்ட சூழ்நிலையை விளக்குவதற்கு மிகவும் பொருத்தமான வரிகளை ஆசிரியர் இங்கே கையாண்டுள்ளார். சமூக அக்கறை

மிகுந்த கவிதை ஒன்று அனைவரது மனத்தையும் ஆழமாகத் தொடுவதாக உள்ளது. மரங்கள் மக்கள் சமூகத்திற்கு இயற்கை தந்துள்ள வரம். அவற்றின் முக்கியத்துவம் குறித்து காத்திருப்பு18 என்ற கவிதையினை வாசிக்கலாம்:

வித்யா மனோகர்

'..கற்றும் பயனின்றி
சற்றும் சிந்திக்காமல்
பெற்றும் சேமிக்காமல்
வற்றும் நிலைக்கு
வழிவிட்டோம்
மரங்களைக் காவுகொடுத்து
மழை வரம் கேட்கும்
மடமை மடியட்டும்
மண்டியிடுவோம்
மரங்கள் மன்னிக்கட்டும்ய
மழை மனமிரங்கட்டும்..'.

இது அருமையான சிந்தனையாகவுள்ளது. காத்திருப்பு 29 என்ற தலைப்பில், பொறுமையற்ற, பொய்த்தோற்றம் கொண்ட மனித வாழ்வில், பகல் இருண்டுகிடக்கிறது; இரவு வெளிச்சப் பட்டறையாக இருப்பதை நூலாசிரியர் வலிகள் நிறைந்த வார்த்தைகளில் கொட்டியுள்ளார்.

'... எங்கும்
ஆரவாரம்...
எதிலும்
அவசரம்...
அரிதாரம் பூசிய
முகங்கள்....
பகல்
பொய்களைச்
சுமக்கும்
கல்லறை.
இரவு
வெளிச்சத்தின்
பட்டறை. '.

இந்த நிலை உறவுகளிலும் உள்ளது என்பதனை உணரமுடிகிறது.

இப்படி, சொல்ல வரும் கருத்துக்களைச் சிறப்பாகவும் தேவையான இடங்களில் நளினமாகவும், வேண்டிய நேரத்தில் அழுத்தமாகவும் சொல்லியுள்ள விதம் பொருத்தமாக அமைந்துள்ளது பாராட்டுக்குரியதாகும்.

## கருவறை

இரா. சைலஜா சக்தி,
சென்னை.

பூமிதொடும் முன்
வானைக் காணும் முன்
காற்று நம்மை ஸ்பரிசிக்கும் முன்
நாம் வாழ்ந்த ஓர் இடம்

காற்று அறியோம்
மழை அறியோம்
கவலையும் அறியோம்
நாம் வாழ்ந்த ஓர் இடம்

நரம்புகள் பெற்றோம்
எலும்புகள் பெற்றோம்
திசுமுதல் உதிரம்வரை பெற்றோம்
நாம் வாழ்ந்த ஓர் இடம்

கேட்காது உணவு கிடைத்த இடம்
பசியறியாது உண்ட இடம்
ருசியறியாது உண்ட இடம்
நாம் வாழ்ந்த ஓர் இடம்

நம் பசியை
நாம் அறியும் முன்னரே
தான் அறியும் ஓர் இடம்
நாம் வாழ்ந்த ஓர் இடம்

உடல் தந்தது
உடல் வாழ உயிர் தந்தது
உயிர் வாழ உணவு தந்தது
நாம் வாழ்ந்த ஓர் இடம்

நடை பயின்றோம்
மொழி பயின்றோம்
நம்மைப் பார்த்து நெகிழ்ந்தது
நாம் வாழ்ந்த ஓர் இடம்

கல்வி கற்றோம்
வினாக்கள் தொடுத்தோம்
விடைகள் பகன்றோம் – வியந்தது
நாம் வாழ்ந்த ஓர் இடம்

வெற்றிகள் பெற்றோம்
தோல்விகள் கண்டோம்
இரண்டிலும் நமக்காக வாழ்ந்தது
நாம் வாழ்ந்த ஓர் இடம்

சாதனைகள் புரிந்தோம்
நோயுற்று வீழ்ந்தோம்
இரண்டிலும் தாங்கிப் பிடித்தது
நாம் வாழ்ந்த ஓர் இடம்

உயிர் படைக்கும் இறை
வாழும் ஓர் இடம் – கருவறை
அஃது ஆலயத்தின் கருவறை
இறை படைக்கும் உயிர்
வாழும் ஓர் இடம் – கருவறை
அஃது அன்னையின் கருவறை.

நாம் வாழ்ந்த ஓர் இடம்
அன்பின் கருவறை!!
அஃது அன்னையின் கருவறை
என்றும் அன்பின் கருவறை!!

# தைரிய லக்ஷ்மி

வை.மு.கோதைநாயகி அம்மாள்

அத்தியாயம்-3

தடதடவென்று வெளியே சென்றான். ஒவ்வொருவருடைய வார்த்தையும் அவன் செவியில் ஒலித்து இதயத்தைத் தாக்குகிறது. இதென்ன போராட்டமான வாழ்க்கை. தனி அறையில் இருந்தாலும் நிம்மதி இல்லை. சினிமாவுக்குச் சென்றாலும் அங்கும் கதையில் வரதக்ஷிணையின் கொடுமை யைப்பற்றிய இலந்தானா? அதில்வரும் ஒவ்வொரு கபரும் சுடச்சுடச் சொல்லும் வார்த்தைகள் என்னை நையாண்டி செய்துக் குத்திக் காட்டி ஏளனமாகச் சிரிப்பதுபோலல்லவா தோன்றுகிறது. சீச்சீ ! இந்தப் பேயின் தாண்டவத்தைச் சினிமாவில் பார்த்தால் என்ன? நாடகத்தில் பார்த்தால் என்ன? மக்களுக்குப் புத்திவரப்போகிறதா என்ன! இக்கொ டிய வரதக்ஷணை முன்பெல்லாம் ப்ராமணர்கள் சமூகத்தில் மாத்திரம் தா கண்டவம் செய்ததாகவும் மற்ற வகுப்பாரிடம் இல்லை என்றும் சொல்வதுண்டு. இப்போதா! அடேயப்பா! சர்வ ஜாதியிலும் புகுந்து அந்தப் பேய் எக்காளமிட்டு உருமு கிற கோராமை என்றுதான் மறையப்போகிறதோ?

மாதங்கள் ஒடி மறைந்து ஒரு வருஷ காலமும் ஆகி விட்டது. என் வாழ்க்கைப் பாதையிலிருந்து ஒரு அடிகூட எடுத்துவைக்கும் மாறுதல் உண்டாகவில்லை. நான் ன் லீவுக்குப் போகாததால் அம்மாதான வருந்திக் கடிதம் எழுதியிருக் கிறாளேயன்றி அப்பா எத்தகைய சந்தடியும் இல்லாமலிருக் கிறார். நந்தினியும் அப்பாவின் அந்தக் கடிதத்திற்குப் பிறகு ஒரு கடிதங்கூட எழுதவில்லை. அவள் காலேஜில் சேர்ந்து படிப்பதாகச் சிலர் சொல்கிறார்கள். சிலர், 'வீட்டில் தண்டப் பொழுது போக்கும் நீ எங்களுக்கு ஒத்தாசைக்கு வந்திரு' என்று உடன்பிறந்த சகோதரிகள் இளப்பமாகக் கூறுவதாக வும் அதனால் இவள் குன்றிவிட்டதாயும் சிலர் சொல்கிறார்கள். எது நிஜமோ? எது பொய்யோ! நிம்மதியற்ற மனத்திற்கு விமோசனந்தான் ஏது? என்று வைத்யநாதன் பாதிசினிமாவி லிருந்து எழுந்து தன் தனியறைக்கே வந்து சேர்ந்தான்.

அன்றைய மாலைப் பத்திரிகை அப்போதுதான் வந்தது. வழக்கப்படி பத்திரிகையைப் பிரித்தான். அதில் பலபல விஷ யங்களும் புகைப்படங்களும் இருந்தன. அவைகளில் ஒன்று வேஷங்களணிந்த சிலமாணவிகள் ஏதோ நாடகம் நடித்தபோது எடுத்த புகைப்படமும் அதன் விவரமும் கீழே குறிப்பிடப் பட்டிருந்தது.

மகாத்மாஜி கல்லூரியில் வருஷாந்திர விழா கவர்னர் தலைமையில் நடந்தது. அக்கல்லூரி மாணவி நந்தினிவைத்ய நாதன் என்கிற மாதரசி "வரதக்ஷிணை பூதம்" என்கிற கதையைத் தானே எழுதி தானே கதாநாயகி பாத்திரம் ஏந்தி நடித்தார்கள். அந்த நாடகத்தின் பாத்திரங்கள் மற்ற மாணவிகள். மத்தியில் இருப்பவர் கவர்னர் ஜோதராய். பக்கத்தில் இருப்பவர் கல்லூரி ப்ரின்ஸிபால். இந்த நாடகம் மிகவும் நன்றாயிருந்த தாகவும் வரதக்ஷிணை பூதம் உலகத்தையே உறிஞ்சு அழிக்க வந் திருக்கும் காளகோடி விஷத்திற்குச் சமமானது என்றும் அந்தக் கொடிய பூச்சி எப்படியோ நம் சமூகத்தில் புகுந்து விட்டதென்றும், அதை அடியோடு விறட்டியடித்து அதற்கு முற்றுப் புள்ளிவைத்து சாவுமணி யடித்து விடவேண்டும் என்றும் ஸ்ரீமதி நந்தினி வைத்யநாதன் சிருஷ்டித்த கதை மிகமிக ஸ்வாரஸ்யமாயிருந்ததோடு அவர் நடித்த நடிப்பு அபாரமாய் உணர்ச்சி ததும்ப காண்போர்களின் இதயத்தைத் தொட்டுக் கண்ணீரைக் கக்கவைத்து ஆட்டிவிட்டது என்றாலும் மிகையாகாது. அந்தக் கதையில் சொல்லியபடி இக்கொடுமையை ஒழிக்க சட்டம் அவச்யம் கொண்டு வர வேண்டியது தான் என் பதை நான்கூட ஒப்புக்கொள்கிறேன். சீக்கிறத்தில் அம்மாதிரி யொரு நல்லகாரியத்தைப் பொதுமக்கள் ஒன்றுகூடிச் செய்யத் தூண்டி சட்டமாக்கப் பாடுபடவேண்டும் என்றும் கவர்னர் பேசினார்: காலேஜ் ப்ரின்ஸிபால் ஸ்ரீமதி சகுந்தலாதேவி நந்தினி வைத்யநாதனைப் பாராட்டிப் பேசி அவருக்கு மாலை சூட்டினார்.

என்று வரைந்திருந்ததைப் படிக்கப்படிக்க வைத்யநாத னின் கண்ணீர் கட்டுமீறி வழிந்தோடுகிறது. நந்தினி வைத்ய நாதன்/ என்னபொறுமை! வேண்டாமென்று விலக்கிய என்னைத் திரஸ்கரித்துத் தள்ளிவிடாமல் தற்கால நாகரீகத்தையொட்டி என் பெயரைக் கூடசேர்த்துக்கொண்டிருக்கிறாளே? இதை அப்பா பார்த்தால் என்ன ஆட்டம் ஆடுவார்! என் பெயரை வைத்துக்கொண்டது ஒரு குற்றம், நாடகம் எழுதினது இரண் டாம் குற்றம், அதில் அவள் நடித்தது எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்ததுபோலான குற்றம், அவள் காலேஜில் படிப்பது

மன்னிக்கமுடியாத குற்றம். ஆக நான்கு குற்றங்களுக்கும் இப்போது நந்தினி ஆளாகிவிடுவாள் என்பதில் ஐயம் இல்லை. அடாடா! தன்னுடைய அனுபவத்தையே! தன்னுடைய- உணர்ச்சிகளையே கொட்டி எழுதியும் நடித்தும் சிறிது தணித் துக்கொண்டாளா! இந்தப் பத்திரிகையில் உள்ள இந்த விஷ யத்தை அப்பாவின் சினேகிதர்களும் பந்துக்களும் படித்தால் என்ன மதிப்பார்கள். அப்பாவின் அசட்டுக்குணம் எத்தனை தூரம் பாதிக்கப்பட்டு ஏச்சுக்கும் பேச்சுக்கும் இடமாகி விடும். அதனால் அவர் மனது இன்னும் எப்படித்தான் கோபமடையுமோ! தெரியவில்லையே? இதனால் என்ன அனர்த் தம் விளையுமோ! என்று வைத்தியநாதன் மனது தவிக்கிறான்.

நந்தினிக்கே கடிதமெழுதி அந்தக் கதையை எனக்கு அனுப்பும்படி கேட்டால், அனுப்புவாளா? ஊம். ஒருபோதும் அனுப்பமாட்டாள். அவளைக்கேட்பதால் என்னுடைய முட் டாள்தனந்தான் வெளியாகும்.. இதைவிட காலேஜ் ப்ரின்ஸ் பால் ஸ்ரீமதி சகுந்தலாவுக்குக் கடிதமெழுதினால் ஒருவேளை கிடைக்கலாமல்லவா! ஆம்! இப்படித்தான் செய்யவேண்டும். என்று தீர்மானித்து உடனே கடிதம் எழுதத் தொடங்கினான்.

மரியாதைமிக்க ப்ரின்ஸ்பால் அவர்களுக்கு

நான் ஒரு காலேஜ் மாணவன். இன்று நேயன் என்கிற பத்ரிகையில் உங்கள் காலேஜ் வருஷ விழாவின் கொண்டாட்ட வைபவமும் புகைப்படமும் பார்த்தேன். வரதக்ஷிணை என்கிற பேயை விறட்டி யடிக்கக் கங்கணங் கட்டிக் கொண்டுள்ள கோஷ்டியைச் சேர்ந்தவன் நான். தங்கள் காலேஜில் நடை பெற்ற நாடகத்தைப்பற்றி நேசனில் படித்தபோது நாங் களும் அதே நாடகத்தைப் போட்டு ஒருகிளர்ச்சியும் புரட்சியும் உண்டாக்கி வரதக்ஷிணை வாங்கும் பிள்ளைவீட்டுக்காரர்க ளாகிய கொள்ளைக்காரர்களை ஒரு ஆட்டு ஆட்டி வைக்க மிக வும் ஆசைப்படுகிறோம். இத்தகைய உபயோகமான கதையை எழுதியும் நடித்தும் புகழ்பெற்ற உங்கள் சிறந்த மாணிக்கம் போன்ற மாணவியாகிய ஸ்ரீமதி நந்தினி வைத்யநாதன் அவர்களுக்கு எங்கள் சந்தோஷத்தையும் பாராட்டுதலையும் தெரி விக்கவும். அந்தக்கதை அச்சு ஏறாத கையெழுத்து ப்ரதியா யிருப்பினும் தேவலை, அதை தயவு செய்து அனுப்பினால் பார்த்து ஒரு காப்பி நாங்கள் எடுத்துக்கொண்டு உடனே திருப்பி அனுப்பிவிடுகிறோம். உங்கள் மாணவியிடம் இதற்கு அனுதியும் வாங்கியனுப்பவும். ஏதாவது நிபந்தனைகளோ, கட்டணம் செலுத்த வேண்டியதோ இருந்தால் அதையும் தெரிவிக்கவும்.தாராளமாக அப்படியே நடந்துக்கொள்வோம்,

இந்த உதவியைத் தாங்கள் செய்தால் என்றுமே மறக்கமாட்டோம். பாரதமாதா கல்லூரிக்கு மகாத்மாஜி கல்லூரி உதவுவது மிகமிகப் பொருத்தமானதாகும்.
உடனே அனுப்பவும்.
இங்ஙனம்
வைதீச்வரன்.
என்று கடிதமெழுதி உடனே உரையிட்டு அனுப்பினான். இம்மாதிரி செய்வது சரியா ! இதனால் அப்பாவுக்குக் கோபம் அதிகமாகி என்ன நேருமோ என்ற பயமும் ஊடே சற்று வதைத்தது எனினும் தனது மனத்தில் பொங்கும் ஆத்திரம் தணிவதற்கு இது ஓர் வழியாகவே தோன்றியது. அவைகளை அனுப்பிய பிறகே மனத்தில் ஒரு நிம்மதி நிலவியயது.

மறுபடியும் இன்னொரு பத்திரிகை விலை கொடுத்து வாங் கினான் அதில் நந்தினியின் உருவம் சிறிது வேஷத்தினால் மாறி இருப்பினும் மல்கோவா மாம்பழம் போன்ற கன்னங்க ளின் எடுப்பும் சண்பகப்புஷ்பம்போன்ற தீர்மையான மூக்கின் அழகும் கயல்விழிகளின் ப்ரகாசமும் சடக்கென்று தெரிந்து விட்டது. கல்யாணத்தன்று எடுத்த புகைப்படத்தையும் இந்த படத்திலிருக்கும் நந்தினியையும் ஒப்பிட்டுப் பார்த்தான். உடல் மெலிவின் வித்யாஸமும் முகத்தில் ஒரு விதமானசோக மும், ஏக்கம், கவலை, முதலிய ரேகைகள் படர்ந்திருப்பதும் வெகு நன்றாகத் தெரிந்தது. தண்ணீரில் வாழவேண்டியமீனைத் தரையில்போட்டதுபோலிருக்கும் பரிதாபத்தைக் காண உண்மையில் தன் பிதாவின்மீது வந்த கோபமும் அடங்காத வெறுப்பும் அவனைக் கட்டு மீறி நடக்கும்படிச் செய்து விடும் போன்ற பயமும் உண்டாகியது. பத்திரிகையைப் புரட்டிக் கொண்டே வந்தான். பத்திரிகைக்காரர்கள் எழுதும் செய்திச் சுருள்பத்தியில் அந்தநாடகத்தின் விமர்சனம் வந்திருப்பதைக் கண்டு பரமசந்தோஷத்துடன் அதைப்படிக்கலானாள்.

“மகாத்மாஜி காலேஜின் வருஷாந்திரவிழா மேன்மை தங்கிய கவர்னரவர்களின் தலைமையில் நடைபெற்றது... இக் காலேஜ் ஆரம்பித்து சுமார் பத்து வருஷங்களாகிறது. பத்து வருஷத்திற்குள்ளாக இக்காலேஜ் மிகமிக உயர்ந்த நிலைமையில் வ்ருத்தியாகிவருகிறது குறிப்பிடத்தக்கது. கல்லூரி போதனா முறையைத் தவிர கைத்தொழில் வளர்ச்சி சமூகசீர்திருத்த ஸேவை, மாண னவிகள் ஒன்றுகூடி சன்மார்க்கத்தில் ஐக்ய பாவத்துடன் பலதுறைகளிலும் முன்னேற்றமடையவும் தொண்டு புரிவதற்காகவும் மகாத்மாஜி ஸேவாசங்கம்

என்ற ஒரு சங்கத்தை ஸ்தாபித்து அதைமிகமிகச் சிறந்த முறையில் நடத்திவருகிறார்கள். இவ்வருஷ விழாவன்று பொதுமக்கள் உள்ளங்களை உருக்கும் வண்ணம்''வர தக்ஷிணைப்பேய்'' என்கிற நாடகத்தை நடத்தினார்கள். கதையை எழுதிய மாணவி ஸ்ரீமதி நந்தினி-வைத்யநாதன் அவர்களே கதாநாயகியாக நடித்து ஒருபெரும்புரட்சியை விளைவித்துவிட்டார்கள் முக்ய மாய் கதையில் சில பாகங்களைக் குறிப்பிடாமலிருக்க முடியாது.

கதாநாயகியாகிய இந்திரா என்பவள் வரதக்ஷிணையும் சீரும் சிறப்பும் போ தவில்லை என்கிற காரணத்தினால் தள்ளப் படுகிறாள். அவள் தானாகப் புக்ககம் சென்று மாமியார் மாமனார்காலில் விழுந்து தன்னை வேலைக்காரியாகவாவது ஏற் றுக் கொள்ளுங்கள் என்று கெஞ்சும் காட்சி மனத்தை உருக் கியது. கணவனிடம் வந்து இவ்வடிமையைக் கைவிடலாமா? அக்கினி சாக்ஷியாகக்கைப்பற்றிய ப்ரமாணத்தை மீறலாமா? என்பிதாவின் நிலைமைக்கு மனமிரங்கி என்னை ஒருவேலைக்காரி போல் நடத்தக்கூடாதா ! பதியின் கடமை சதியைத் தவிக்க விடுவதுதானா? பணத்திற்கா நீங்கள் மாலை இட்டீர்கள்? மாலை யிட்ட பெண்ணுக்கு தயை காட்ட உங்கள் இதயத்தில் பசை யில்லையா? நான் இப்படித்தவிப்பதுதான் உங்கள் விருப்பமா; சமூ முகத்தின் பெருமை இதுதானா! இந்து தர்மத்தின் மகிமை இதுதானா! நாட்டின் லக்ஷயங்கள் இதுதானா' நான் தற்கொலை புரிந்து கொண்டால் அந்த பாதகம் உங்கள் காலைச்சுற்றாதா! ஒரு பெண்ணை அக்கினிசாக்ஷியாகக் கைப்பிடித்ததன் அடை யாளம் அவளை அக்கினிபகவானுக்கு இறையாகச்செய்வது தான் வீரபுருஷர்களின் தீரச்செயலா! உங்கள் காதில் என் கதறல் கேட்கவில்லையா! இம்மாதிரி வரதக்ஷிணைப்பேயின் நிர்மூலத்தாண்டவத்தின் பரிபவத்தில் மனது கொதித்து உடைந்து சின்னபின்னமாய்ச் சிதறிப் போவ தன் விளைவால் அப்பெண்ணின் வாழ்வே பாழ்படுகிறது. சில இடங்களில் தகாத துன்மார்க்க வழிகளிலும் சென்று பாவியாகிறாள். இத் தகைய கதிக்குக்கொண்டுவந் தகணவனை – கொள்ளைக்கூட்டத் திற்கொப்பான பிள்ளைவீட்டுக்காரர்களை சமூகம் 'ஒன்றுமே செய்வதில்லை.

இத்தகைய சதிகாரர்களின் செய்கையினால் மனமுடைந்து நாசமாய்விடும் பெண்களைப் பாழும் சமூகம் ஏற் பதில்லை. ப்ரஷ்டம் செய்து வேடிக்கைப் பார்க்கிறது. பின்னும் ஏசிப்பேசி இளப்பமாக்கி மடியச்செய்கிறது. சண்டாளசமூ கத்தின் ஊழலை வளர்க்கும் புல்லுருவிகளைக் கண்டிக்க எந்தச் சட்டமும் இல்லை.

நீதியும் இல்லை. பெரியமனிதர்கள் என்று பட்டம், பதவி, பணம் இவைகளுக்காகவே உயிர் வாழும் பொம்மைகளும் வருவதில்லை. இந்த அனியாயத்தைக் கேட் பாரில்லையா! இந்த அக்ரமத்தை அடக்குவாரில்லையா! கடவு ளுமா கண்மூடிக்கொண்டு மவுனம் சாதிக்கிறது...

என்று இன்னும் ஏதேதோ வார்த்தைகளை ஆத்திரம் மீறிய உணர்ச்சியுடன் கடச்சுடசொல்லிநடித்த நந்தினிவைத்ய நாதனுக்கு முன்பு ஒரு தொழிலாளியான நாடகக்காரர்களும் வெட்கித்தலை குனியவேணும். கடைசீயில் நந்தினி, ''கொடிய வரதக்ஷிணைப்பேயே! எத்தனைக் குடும்பங்களில் நீ புகுந்து நாசச்தையும் க்ஷாமத்தையும் விளைவித்தும் இன்னும் உன் கொடிய பசி தணியவில்லையா! உன் ரௌத்திரத்தாண்டவத் தின் ஜதிஸ்வர அடைவுகள் முடியவில்லையா! இன்னும் சீற்றம் தணிந்து த்ருப்தி உண்டாகவில்லையா! இந்த உலகத்தில் இல் லாத பொல்லாத பெயர்களுடன் பில்லி சூன்யம் பேய் பிசாசு ஏவல் என்று உலாவும் கொடுமைகளை ஒட்டி த்வம்ஸம் செய்ய பல மந்திரவாதிகள் மூலை முடுக்குகளில் தோன்றி அவர்களே பெரிய ஆட்டம் ஆடவும், ஆட்டிவைக்கவும் சில பாவிகள் வேஷக்கார மந்திரவாதிகள் எத்தனையோ குடும்பங்களை இந்த வ்யாஜத்தின் மூலம் கெடுத்துக்குட்டிச்சுவரடிக்கவும், படிப்பே இல்லாத பட்டிக்காட்டு மூடஜனங்களை-ஏன் படித்த பட்டிண வாஸத்து ப்ரமுகர்களையும்கூட ஆட்டிவைக்கக்கிளம்பியிருக்கி றார்களே! உன்னைத் துலைத்துத் தலைமுழுகவும், உனக்குச் சாவுமணி யடித்துக் குழிதோண்டிப் புதைக்கவும் – உன்னை பூண்டோடு கிள்ளி எ றியவும் ஒரு மந்திரவாதியும் இல்லையா? உன்னுடைய கொடிய அரசாட்சி இருக்கும் வரையில் உலகம் உருப்படப்போவதில்லை. ஹதமாகிப் பொடி சூர்ணமாகி சூன்ய மாகி வரண்ட பாலை வனமாகி மடியத்தான் போகிறது.

ஹே! வரதக்ஷிணைப்பேயே! கருப்புமார்கெட்டில் கொள் ளையடித்தவனும் லஞ்சம் வாங்கி பெரிய பணக்காரனாகியவனும் தரகுவ்யாபாரம் செய்பவனும் சூதாடி குதிரைப்பந்தயமாடி மோசடியில் ஜெயித்துப் பணம்சேர்த்த பாதகர்களும் செய் யும் அட்டகாஸத்தைக்கண்டு,க்ரா ராமாந்திரங்களில் உழுது பயிரிட்டு ஊணும் உடையும் வாழ்வுக்கான சகல சம்ரக்ஷணையும் செய்து கொள்ள ஆகாயத்தை எதிர்பார்த்துஏங்கும் ஏழைக் குடிமக்களையுமா நீ பிடித்து ஆட்டுகிறாய்.

மாதம் 50 ரூபாய் சம்பளத்தில் 5-6-ஆத்மாக்களை வைத்து ரக்ஷிக்கும் வகையின்றி, தற்காலம் புதிய கொள்ளையாகிய வீட்டுக்கு அட்வான்ஸ் பணத்தைக்கொட்டித் துலைக்கக் கதியின்றி, அன்றாடம் காலக்ஷேபம் எப்படி

ஆகப்போகிறது என்று கதிகலங்கித் தவிக்கும் குடும்பத்திலும் நீ புகுந்துகாசம் செய்கிறாய்! உன்னை ஒழித்துத் தலைக்கட்ட உலகில் யாருமே இல்லையா... என்போ போன்ற பாவிகள் கணவனால் விலக்கப்பட்ட அவமானத்துடன் தாய் வீட்டிலும் சிறுமைப்பட்டுச்சாகும் நிலைமை: ஊரிலும் மதிப்பில்லை, வாழாவெட்டி! வாழாவெட்டி என்கிற ஏச்சு: சுற்றத்தவர்கள் இகழ்வது. படித்துப்பயன் பெறப் பணமில்லை. சிபார்சு செய்ய மனிதரில்லை, மனிதரிருந் தால் மனமில்லை, உதவி செய்ய உற்றாரில்லை, எப்படியோ படித்து வருத்திக்குவந்தால் வேலை யில்லாத் திண்டாட்டம். போக்கிரிப்பாவிகளின் கண்வலைக்குத் தப்பமுடியாத பயங்கரம் அப்பப்ப! ஒன்றா இரண்டா! வெறிபிடித்தப் பேயே ! என் போன்ற இளநங்கைகளின் உயிரைப் பலி வாங்கிக்கொண்ட பிற காவது உன்னை ஒழித்து விடும் நல்ல காலம் உலகத்திற்கு வருமா! அப்போதும் வராதா!கட்டிய கணவனும் வரதக்ஷிணை வரதக்ஷிணை என்று இரவு பகல் கொள்ளிவாய்ப் பிசாசுபோல் பறக்கும் அற்பமதியுடையமாமனார் மாமியார் முதலிய எல்லோ ரும் அந்தப் பெண் மடிந்த சுகத்தை, சந்தோஷத்தை, வாழ்க் கையில் இன்பத்தை அடைந்து வாழட்டும். இதோ! இதோ! நான் பலியாகிறேன். வரதக்ஷிணைப்பேயே! என்னை விழுங்கி ஏப்பமிடு, இந்தச் சந்தோஷத்தை என் கணவனிடமும் என் மாமனாரிடமும் கூறிக் கும்மாளமிடு " என்று ஒரே உணர்ச்சி வெள்ளத்துடன் ஆவேசம்வந் தவளைப் போலக் கூறிவிட்டுக் கத்தியால் குத்திக்கொண்டு கீழேவிழுந்த காக்ஷி சபையிலுள்ள அத்தனைபேர்களின் நெஞ்சை உருக்கிக் கண்ணீரைக் கக்க வைத்துவிட்டது"

என்றதைப் படிக்கும்போது, "ஹா... நந்தினி! நந்தினி." என்று தன்னையறியாதுவாய் விட்டுக் கத்திவிட்டான். அவனால் பொறுக்கவே முடியாத வேதனை செய்துவதைக்கிறது. உண்மையிலேயே நந்தினி குத்திக்கொண்டு இறந்திருப்பாளோ... என்கிற எண்ணம் தோன்றி வதைக்கிறது. தகப்பனார் மீது வரும் கோபம் உச்சநிலையை அடைந்து கண்களில் தீப்பொறி பறக்கிறது. இனி இம்மாதிரி பயந்து கொண்டு வாளாவிருப்பதில் பயனில்லை. எப்படியாவது ஊருக்குச் சென்று அப்பாவிடம் இவைகளைக் காட்டி, சண்டையிட்டு "மரியாதையாய் நீங்கள் அழைத்துவருகிறீர்களா! நான் போய் விடட்டுமா!" என்று பிடிவாதம் செய்து நந்தினியை அழைத்துவருவதே சரி என்று திடமான ஸங்கல்பம் செய்துகொண்டான். அதே நினைவில் உள்ளத்தில் ஏதேதோ யோசனைகள் சுழன்றுப் போராடின.

# அண்டத்தை ஆளும் ஆளுமை

ஜெ.மைதிலி
விவேகானந்தா கலை மற்றும்
அறிவியல் மகளிர் கல்லூரி
திருச்செங்கோடு

பெண்

அன்பின் இருப்பிடம்

ஆற்றல் நிறைந்தவள்

அண்டத்தை ஆளும்

ஆளுமை பெற்றவள்

நதி என்போம்

நிலவென்போம்

மலர் என்போம்

அழகென்ற சொல்லுக்கு

அகராதி இவள் என்போம்

இனியவளே என்போம்

நாம் ரசிக்கத் துவங்கும்

உன் ஆணவத்தையும்

ஆம்

அறியாமை அழித்ததனால்

நீ கொண்ட ஆணவத்தையும்

உன் அகங்காரத்தையும்

அடக்கு முறையை அவிழ்க்க நினைக்கும்

உன் அகங்காரத்தையும்

முன் செருக்கையும்

தீய

வழியினைத் தீண்டாத செருக்கையும்

ஆம் இனியவளே

ஆக்கத்திற்கான அடிக்கல்லலாய்

இவை அனைத்தும்

அமைந்திருப்பதால் ...

# கார்னிலியா சொராப்ஜி

இந்தியாவின் முதல் பெண் வழக்கறிஞரும், சமூகச் சீர்திருத்தத்தின் முன்னோடியும்

லயன் MJF வெங்கடேசன்

நோபல் ஹாட்ஸ் அரிமா சங்கம்

கோவை

*கார்னிலியா சொராப்ஜி (15 நவம்பர் 1866 – 6 ஜூலை 1954)* இந்தியாவின் முதல் பெண் சட்ட முன்னோடிகளில் ஒருவராகவும், இந்தியாவின் முதல் பெண் வழக்கறிஞராகவும், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்ற முதல் இந்தியப் பெண்ணாகவும் அறியப்படுகிறார்.

தனது வாழ்நாள் முழுவதையும் பெண்களின் சட்ட உரிமைகளுக்காக அர்ப்பணித்த அவர், இந்திய நீதித்துறையில் பெண்களுக்கான கதவுகளைத் திறந்த வரலாற்று நாயகி. பல வரலாற்றுச் சாதனைகளை நிகழ்த்திய இவரின் வெற்றிக்குப் பின்னால், அவரது குடும்பப் பின்னணியும் அதிலிருந்து உருவான சமூக சேவை மனப்பான்மையும் ஆணிவேராக அமைந்திருந்தன.

இந்தியாவில் பெண்களின் கல்வி மற்றும் சமூக முன்னேற்றத்தில் கிறித்தவ மிஷனரிகள் ஆற்றிய பங்களிப்பின் ஒரு சிறந்த விளைவாக கார்னிலியா சொராப்ஜியின் வாழ்க்கை விளங்குகிறது.




**பின்னணியும் ஆரம்பக் கல்வியும்:**

1866-ஆம் ஆண்டு மகாராஷ்டிராவின் நாசிக் நகரில் பிறந்த கார்னிலியாவின் தந்தை, ரெவரெண்ட் சொராப்ஜி கர்சேட்ஜி. பார்சி குடும்பத்தில் பிறந்து பின்னர் கிறிஸ்தவ விசுவாசத்தை ஏற்றுக்கொண்ட இவர், ஆங்கிலிக்கன் திருச்சபையின் மிஷனரியாகவும் கல்வியாளராகவும் தொண்டாற்றினார்.

அவரது தாய் ஃபிரான்சினா ஃபோர்டு சொராப்ஜி பெண்களின் கல்வியை ஊக்குவிப்பதில் பெரும் பங்காற்றியவர். புனே பகுதியில் பெண்களுக்காகப் பல பள்ளிகளை நிறுவி, "பெண்களும் கல்வி பெற வேண்டும்" என்ற விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்தினார். பெண்கள் வீட்டை விட்டு வெளியே செல்வதே அரிதாக இருந்த அக்காலத்தில், சமூகச் சேவையையும் கல்வியையும் வலியுறுத்திய அவரது குடும்பச் சூழல், கார்னிலியாவுக்கு மிகச் சிறந்த கல்வியைப் பெற்றுத் தந்தது.

**தடைகளைத் தாண்டிய கல்விப் பயணம்:**

புனே டெக்கான் கல்லூரியில் பயின்ற அவர், 1888-ஆம் ஆண்டு பம்பாய் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற முதல் பெண் என்ற மாபெரும் வரலாற்றைப் படைத்தார்.




அவரது கல்வித்திறனைக் கண்ட இங்கிலாந்து கல்வியாளர்கள் அவருக்கு உதவித்தொகை வழங்கினர். இதன் மூலம் 1889-ஆம் ஆண்டு ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் சாமர்வில் கல்லூரியில்

*(Somerville College)* சட்டம் பயிலச் சென்றார். தேர்வுகளில் வெற்றிகரமாகத் தேர்ச்சி பெற்றபோதும், அக்காலத்தில் பெண்களுக்குப் பட்டம் வழங்கும் விதிமுறை இல்லாததால் உடனடியாக அவருக்குப் பட்டம் வழங்கப்படவில்லை. பல போராட்டங்களுக்குப் பிறகு, சுமார் முப்பது ஆண்டுகள் கழித்து *1922*-ஆம் ஆண்டிலேயே அவருக்கு ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் அதிகாரப்பூர்வமாகப் பட்டத்தை வழங்கியது.




**இந்தியாவின் முதல் பெண் வழக்கறிஞர்:**

*1894*-ல் இந்தியா திரும்பிய கார்னிலியாவுக்குப் பெரிய சவால் காத்திருந்தது. சட்டம் படித்திருந்தாலும், இந்தியாவில் பெண்கள் நீதிமன்றத்தில் வழக்காட அனுமதிக்கப்படாததால் அவரால் வழக்கறிஞராகப் பணியாற்ற முடியவில்லை.

எனினும் அவர் மனம் தளரவில்லை. குறிப்பாக, வெளி ஆண்களிடம் நேரடியாகப் பேசவோ, நீதிமன்றங்களுக்குச் செல்லவோ முடியாத *'பர்தாநஷின்' (Purdahnashin)* பெண்களுக்கு இலவசமாகச் சட்ட ஆலோசனைகளை வழங்கத் தொடங்கினார். சொத்துரிமை, பரம்பரை உரிமை மற்றும் குடும்பப் பிரச்சினைகளில் சிக்கித் தவித்த ஆயிரக்கணக்கான பெண்களுக்கு நீதி கிடைக்க அவர் அயராது பாடுபட்டார்.

**சட்ட உரிமைகளுக்கான நெடிய போராட்டம்:**

*"சட்டத் துறையில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் செயல்பட வேண்டும்"* என்ற கொள்கைக்காக அவர் பல ஆண்டுகள் தொடர்ந்து குரல் கொடுத்தார்.

அவரது இடைவிடாத போராட்டத்தின் விளைவாக, *1923*-ஆம்

ஆண்டு பெண்கள் வழக்கறிஞர்களாகப் பதிவு செய்வதிலிருந்த தடைகள் சட்டப்பூர்வமாக நீக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து *1924*-ல் கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் தன்னை வழக்கறிஞராகப் பதிவு செய்துகொண்ட கார்னிலியா, அதிகாரப்பூர்வமாக *"இந்தியாவின் முதல் பெண் வழக்கறிஞர்"* என்ற வரலாற்றுச் சிறப்பைப் பெற்றார்.

**சேவை மனப்பான்மையும் அர்ப்பணிப்பும்**

*கார்னிலியாவைப் பொறுத்தவரை, அவரது கிறித்தவ விசுவாசம் என்பது வெறும் தனிப்பட்ட நம்பிக்கையாக இல்லாமல், மாபெரும் சமூகப் பொறுப்பாகவே வெளிப்பட்டது. அவரது கடிதங்களிலும் எழுத்துகளிலும்,*




*"பலவீனமானவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்; ஒடுக்கப்பட்ட பெண்களுக்கு உதவுவது இறைவன் அளித்த கடமை"*

*என்ற சிந்தனை ஆழமாகப் பதிந்திருந்தது.*

- *ஆதரவற்ற பெண்கள் மற்றும் விதவைகளின் சொத்துரிமைகளைப் பாதுகாத்தார்.*
- *பெண்களின் கல்வியை அடிமட்டத்திலிருந்து ஊக்குவித்தார்.*
- *பெண்கள் சட்டம் பயிலவும் நீதித்துறையில் தைரியமாக நுழையவும் வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.*

**எழுத்துப் பணி**

சட்டப் பணிகளுக்கு மத்தியிலும் சிறந்த எழுத்தாளராகத் திகழ்ந்த அவர், தனது வாழ்வியல் அனுபவங்களையும் இந்தியப் பெண்களின் நிலையையும் பல நூல்களாகப் பதிவு செய்துள்ளார். அவற்றில் குறிப்பிடத்தக்கவை:

*India Calling* (இந்தியா காலிங்)

*Between the Twilights* (பிட்வீன் தி ட்விலைட்ஸ்)

*Love and Life Behind the Purdah* (லவ் அண்ட் லைஃப் பிஹைண்ட் தி பர்தா)

*Sun-Babies* (சன்-பேபீஸ்)

**வரலாற்றுச் சுவடு**

1929-ஆம் ஆண்டு பணியிலிருந்து ஓய்வு பெற்ற கார்னிலியா, தனது இறுதிக் காலத்தை இங்கிலாந்தில் கழித்தார். 1954 ஜூலை 6 அன்று லண்டனில் இயற்கை எய்தினார். கார்னிலியா சொராப்ஜியின் வாழ்க்கை, கிறித்தவ மிஷனரிகளின் கல்விப் பணி, பெண்கள் முன்னேற்றம் மற்றும் சமூக நீதி ஆகியவை இணைந்தபோது இந்தியாவில் எத்தகைய வரலாற்றுச் சாதனைகள் உருவாக முடியும் என்பதற்கு ஒரு மறுக்க முடியாத சான்றாகத் திகழ்கிறது. அவரது வாழ்க்கை, கல்வி என்பது தனிமனித முன்னேற்றத்திற்கான கருவி மட்டுமல்ல; அது சமூக மாற்றத்திற்கான சக்திவாய்ந்த ஆயுதம் என்பதையும் நிரூபிக்கிறது.

# தாய்ப்பால் தானம்

கவிஞர் மாலதி இராமலிங்கம்,

புதுச்சேரி.

உயிரையே பணயம் வைத்து இன்னொரு உயிரைப் பிரசவிக்கும் பெண்மையே, அந்த உயிரின் வளர்ச்சிக்கும் வாழ்விற்கும் எனத் தனது பெரும்பங்கினை அளிக்கிறது. அத்தகையப் பெண்மை, பிரசவித்த உயிரினை வளர்க்க தன் செங்குருதியையே அமுதமாக்கி வழங்கும் தகவமைப்பை இயற்கை பெண்மையிடமே அளித்துள்ளது. இயற்கையின் படைப்பான பெண்மையில், எத்தனையோ குணங்கள் இருந்தாலும் தாய்மை எனும் உணர்வே மேலோங்கி இருப்பதற்கான எல்லாக் கூறுகளையும் பெற்றிருப்பதே பெண்மையின் சிறப்பியல்பாகும்..

குழந்தை பிறந்த பிறகு, பெண்டிருக்கு, பிட்யூட்டரி சுரப்பி 'ப்ரோலாக்டின்' *(Prolactin)* என்ற இயக்கு நீர் சுரந்து தாய்ப்பால் உற்பத்தி தொடங்குவதாக நாம் அறிவியலில் படிக்கிறோம். இயற்கையின் எண்ணற்ற விந்தையில் இதுவும் ஒன்று ஆகும். அத்துடன், தாயிடமிருந்து பெறும் உணவு, அன்னையின் அரவணைப்பு, பெற்றவளால் அளிக்கப்படும் பாதுகாப்புணர்வு ஆகிய மூன்றையுமே தாய்ப்பால் அளிக்கிறது. இவையாவையும் அன்புடன் சேர்த்து அளிப்பதனால்தான் அதனை

*"அமுதம்" என்கிறார்களோ? இந்த அமுதமானது தாய், சேய் இருவரின் வாழ்நாள் முழுதும் உணர்வு ரீதியானத் தொடர்பாகவும் தொடர்ந்து இருக்கிறது.*

*நல்லதொரு தலைமுறையினை உருவாக்க அன்னையர்கள் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் அளிக்கிறார்கள். அவ்வாறு தாய்ப்பால் அளிப்பதனால் தாய்மார்களுக்கும் பல நன்மைகள் கிடைக்கின்றன. பிரசவ காலத்தில் ஏற்படும் மனச்சோர்வினை அகற்றுதல், கர்ப்பப்பை பலமடையச் செய்தல், சீரான மாதவிடாய்க்கு உதவுதல், இயற்கையான கருத்தடைக்கான வழியாகுதல் என இவை மட்டுமன்றி சில கொடிய நோய்களும் அண்டாமல் பாதுகாத்தல் என தாய்மார்களுக்கு ஆரோக்கியத்திற்கு வழி வகுக்கிறது..*

*இவ்வளவு முக்கியத்துவம் கொண்ட தாய்ப்பாலினை அளிப்பது குறித்தும் விழிப்புணர்வு கொள்ளவும் ஊக்குவிக்கவும் பாதுகாக்கவும் உலகத் தாய்ப்பால் வாரம், ஒவ்வொரு வருடமும் ஆகஸ்டு மாதம் முதல் வாரம் (1 முதல் 7 நாட்கள் வரை) கொண்டாடப்படுகிறது. அதனையொட்டி தாய்ப்பால் தானத்தைப் பற்றிய விழிப்புணர்விற்காக இப்பகுதி எழுத்தாக்கம் பெறுகிறது.*

*நற்பேறுகளில் ஒன்றான மக்கட்பேறு என்பது நமக்குக் கிட்டுவதற்கு ஒவ்வொரு பெண்ணும் எத்தனையோ இன்னல்களைத் தாண்டி, வலியோடும் வாதையோடும் போராடியே பேறுகாலத்தில் பச்சிளம் குழந்தையைப் பெற்றெடுக்க வேண்ணணியுள்ளது. பேறுகாலத்தில் மட்டுமன்றி, எதிர்பாரா விபத்தினாலும் சேயானது வெளியுலகம் காண்பதற்குள் தாயானவள்*

*இறந்துபோவதற்கான வாய்ப்போ அல்லது பலத்த காயங்களோடு உயிரைப் பிடித்திருக்கும் சூழலோ அல்லது நோய்வாய்ப்படலோ என வெவ்வேறு வகையில் தாயானவளின் தாய்ப்பால் கிடைக்காது போவதற்கான நிலையும் அமைகிறது. அவ்வாறானப் பொழுதுகளில் அந்தப் பச்சிளம் குழவிக்கு உயிரமுதம் எனப்படும்*

தாய்ப்பால் இல்லையேல், அதன் தேவையைத் தீர்ப்பது எவ்வாறு? தன் தாய்ப்பாலையே தானமாகக் கொடுக்கும் அளவிற்கு உதவும் பெண்மையினாலேயே இதற்கானத் தீர்வு கிடைக்கிறது.

ஆம். தன்னுடையக் குழந்தைக்குக் கொடுத்தது போக மற்ற குழந்தைகளுக்கும் தாய்ப்பாலைத் தானமாகக் கொடுத்து உதவும் இளந்தாய்மார்கள் ஆற்றும் இந்தச் செயல் புதிதல்ல. அக்காலங்களில், கூட்டுக் குடும்ப வாழ்வில் இருந்த பெண்கள் அக் குடும்பத்தில் உள்ள மற்ற குழந்தைகளுக்கும் தனது குழந்தைக்கு அளிப்பது போலவே கொடுத்திருக்கிறார்கள் என்ற உண்மைமை, ஒருசில தலைமுறையினருக்கு முன்பிருந்தோர் அறிந்ததுதான். அது போல இன்றைய நவீன வசதிகளினால் தாய்ப்பாலைப் பெற்று, தரமறிந்து, ஏற்றுக்கொண்டு, பதப்படுத்தி, பத்திரப்படுத்தி, தேவையான நேரத்தில் அளித்து எத்தனையோ குழந்தைகள் காப்பாற்றப்படுகின்றனர்..

இப்போதையத் தலைமுறையினருக்கு இது போன்ற நவீன முறைகள் பேருதவியாக இருக்கின்றன. ஆனால், இது போன்று தானமளித்திட இன்னும் பெண்கள் முன்வர வேண்டியுள்ளது. அதற்கான முன்னுதாரணமாக புதுவையைச் சேர்ந்த திருமதி. வினோதினியைக் காணலாம். தனது முதல் மகவைப் பெற்றெடுத்து, தன் குழந்தைக்கு மட்டுமன்றி தனது தாய்ப்பாலைத் தானமும் அளித்துள்ளார் இவர். அவரின் அனுபவங்களை இங்கே பகிர்கிறோம்.

“தாய்மார்கள் அவர்களின் குழந்தைக்குத் தேவையான அளவு ஊட்டுவதும், இது போன்ற தானம் செய்வதும் அவர்களுக்கு தாய்ப்பால் சுரக்கும் தன்மையை இன்னும் அதிகரிக்கவே செய்கிறது. மேலும், தாய்ப்பால் தானம் செய்வதால், குழந்தைக்குப் பால் போதாமலோ அல்லது தாயிடம் குறையவோ வாய்ப்பில்லை.

அதிக பால் தானம் செய்வதால் தாய்க்கு பால் சுரப்பு அதிகரிக்கும்'' என்றார் திருமதி வினோதினி.

மேலும், ''தாய்ப்பால் தானம் தொடர்பாக தாய்மார்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் அதிக விழிப்புணர்வு தேவையாக உள்ளது. அதனால், தாய்ப்பால் தானத்திற்குத் தாய்மார்கள் மட்டுமன்றி, அவர்களின் குடும்பத்தாரும் ஒத்துழைத்து, இந்த நற்செயலுக்கு விழிப்புணர்வு அளிக்கும் வகையில் இருந்தால் வரும் தலைமுறையினரின் ஆரோக்கியம் மேம்படும். மனதளவில் நமக்கு திருப்தியும் கிடைக்கும்.

அத்துடன், அரசு மருத்துவமனைகளில் இதற்கான மையமும் உள்ளது. அதன் மூலம், தாய்ப்பால் தானம் தருபவர்கள் பின்பற்றவேண்டிய வழிமுறைகள் யாவும் ஆலோசனையின் பேரில் அறியலாம். எச்.ஐ.வி அல்லது ஹெபடைடிஸ் பி இல்லாத அனைத்து ஆரோக்கியமான தாய்மார்களும் தானம் செய்யலாம்'' என்றார்.

தொடர்ந்து, ''விலைமதிப்பில்லா உயிரமுதத்தினை புதுச்சேரியிலுள்ள ஜிப்மர் மருத்துவமனையில் ''ஏடிஎம்'' எனும் அமுதம் தாய்ப்பால் மையத்தில், நான் தானம் செய்துள்ளேன். அதுபோல, அனைத்து ஆரோக்கியமானத் தாய்மார்களும் தானம் செய்யலாம். தற்போது அமுதம் தாய்ப்பால் மையத்தின் சேவை ஜிப்மரில் பிரசவிக்கும் குழந்தைகளுக்கு மட்டுமே கிடைக்கிறது'' என்றும் கூறினார்.

ஊட்டச் சத்து, உயிர்ச் சத்து மற்றும் புரதச் சத்து மிகுந்துள்ள தாய்ப்பால் குழந்தைகளை நோயண்டாது காக்கும் தடுப்பு மருந்தாகவும் மற்றும் தன்னிகரற்ற உணவாகவும் உள்ளதால், பாதிக்கப்பட்டக் குழந்தைகளைக் காப்பாற்ற, தாய்ப்பாலைத் தந்து உதவிட விழையுமாறு இளந்தாய்மார்களுக்கெனத் தன் அனுபவத்தைக் கூறி, விழிப்புணர்வு வேண்டுகோளை முன் வைத்துள்ளார் திருமதி வினோதினி.

மழலைக்குத் தாய்ப்பாலை மனமுவந்து தானம் செய்வோம்!
அழுகின்ற குழந்தைக்கு உயிரமுதத்தை அளித்துக் காப்போம்!

# சக்தி விருதுகள்

சக்தி
பெண்ணிதழ்
சக்தி சாதனையாளர் விருது
← ஜூலை 2026 →
பேரா. முனைவர் மரிய தெரேசா
அவர்களுக்கு வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது


சக்தி
பெண்ணிதழ்
சக்தி சாதனையாளர் விருது
← ஜூலை 2026 →
ஆராய்ச்சியாளர் தேமொழி
அவர்களுக்கு வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது

சக்தி
பெண்ணிதழ்
சக்தி சாதனையாளர் விருது
← ஜூலை 2026 →
இயக்குனர் மிருத்திகா சந்தோஷினி
அவர்களுக்கு வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது

சக்தி
பெண்ணிதழ்
சக்தி சாதனையாளர் விருது
← ஜூலை 2026 →
முனைவர் சந்திரிகா சுப்ரமணியன்
வழக்கறிஞர், கவிஞர், எழுத்தாளர்
அவர்களுக்கு வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது

சக்தி
பெண்ணிதழ்
சக்தி சாதனையாளர் விருது
← ஜூலை 2026 →
டாக்டர் மேனகா நரேஷ்
கவிஞர், மொழிபெயர்ப்பாளர், எழுத்தாளர்
அவர்களுக்கு வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது
பதிப்பாளர்
இதழாசிரியர்

சக்தி
பெண்ணிதழ்
சக்தி சாதனையாளர் விருது
← ஜூலை 2026 →
கவிஞர் சம்சுல் ஹுதா பானு
எழுத்தாளர், தொழில் முனைவோர்
அவர்களுக்கு வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது
பதிப்பாளர்
இதழாசிரியர்

சக்தி
பெண்ணிதழ்
எங்கெங்கு காணினும் சக்தியடா
சக்தி விருது
← ஜூலை 2026 →
கவிஞர் வித்யா மனோகர்
அவர்களுக்கு வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது
பதிப்பாளர்
இதழாசிரியர்

சக்தி
பெண்ணிதழ்
எங்கெங்கு காணினும் சக்தியடா
சக்தி விருது
← ஜூலை 2026 →
முனைவர் இல. ஜெயந்தி
அவர்களுக்கு வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது
பதிப்பாளர்
இதழாசிரியர்

சக்தி
பெண்ணிதழ்
எங்கெங்கு காணினும் சக்தியடா
சக்தி விருது
— ஜூலை 2026 —
எழுத்தாளர் ரம்யா நடராஜன்
அவர்களுக்கு வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது
பதிப்பாளர்
இதழாசிரியர்

சக்தி
பெண்ணிதழ்
எங்கெங்கு காணினும் சக்தியடா
சக்தி விருது
— ஜூலை 2026 —
எழுத்தாளர் மாலதி இராமலிங்கம்
அவர்களுக்கு வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது
பதிப்பாளர்
இதழாசிரியர்

சக்தி
பெண்ணிதழ்
எங்கெங்கு காணினும் சக்தியடா
சக்தி விருது
— ஜூலை 2026 —
முனைவர் சைலஜா சக்தி
அவர்களுக்கு வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது
பதிப்பாளர்
இதழாசிரியர்

சக்தி
பெண்ணிதழ்
எங்கெங்கு காணினும் சக்தியடா
சக்தி விருது
— ஜூலை 2026 —
கவிஞர் இ. சக்தி சுரேஷ்
அவர்களுக்கு வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது
பதிப்பாளர்
இதழாசிரியர்

சக்தி
பெண்ணிதழ்
எங்கெங்கு காணினும் சக்தியடா
சக்தி விருது
ஜூலை 2026
பேரா. முனைவர் சாந்தினி பீ
வரலாற்று ஆராய்ச்சியாளர்
அவர்களுக்கு வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது
பதிப்பாளர்
இதழாசிரியர்

சக்தி
பெண்ணிதழ்
இளம் சக்தி விருது
ஜூலை 2026
செல்வி பு. மீனாட்சி
அவர்களைப் பாராட்டி இளம் சக்தி விருது வழங்கப்படுகிறது
பதிப்பாளர்
இதழாசிரியர்

சக்தி
பெண்ணிதழ்
இளம் சக்தி விருது
ஜூலை 2026
செல்வி ட. இமயா
அவர்களைப் பாராட்டி இளம் சக்தி விருது வழங்கப்படுகிறது
பதிப்பாளர்
இதழாசிரியர்

சக்தி
பெண்ணிதழ்
இளம் சக்தி விருது
ஜூலை 2026
சக்தி பெண்கள் நடத்திய கதை/கவிதை/கட்டுரை போட்டிகளில்
கலந்து கொண்டு சிறந்த படைப்புகள் வழங்கிய
செல்வி புஷ்பராணி
அவர்களைப் பாராட்டி இளம் சக்தி விருது வழங்கப்படுகிறது
பதிப்பாளர்
இதழாசிரியர்

சக்தி
பெண்ணிதழ்
இளம் சக்தி விருது
ஜூலை 2026
சக்தி பெண்கள் நடத்திய கதை/கவிதை/கட்டுரை போட்டிகளில்
கலந்து கொண்டு சிறந்த படைப்புகள் வழங்கிய
செல்வி ஜெ. மைதிலி
அவர்களைப் பாராட்டி இளம் சக்தி விருது வழங்கப்படுகிறது
பதிப்பாளர்
இதழாசிரியர்

சக்தி
பெண்ணிதழ்
இளம் சக்தி விருது
ஜூலை 2026
சக்தி பெண்கள் நடத்திய கதை/கவிதை/கட்டுரை போட்டிகளில்
கலந்து கொண்டு சிறந்த படைப்புகள் வழங்கிய
செல்வி P.M அன்னுல் அர்சியா
அவர்களைப் பாராட்டி இளம் சக்தி விருது வழங்கப்படுகிறது
பதிப்பாளர்
இதழாசிரியர்

சக்தி
பெண்ணிதழ்
இளம் சக்தி விருது
ஜூலை 2026
சக்தி பெண்கள் நடத்திய கதை/கவிதை/கட்டுரை போட்டிகளில்
கலந்து கொண்டு சிறந்த படைப்புகள் வழங்கிய
செல்வி மு. ஜன்னத்துல் பிரதவுஸ்
அவர்களைப் பாராட்டி இளம் சக்தி விருது வழங்கப்படுகிறது
பதிப்பாளர்
இதழாசிரியர்

# குரல்களின் சிற்பி

சக்தி தமிழணங்கு ஆசிரியர்,
முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

பழந்தமிழ்ப் பாடல்களையும்
புத்திலக்கியச் சுடரையும் ஏந்தி
சொற்களாலும் மையாலும்
ஒரு பாலம் அமைத்தேன்,

என் ஆசைச் சுமைகளின் கனப்பில்
எழுதத் தவிக்கும் ஆன்மாக்களால்
மணிமாலை கோர்த்தேன்

பெண்ணிதழ் பிறந்தது
இதழ் இதழாய் மலர்ந்தது
உரத்த குரல்களை
ஓங்கிய எழுத்துக்களைச்
சங்கிலி கண்ணிகளாய் இணைத்தேன்
மகளிர் மனக்குகையில்
புத்தொளி பாய்ச்சினேன்

என் நேச நெஞ்சங்கள்
என் இதழை
எடுத்து பார்க்கவில்லை
பெண்ணிதழைப்
படித்து சுவைக்கவில்லை
புகழ்ச்சியுமில்லை
இகழ்ச்சியுமில்லை

வைராக்கியம் துளிர்விட
இதழ் இதழாய்

இரண்டு ஆண்டுகள்
விரிந்து மலர்ந்து
மணம் பரப்பிற்று.

எழுதுவோரைத் தேடிக் களைத்தேன்
தேடிக் களித்தேன்

வளைக் கைகள் பிடித்த பேனாவுக்கு
இவ்விருது சிறு துளி மை
அவர்தம் கருத்துச் சுடருக்கு
இவ்விருது
சிறு துளி நெய்

இந்த அரங்கம் இசைக்கும்
இதய ராகம்
என் செவியில் இனிக்கிறது
இவ்விழா
நம் உழைப்பின் விளைச்சல்
படைப்பாற்றலின் அறுவடை

நம் சிந்தனை
நம் குடும்பம்
நம் பெண்மை
நம் பகிர்வு
நம் உழைப்பு

சக்திகள் மேலும்
மலரட்டும்
சந்ததிகள் நாளை படிக்கட்டும்.

# பெண்ணும் எழுத்தும்

## உள்ளம் உருகுதய்யா

கவிஞர் மாலதி இராமலிங்கம்,
புதுச்சேரி

*மதிப்பிற்குரியீர்,*

*வணக்கம்!*

*"சக்தி" இதழுக்காக, ஒரு நூல் விமர்சனத்தை அனுப்புகிறேன்.*

- ***தலைப்பு**: உள்ளம் உருகுதய்யா*
- ***வகைமை**: கவிதை*
- ***பக்கங்கள்**: 56*
- ***விலை:** 150/-*
- ***வெளியீடு:** ஒருதுளிக் கவிதை*

*பேரன்புப் பெருவெளி என்பது என்ன செய்யும்? அனைவரையும் கொண்டாடும்; அனைத்தையும் கொண்டாடும்; அணைத்துக் கொண்டாடும்! அவ்வழியே தன் "கண்" அவரின் அன்பில் திளைத்து, அவரைக் கொண்டாடியுள்ளார் நம் கவிஞர் மஞ்சு. தன் இணையருடனான வாழ்வில், தன்னுடைய சிறு செயல்கள் சிலவற்றைக் குறையென இருந்தாலும் குறையாகவே பட்டியலிட்டுக் கொள்கிறார்; அவற்றை ஒப்புக் கொண்டு, அவற்றின் மூலம் தன்னைக் கைக்குட்டையாகவே ஆக்கி ஒப்புக் கொடுக்கிறார். கணவரின் பேரன்புப் பெருவெளியினை வியந்து பார்க்கிறார். கவிதையான வாழ்விதில் காதலை நிரப்பிக் கொண்டிருக்கும் அவரின் எண்ணங்களில் தன்னைக் கழித்துக் கொண்டு, அவரன்பை, தான் ஏந்தி, ஏத்தி, எழுத்தாக்கி உள்ளார்.*

*25 ஆண்டுகளில் இந்த உலகில், என்னென்னவோ மாறினாலும் கணவரின் அன்பை, அவரின் தாய்மையை, இன்னும் பலவாறாக இருக்கும் மொத்த அன்பை, தன் அன்பினால், உணர்ந்து, நெகிழ்ந்து, இன்னும் சொல்வதானால் போற்றியுள்ளார். அதன் வெளிப்பாட்டில் விளைந்த கவிதைகள் 25. இக்கவிதைகள், கற்பனையில் விளைந்தவை அல்ல; கண்ணில் நிறைந்தவை; காட்சியாகி நெஞ்சில் நிறைந்தவையே! காலங்கள் கூடக் கூட கனியாகும் நெஞ்சம் காதலின் உச்சம்! அப்படியாகத்தான், இந்த "முருகன்" என்ற ஆண் தேவதையை, "மஞ்சு" என்ற பெண் தேவதையைப் பார்க்கிறோம். ஆணின் கண்ணியத்தை அவர்தம் கண் உணர்த்தும்; அகிம்சைத்தனம் உணர்த்தும்; தன்னலம் மறந்த செய்கை உணர்த்தும்; அவற்றையும் தன் இணையிடம் கண்டு, தன் வாழ்வெனும் ஊஞ்சல் சங்கிலியின் எழுத்துக் கண்ணிகளால் சேர்த்துக் கோர்த்துள்ள அழகை கவிஞர் மஞ்சுவின் நூல் சொல்கிறது.*

*ஒரு தாய், தன் தாலாட்டில் மொத்த அன்பையும் காட்டுவாள். இங்கு இருவருமே இணைந்த தாயுமானவனைக் காணலாம். அது போல வாசகர்கள் உணர, இதோ சில வரிகள்:*

*"..... ஆடிக்குக் கூட*
*அம்மா வீடு போகாதவள் நான்*
*.....*
*நீயும் ஒரு தனி மனிதன்*
*என்ற உணர்வையே*
*உன் மரபியல் மூலக் கூறுகளிலிருந்து*
*மாற்றியமைத்தவள்தான் நான்!*

*இருந்தாலும் இதற்காக*
*மன்னிப்பு கேட்பேன் என்று மட்டும்*
*மனதிலும் எண்ணாதே*
*ம்... மடி கொடு*
*நான் சாய வேண்டும்!" - 19.*

*ஒட்டுப்புல் எனும் கவிதையின் சில வரிகள்! இதில் வரும் "ம்" பற்றி வேறு ஒரு கவிதையும் உண்டு. அதைப் பற்றி அறிய நூலை வாசியுங்கள்.*

இன்னொன்றில்,

"...

உயர்ந்ததில் உயர்ந்தது

உன் உயர் மனம் ஒன்றுதான்..." – இந் நூலின் தலைப்பினைக் கொண்ட கவிதையில்தான் இப்படி உள்ளம் உருகியுள்ளார் கவிஞர்.

அனைத்தையும் எடுத்தெழுதினால், வாசகர்களுக்கான இடத்தை ஆக்கிரமிப்பு செய்ததாகிவிடும். அதனால், இந்தக் "காதல் போற்றி"யைப் படியுங்கள் வாசகர்களே! நம்முள் இன்னும் காதல் பெருகும். பெருகச் செய்யும் குணமே அன்பு! அதுவே அன்பின் அறம்!

அணிந்துரை அளித்த திருமிகு கவிஜி, வாழ்த்துரை அளித்த கவிஞர் பழனிபாரதி, திருமிகு இரம்யா நடராஜன், என்னுரையுடன் நம் கவிஞர் மஞ்சு என்று தோரண வாயில்களோடு, ஒரு துளிக்கவிதை, புதுச்சேரி வெளியிட்ட நூல் கைக்கு அடக்கமாக நம் மனத்துள் இடம் பிடிப்பதாக உணர வைக்கும்!

பேரன்பும் பேரின்பமுமாய் பெருவாழ்வின் வட்டம் விரியட்டும்!

நல்வாழ்த்துகள் கவிஞர் மஞ்சு!

வாய்ப்பளித்தமைக்கு நன்றி!

நெஞ்சார்ந்த வணக்கங்களுடன்,

கவிஞர் மாலதி இராமலிங்கம்,

புதுச்சேரி.

நாள்: 24-07-2026

**சக்தி| ஆகஸ்ட்|2026**

# புதிய வெளியீடுகள்











விலை ரூ120

சந்திரோதயம் பதிப்பகம், மதுரை -18. போன் 7010997639